# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 32

சுடர் 32 | கீற்று 39 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 20, புதன்கிழமை 04.01.2017




# கட்டளை அதிகாரிகளுக்கு தண்டனை அவசியம்

*வலியுறுத்துகிறார் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன்*

கொழும்பு, ஜனவரி 4

போரின் போது கட்டளை வழங்கியவர்களுக்கு எதிராகத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள்தான் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் என்று குறிப்பிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், நீதியைத்தான் கேட்கின்றோமே தவிர, பழி வாங்குவதற்கு முயற்சிக்கவில்லை என்றும் தெரிவித்தார்.
நல்லிணக்கப் பொறிமுறை குறித்த கலந்தாலோ >> 29



*போர்க்குற்ற விசாரணைக்கு பன்னாட்டு நீதிமன்றைக் கோரும்*

## மக்கள் கருத்தறிவு அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு

கொழும்பு, ஜன. 4

போர்க்குற்ற விசாரணைக்கு பன்னாட்டு நீதிமன்றைக் கோரும் நல்லிணக்கப் பொறிமுறை குறித்த கலந்தாலோசனைச் செயலணியின் மக்கள் கருத்து அறியும் அறிக்கை கையேற்றும் நிகழ்வில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுப் பங்கேற்கவில்லை. ஜனாதிபதிக்குச் சுகவீனம் என்று இறுதி >> 29

## சிவில் சமூகத்தின் அறிக்கையே தவிர அரசின் அறிக்கையல்ல

*இப்படிச் சொல்கிறார் சந்திரிகா*

கொழும்பு, ஜன. 4

நல்லிணக்கப் பொறிமுறை குறித்த கலந்தாலோசனைச் செயலணியின் மக்கள் கருத்து அறியும் அறிக்கை பன்னாட்டுப் பொறிமுறைக்குப் பரிந்துரை செய்துள்ள >> 04

## இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது மைத்திரியின் யாழ். வருகை

கொழும்பு, ஜன. 4

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் யாழ். வருகை கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. அவரது நிகழ்வுக்கான ஏற்பாடுகள் முழுமை பெற்றிருந்த நிலையில், நேற்று முன்னிரவு திடீரென இந்தத் தகவல் உரிய தரப்புகளுக்கு ஜனாதிபதி செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
மூன்று இடங்களில் நடைபெறும் நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி >> 04

## வடக்கு பதில் முதல்வராக ஐங்கரநேசன்

யாழ்ப்பாணம், ஜன. 4
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளமையினால், >> 29

## முஸ்லிம்கள் தாக்கப்பட்டதன் பின்னணியில் மகிந்த

*பொது பலசேனா குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், ஜன. 4
அளுத்கம மற்றும் பிற இடங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதல்களின் பின்னணியில் மகிந்த ராஜபக்சவே >> 29

## வடக்கு – கிழக்கு விகாரைகளுக்கு சிறப்புத் திட்டம்

*முப்படையினரின் பங்களிப்புடன்*

யாழ்ப்பாணம், ஜன. 4
மூன்று தசாப்தகாலப் போரின் காரணமாக அழிவடைந் >> 29

## அழிக்கப்பட்ட ஆலய வளவில் 26 வருடங்களின் பின் திருப்பலி

**கண்ணீர் மல்கப் பங்கேற்றனர் ஊறணி மக்கள்**





யாழ்ப்பாணம், ஜன. 4
1990 ஜூன் 15இல் இடம்பெற்ற இடப் பெயர்வின் பின் 26 வருடங்க ளாக இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த ஊறணி புனித அந்தோனியார் ஆலயம் முற்றாக இடித்தழிக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டின் >> 04

## எம்.பியாகிறார் ஹசனலி

யாழ்ப்பாணம், ஜன. 4
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் எம். ரி.ஹசனலிக்குத் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்க வுள்ளதாகக் கட்சியின் தலைவர் ஹக்கீம் தெரிவித்தார்.
முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர் பீடக் கூட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு கொழும்பிலுள்ள கட்சியின் தலைமையகம் தாருஸ்ஸ >> 29

## அமெரிக்காவிடம் 1 பில்லியன் டொலரை பெற பிரதமர் முயற்சி

*கூறுகிறது பொது எதிரணி*

யாழ்ப்பாணம், ஜன. 4
அமெரிக்காவிடம் ஒரு பில்லியன் டொலர் கடனை அதிக வட்டி வீதத்தில் பெற்றுக்கொள்வதற்கு, மத்திய வங்கியின் பிணை முறிகள் மோசடியுடன் தொடர்புடையவர்கள் மூலமா >> 29

## இறுதிப்போரில் சரணடைந்தோர் குறித்து எதுவுமே எனக்குத் தெரியாது

முல்லைத்தீவு நீதிமன்றில் நேற்று கைவிரித்தார் முன்னாள் படை அதிகாரி

முல்லைத்தீவு, ஜன. 4
வடக்கு - கிழக்கில், போரின் இறுதியில் சரணடைந்து காணாமற்போனவர்கள் தொடர்பில் எதுவும் தெரியாது.
இவ்வாறு 58ஆவது டிவிசன் கட்டளை முன்னாள் அதிகாரி மேஜர் >> 04

முச்சந்தி முரளி



ஐயாவுக்கு ஏதும் பாதுகாப்பு அச்சுறுத்தலோ...

## குழப்பம் விளைவித்த ராணுவத்தினர் கைது

*விசாரணைகள் தொடர்வதாக ராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன. 4
இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டமைக்கு எதிராகக் குழப்பம் விளைவித்த இராணுவத்தினருக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொசான் செனவிரத்ன தெரிவித்தார்.
அநுராதபுர மாவட்டத்தில் >> 29

## 2017 இல் கிளிநொச்சி வறட்சியான மாவட்டம்

**பிரகடனம் செய்யுமாறு நேற்று விவசாய சம்மேளனங்கள் கோரிக்கை**

யாழ்ப்பாணம், ஜன. 4
கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் வயல்கள் அழிவடைவதன் >> 29








# ஜனாதிபதி மரம் நட பண்ணையில் ஏற்பாடு

யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பண்ணைச் சுற்றுவட்டத்துக்கு அருகில் மரம் நடுகை செய்யவுள்ளார். பண்ணைச் சுற்று வட்டத்திலிருந்து தீவகம் நோக்கிச் செல்லும் முதன்மைச் சாலையின் அருகில், கடலோரமாக 33 புங்கை மரங்கள் நடப்படவுள்ளன. இதற்கான தயார்படுத்தல்களில் இராணுவத்தினர் நேற்று ஈடுபட்டனர். (த-5-10)

# மகிந்தவின் தோல்விக்கு பீரிஸே முக்கிய காரணம்

*அமைச்சர் சந்திம கூறுகிறார்*

மகிந்த அரசின் வெளிநாட்டுக் கொள்கைகளே மகிந்தவின் தோல்விக்கு முக்கிய காரணம். தற்போதைய தேசிய அரசை 2020 வரை எவராலும் அசைக்க முடியாது. இவ்வாறு பெற்றோலிய வள அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

பெற்றோலியவள அமைச்சில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

திருகோணமலைத் துறைமுகத்தைத் தற்போதைய அரசுதான் இந்தியாவுக்குத் தாரை வார்த்து கொடுத்துள்ளதாகப் பொய்யான பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தத் துறைமுகம் 2002 ஆம் ஆண்டே இந்தியாவுக்குக் கையளிக்கப்பட்டுவிட்டது. திருகோணமலைத் துறைமுகத்தை இந்தியாவுக்குத் தாரைவார்த்தது நாங்கள் அல்ல. 2002ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் மூலமாகவே திருகோணமலை இந்தியாவின் வசமானது.அதன் பின்னர் ஆட்சி செய்த அரசுகள் குறித்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு செயற்பட்டதன் விளைவே இந்த நிலைக்குக் காரணம்.

தற்போது நூற்றுக்கு 50 வீதத்தைப் பெற்றுக்கொள்ளவே நாங்கள் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றோம். ஒப்பந்தத்தின் பிரகாரம் திருகோணமலைத் துறைமுகத்தின் எண்ணெய்த் தாங்கிகள் அனைத்தும் இந்தியாவின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.

மகிந்த அரசின் தோல்விக்கு அதன் வெளிவிவகார அமைச்சராகச் செயற்பட்ட ஜீ.எல் பீரிஸே முக்கிய காரணம். அவரின் கொள்கையில் பத்து வருடங்களாகப் பின்பற்றப்பட்ட வெளிநாட்டுக்கொள்கைகள் அனைத்தும் இலங்கையைச் சர்வதேசத்திடமிருந்து தனிமைப்படுத்தும் முகமாகவே அமைந்திருந்தன. எனவே பீரிஸின் கருத்துக்களைப் பொருட்படுத்தத் தேவையில்லை. 2001 ஆம் ஆண்டு ஐ.தே.கவில் இருந்து விலகி சு.கவில் இணைந்து எம்மைத் தோற்கடித்ததும் அவர்தான்–என்றார். (த-4)

# இந்த வாரத்தில் மழை பெய்தால் 70 வீத நெற்பயிர் தப்பிப் பிழைக்கும்

## இல்லையேல் ஏனைய பயிர்களும் வடக்கில் பாதிப்படையும் அபாய நிலை

அச்சுவேலி, ஜன.4

யாழ். மாவட்டத்தில் மாரிமழை உரிய காலத்தில் பெய்யாமையால் நெல் விளைச்சலின் அளவு குறைவாகவே இருக்கும். இந்த வாரம் மழை பெய்யுமானால் 70 வீதமான நெற்பயிர்ச் செய்கையைப் பாதுகாக்கலாம். மழை தொடர்ந்து பெய்யாவிடில் நெற்பயிர்ச்செய்கை மட்டுமல்ல ஏனைய பயிர்ச்செய்கை நடவடிக்கைகளிலும் தாக்கம் ஏற்படும் என யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்தார்.

யாழ். மாவட்ட நெற்பயிர்ச் செய்கையின் சமகால நிலைப்பாடு தொடர்பாகக் கூறுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

மாரி மழை உரிய அளவில் உரிய வேளையில் பெய்யாமையால் யாழ். மாவட்ட நெற்பயிர்ச்செய்கை பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. நெற்பயிர் வளரும் பருவத்தில் வயல் நிலங்களில் நீர் தேங்கி நிற்கவேண்டும். அந்த நிலை இந்த வருடம் இல்லாமையாலும் வறட்சியான நிலை காணப்பட்டமையினாலும் நெல்விளைச்சலின் வீத அளவு குறை வடையலாம்.

மாரிமழை இந்த வாரமளவில் பெய்யுமானால் 70 வீதத்துக்குக் குறையாத நெற்பயிர்ச் செய்கையைப் பாதுகாக்கலாம். மழைபெய்யாவிடில் நெற்பயிர்ச் செய்கையில் பாதிப்பின் அளவு கூடலாம். மழையில்லாத சூழல் நெற்பயிர்ச் செய்கையில் மட்டுமல்ல ஏனைய பயிர்ச் செய்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது–என்றார். (த-11)

# ஆசிரியர் ஆட்சேர்ப்புக்கு வடக்கில் நேர்முகத் தேர்வு

*இந்த மாதம் 16, 17, 18 ஆம் திகதிகளில்*

யாழ்ப்பாணம், ஜன. 4

வடக்கு மாகாணப் பட்டதாரிகளை ஆசிரிய சேவைக்குள் உள்ளீர்ப்பதற்காக இடம்பெற்ற போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இந்த மாதம் 16ஆம், 17ஆம், 18 ஆம் திகதிகளில் இடம்பெறும் என மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் 2016ஆம் ஆண்டில் 1000 ஆசிரியர்களை நியமிக்க அனுமதி கிடைத்தது. அதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டவேளை அதிக பட்டதாரிகள் விண்ணப்பித்தனர். இதனால் குறித்த பட்டதாரிகளுக்குப் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது. அதன் பெறுபேறும் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த பரீட்சைக்கு 2 ஆயிரத்து 452பேர் தோற்றியிருந்தனர். இவர்களுக்கு நடந்த இரு பாடப் பரீட்சைகளிலும் 40 புள்ளிகள் என்ற அடிப்படையில் 80 புள்ளிகளுக்கு மேல் பெற்ற அனைவரும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். 80 புள்ளிகளுக்கு மேல் 779 பேர் மட்டுமே பெற்றனர். அவர்களுக்கான நேர்முகத் தேர்வு இந்த மாதம் 16ஆம், 17ஆம் , 18ஆம் திகதிகளில் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நேர்முகத் தேர்வின் பின்னர் தகுதியான அனைவருக்கும் பெப்ரவரி மாதம் முதல் வாரத்திலேயே நியமனங்களை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதில் அதிகமானோர் தமிழ், வரலாறு , விவசாயம், உளவியல், தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பாடங்களுக்கான ஆசிரியர்களாக நியமனம் பெறுவர்–என்றார். (த-10)

# தேராவில் தமிழ் வித்தியாலயம் முன்பாக மக்கள் ஆர்ப்பாட்டம்

*புதிய அதிபர் வெளியேற்றப்பட்டதைக் கண்டித்து*

முல்லைத்தீவு, ஜன. 4

முல்லைத்தீவு தேராவில் தமிழ் வித்தியாலயத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட அதிபர் பாடசாலையிலிருந்து வெளியேற்றப்பட்டமையைக் கண்டித்து மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு தேராவில் தமிழ் வித்தியாலயத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட அதிபர் கடமைகளைப் பொறுப்பேற்பதற்காக நேற்று முன்தினம் பாடசாலைக்கு சென்றுள்ளார். இதன்போது அங்கு கடமையில் இருந்த பழைய அதிபர் கடமைகளைக் கையளிக்காதமையால் புதிய அதிபர் திரும்பிச் சென்றுவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

புதிய அதிபர் பாடசாலைக்குள் அனுமதிக்கப்படாமையைக் கேள்வியுற்ற பெற்றோர்கள் கொதித்தெழுந்தனர்.

புதிய அதிபரிடம் பொறுப்புக்களை ஒப்படைக்கவேண்டும். அவரே பாடசாலைக்கு அதிபாராகக் கடமை புரிய வேண்டும் எனக் கோரி அவர்கள் நேற்றுக் காலை பாடசாலைக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்துக்கு சென்ற முல்லைத்தீவு கல்வி வலய உத்தியோகத்தர்கள், புதிய அதிபர் தனது கடமைகளை நாளை (இன்று) ஏற்றுக்கொள்வார் என உறுதிமொழி அளித்ததைத் தொடர்ந்து பெற்றோர்கள் ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டனர். (த-7)

# 2016இல் யாழ்ப்பாணத்தில் அதிக காசநோயாளர்

## கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி தகவல்

இளைஞர்கள், முதியவர்கள் மத்தியில் புகைத்தல், மதுபானங்களின் பாவனைகள் அதிகரித்து வருவதால் 2015 ஆம் ஆண்டை விட 2016ஆம் ஆண்டு கூடுதலான காசநோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்டக் காசநோய்க் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி ஆர்.மணிவாசகன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

2010ஆம் ஆண்டு 420 நோயாளர்களும், 2011ஆம் ஆண்டு 351 நோயாளர்களும், 2012இல் 319 நோயாளர்களும், 2013இல் 261நோயாளர்களும், 2014 இல் 256 நோயாளர்களும், 2015 இல் 274 நோயாளர்களும் இனம் காணப்பட்டனர். 2010ஆம் ஆண்டில் இனங்காணப்பட்ட காச நோயாளர்களைவிட அடுத்தடுத்த வருடங்களில் குறைவாகக் காணப்பட்டாலும் 2015 ஆம் ஆண்டும், 2016ஆம் ஆண்டும் அது சடுதியாக அதிகரித்துள்ளது.

கடந்த வருடத்தில் சளிப் பரிசோதனையில் கிருமி உள்ள நோயாளர்கள், சளிப் பரிசோதனையில் கிருமி கண்டுபிடிக்கப்படாத நோயாளர்கள், சுவாசப்பை தவிர்ந்த ஏனைய அங்கங்களில் ஏற்பட்ட சளித்தொற்று நோயாளர்கள் என ஆண், பெண் இரு பாலாருமாக 291 பேர் இனங்காணப்பட்டனர்.

இதில் யாழ்ப்பாணத்தில் 48 பேரும், சண்டிலிப்பாயில் 29 பேரும், சங்கானையில் 23 பேரும், வேலணையில் 11 பேரும், ஊர்காவற்றுறையில் 10 பேரும், சாவகச்சேரியில் 29 பேரும், உடுவிலில் 29 பேரும், தெல்லிப்பழையில் 17 பேரும், நல்லூரில் 20 பேரும், கோப்பாயில் 33 பேரும், கரவெட்டியில் 23 பேரும்,பருத்தித்துறையில் 19 பேரும் இனங்காணப்பட்டனர்.

கடந்த 2016ஆம் ஆண்டு காசநோயாளிகள் என இனங்காணப்பட்ட நான்கு நோயாளிகள் சிகிச்சைக்குச் சமுகமளிக்கத் தவறினர். அவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களுக்கு மீண்டும் சிகிச்சை அளித்து வருகிறோம். காசநோய் நோயாளர்கள் ஒளிந்து ஓடாமல் வைத்தியர்களால் கொடுக்கப்படுகின்ற ஆலோசனைக்கு அமையத் தொடர்ச்சியான சிகிச்சைகளைப்பெற்றுவந்தால் பூரண குணமடைய வாய்ப்புள்ளது– என்றார். (த-21,10)

# பொறுப்பற்ற கருத்துகளுக்கு முன்னுரிமை வழங்காதீர்கள்

## ஊடகங்களிடம் கோருகிறார் சிவமோகன் எம்.பி.

முல்லைத்தீவு, ஜன.4

தமிழர்களின் வரலாறுகளை எமது மண்ணில் பதிவில் இட நான் முயன்றுகொண்டிருக்கும் இந்தத் காலத்தில் ஊடகங்கள் பொறுப்பற்ற கருத்துகளுக்கு முன்னுரிமை வழங்குவதைத் தவிர்க்கவேண்டும். ஊடகங்கள் பொறுப்புடன் தமிழினத்தின் கௌரவம் காக்க செயல்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார். நாடாளுமன்ற உறுப்பினரால் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது, 'பண்டாரவன்னியனின் சிலையை பல நூறு படித்த புத்திஜீவிகளுடன் சேர்ந்து ஊரே திரண்டு திறந்து வைத்தது. அந்த நிகழ்வில் உலகத் தமிழர்கள் பண்பாட்டுப் பேரவையின் சர்வதேச தலைவர் வி.எஸ்.துரைராசா உட்பட பல புத்திஜீவிகள் ஆரோக்கியமான கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர். சிறந்த கருத்துக்கள் மக்களிடம் போவதைத் தவிர்த்த ஊடகங்கள் சில மது போதையில் வந்து கூக்குரலிட்டவர்களினதும் ஒரு சில புல்லுருவிகளினதும் கருத்துக்களுக்கு முன்னுரிமை அளித்தது கவலைக்குரிய விடயம். ஊடகங்கள் சில சூடான செய்திகள் வேண்டும் என்பதற்காக இப்படியாக செயல்படுவார்களெனின் சமுதாயத்தில் தமது முகத்தை வெளிக்கொண்டுவர போதைக் காரர்களும் புல்லுருவிகளும் பல்கிப் பெருகுவர். எதிர்காலத்தில் எந்தவொரு நல்ல காரியத்தையும் செய்து முடிக்கமுடியாத நிலமை தோன்றும். பொய் முகங்கள் விளம்பரம் வேண்டி பொய்யான கருத்துக்களை சூடாக வெளிப்படுத்தும் போது அதன் பின்னால் ஊடகங் கள் செல்லாமல் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்பதை ஆதங்கத்துடன் வெளிப்படுத்தி நிற்கிறேன். என்றுள்ளது. (21)

# நேர்முகத் தேர்வில் முறைகேடுகளா?

## மறுக்கிறார் பிரதேச சபையின் செயலர்

யாழ்ப்பாணம், ஜன. 4

அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்காக வலி. தென்மேற்குப் பிரதேச சபையினால் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளது, இது தொடர்பாக வடக்க மாகாண முதலமைச்சருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென வலி.தென்மேற்கு பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் த.குமணன் குற்றஞ்சாட்டினார். ஆனால் புள்ளியிடல் ரீதியாகவே நேர்முகத்தேர்வுக்கான தெரிவுகள் இடம்பெற்றன. முறைகேடான முறையில் தெரிவுகள் இடம்பெறவில்லை என வலி.தென்மேற்கு பிரதேச சபைச் செயலர் தெரிவித்தார்.

'வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மானிப்பாய் அலுவலகத்தில் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 18, 19, 20 ஆகிய திகதிகளில் 3 நாள்கள் நடைபெற்ற அட்டவணைப் படுத்தப்படாத பதவிகளுக்கான நேர்முகத்தேர்வில் தெரிவு செய்யப்பட்டவர்கள் தொடர்பில் பல்வேறு குழப்ப நிலைகள் இருப்பதாக நேர்முகத் தேர்வுக்குத் தோற்றிய பலர் எனது கவனத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். 4 பணிநிலைகளில் 17 வெற்றிடங்களுக்கு நடத்தப் பெற்ற நேர்முகத் தேர்வுக்கு 250 க்கும் மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்திருந்தனர். தகைமைகள் இருக்கும் நிலையுள்ளோர் தெரிவு செய்யப்படாது உள்ளக செல்வாக்குகளின் அடிப்படையில் பணிநிலைகளுக்கான ஆள்கள் தெரிவு செய்யப்பட்டனர். பாதிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் சார்பில் ஒரு பிரதிநிதியை அனுப்பி உள்ளூராட்சிச் சபை ஆணையாளரிடமும் இந்த விடயம் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது. அத்துடன் மூன்றுவகையான பணிவெற்றிடங்களுக்கான தெரிவுகளிலும் ஒருவரின் பெயரே இடம்பெற்றும் இருப்பது பெரிய குழப்ப நிலமைகளை ஏற்படுத்தியுள்ளது என பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் தெரிவித்தார்.

'வெற்றிடமாக உள்ள 4 பணிநிலைகளுக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டன. இந்த நேர்முகத் தேர்வுக்கு என உள்ளூராட்சி அலுவலகத்தினால் குழு ஒன்று அமைக்கப்பட்டு, புள்ளியிடல் அடிப்படை முறையும் தெரிவு செய்யப்பட்டது. புள்ளியிடல் முறை மூலமே நான்கு பணி நிலைகளுக்கான நேர்முகத்தேர்வும் நடைபெற்றது. எந்த விதமான முறைகேடுகளும் அற்ற வகையில் நீதியான முறையிலேதான் தெரிவுகள் இடம்பெற்றன. இவ்வாறான தேவையற்ற குழப்பங்களினால் பிரதேச சபையின் ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படாமல், பிரதேச சபை வினைத்திறனான சேவையை மக்களுக்கு வழங்கமுடியாமல் உள்ளது' என வலி.தென்மேற்கு பிரதேச சபைச் செயலர்தெரிவித்தார். (க-21,10,115)

# இந்த ஆண்டின் ஆரம்பத்திலேயே தீர்வு வேண்டும்

## தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது என்கிறார் வியாழேந்திரன் எம்.பி.

எருவில், ஜன.04

இந்த வருடத்தின் ஆரம்பத்திலேயே சிறுபான்மை மக்களுக்கான சரியான தீர்வை இந்த அரசு வழங்கவேண்டும். இன்னும் கால நீடிப்பை வழங்கித் தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது என்ற நிலைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தள்ளப்பட்டுள்ளது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

மேற்கு நாடுகளில் சிறுபான்மைச் சமூகம் கௌரவமாக நடத்தப்படுகின்றது. இலங்கையில் போரால் இடம்பெயர்ந்து ஐரோப்பா உட்பட பல நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்த மக்கள் அந்த நாடுகளில் கௌரவமாக நடத்தப்படுகின்றனர்.

இலங்கை போன்ற தென்னாசிய நாடுகளில்



பெரும்பான்மையினத்தை சேர்ந்தவர்கள் சிறுபான்மை மக்களைக் கௌரவமாக நடத்தும் மனப்பாங்கு இல்லாமலே இருந்துவந்ததை வரலாற்று ரீதியாகப் பார்த்துவந்துள்ளோம்.


இந்த நல்லாட்சியில் சிறுபான்மை மக்களின் எதிர்பார்ப்புகள் எதுவும் பூர்த்திசெய்யப்படவில்லை. தமிழ் மக்கள் இன்னும் பொறுமைகாக்க முடியாது. இதனை அனைத்து அரசியல் தலைமைகளும் உணர்ந்துகொள்ளவேண்டும் - என்றார். (த-ய)

# இன்று மின் தடை

யாழ்ப்பாணம், ஜன.4

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்றுபுதன்கிழமை காலை 8.00 மணியிலிருந்துமாலை 6.30மணி வரையும் கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடக்கு மாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின்பொறியியலாளர் அறிவித்தார்.

யாழ். பிரதேசத்தில் வறுத்தலைவிளான், வீமன்காமம், காங்கேசன்துறை கரிசன் 5ஆவது பொறியியல் படைமுகாம், காங்கேசன்துறை வடக்கு கடற்படை முகாம், பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5ஆவது பொறியியல் படைமுகாம், பலாலி இலங்கை விமானப்படை முகாம், மயிலிட்டி கரிசன் 5ஆவது பொறியியல் படைமுகாம் (புதியது), பலாலி விமானப்படை ஓய்வு கால விடுதி ஆகிய இடங்களிலும் - வவுனியா பிரதேசத்தில் தெற்கிலுப்பைக்குளம் கிராமத்திலும் மன்னார் பிரதேசத்தில் ஓலைத்தொடுவாய், சாந்திபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (த-10)



ஜனாதிபதியை வரவேற்கும் வகையில் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகச் சுற்றாடலில் பனர்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. வீதிகளில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொடிகள் - நீல வர்ணக் கொடிகள் கட்டப்பட்டுள்ளன. (த-5-8)

# சொர்ணபூமி காணிகளை மீள ஒப்படைக்க ஏற்பாடு

மட்டக்களப்பு - பதுளை வீதியை அண்டிய ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில் சொர்ணபூமி உறுதிப் பத்திரம் உள்ள 25 முஸ்லிம் விவசாயிகளின் காணிகளை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.எஸ். சுபைர் தெரிவித்தார்.

பதுளை வீதியை அண்டியுள்ள பல கிராமங்களில் இடப்பெயர்வுகளுக்குப் பின்னர் முஸ்லிம் விவசாயிகளின் காணிகள் மீள ஒப்படைக்கப்படாமல் இருந்து வந்தன. சுமார் 1,500 ஏக்கர் காணிகள் மேய்ச்சல் தரை என்ற பெயரில் அதிகாரிகளால் கையகப்படுத்தப்பட்டன. இது குறித்து தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளின் பயனாக சொர்ணபூமி உறுதிப் பத்திரங்களைக் கொண்டுள்ள காணிகளை மீளக் கையளிப்பதற்கு பிரதேச செயலாளர் முன்வந்துள்ளார் என அவர் மேலும் கூறினார். (த-ய-47)

# திருமலையில் இரு ஆலயங்கள் விசமிகளால் உடைத்துச் சேதம்

மூதூர், ஜன. 4

திருகோணமலை - குச்சவெளிப் பிரதேசத்தில் விசமிகளால் இரு ஆலயங்கள் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. நிலாவெளி கூழாவாடி பிள்ளையார் ஆலயத்தின் சிலைகள் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளதுடன், நிலாவெளி பத்தினி அம்பாள் ஆலயத்தின் கலசம் உடைத்துக் களவாடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இரண்டு ஆலய நிர்வாகத்தினாலும் நிலாவெளி பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-ய-40)

# படை விட்டோடிகளை கைதுசெய்ய நடவடிக்கை

முப்படைகளிலும் இருந்து விலகிச் சென்று மறைந்து வாழும் 200 அதிகாரிகளையும் சுமார் 40 ஆயிரம் சிப்பாய்களையும் கைதுசெய்யும் நடவடிக்கை ஜனவரி முதலாம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தின் ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனிவிரத்ன தெரிவித்தார்.

இவர்கள் சரணடைய விதிக்கப்பட்டிருந்த பொதுமன்னிப்புக் காலஅவகாசம் டிசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்திருப்பதால் அன்றைய தினம்வரை சரணடையாதவர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

டிசெம்பர் முதலாம் திகதிமுதல் 31ஆம் திகதிவரை வழங்கப்பட்டிருந்த பொதுமன்னிப்புக் காலத்தில் முப்படைகளையும் சேர்ந்த 31 அதிகாரிகளும் 8,843 சிப்பாய்களும் சரணடைந்த பின் சட்டபூர்வமாக விலகிக்கொண்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார். (த)

# மேய்ச்சல் தரைகளை மீட்டுத்தருமாறு கிளிநொச்சி செயலரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 4

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த காலங்களில் இனங்காணப்பட்ட 10 மேய்ச்சல் தரைகளும் வன வளத் திணைக்களத்தினரின் ஆளுகையில் உள்ளதனால் மாவட்ட கால்நடை வளர்ப்போர் பெரும் சிரமத்தை எதிர்கொள்வது தொடர்பில் மாவட்டச்செயலர் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும் என்று மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட விவசாய அபிவிருத்திக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் தலைமையில் நேற்று இடம்பெற்றபோது இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

"கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயனில் அலைகரைப் பகுதியில் ஆயிரத்து 500 ஏக்கர் நிலமும், வன்னேரியில் 300 ஏக்கர், கண்டாவளையில் 100 ஏக்கர், இரணைமடுவில் 75 ஏக்கர், குஞ்சுப்பரந்தன், ஊற்றுப்புலம், வட்டக்கச்சி, பொன்னகர் ஆகிய நான்கு இடங்களிலும் தலா 100 ஏக்கர் நிலம் ஆகியவற்றோடு கல்மடு, மயிலங்குளம் பகுதிகளில் தலா 500 ஏக்கருமாக சுமார் 3 ஆயிரத்து 500 ஏக்கர் நிலங்கள் மேய்ச்சல் தரைகளாக இனம்காணப்பட்டிருந்த போதிலும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவில்லை.

அவ்வாறு வர்த்தமானி அறிவித்தல் இல்லை என்ற ஒரே காரணத்தினாலும் போர்க்காலத்தில் குறித்த பகுதிகளில் காடுவளர்ந்துள்ள நிலையில் வன வளத் திணைக்களத்தினர் தமது ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகள் என்று மேய்ச்சலுக்கு தடைவிதிக்கின்றனர். இதனால் மாவட்ட கால்நடை வளர்ப்போர் கடந்த 7 ஆண்டுகளாக அனுபவிக்கும் நெருக்கடிகள் எண்ணற்றவை. எனவே இவற்றைப் போக்கும் வகையில் மாவட்டச் செயலர் வனவளத் திணைக்களத்தினருடன் இது தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கை மூலம் இப் பிரதேசத்தை விடுவிக்க ஆவன செய்யவேண்டும்" என்று கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினர் கோரிக்கை விடுத்தனர். (வ-101)

# புத்தாண்டில் பிறந்த 3 சிசுக்களும் உயிரிழப்பு

வவுனியா, ஜன. 4

வவுனியா பொது வைத்தியசாலையில் புத்தாண்டு தினத்தில் பிறந்த 3 சிசுக்களும் உயிரிழந்துள்ளன என்று வைத்தியசாலைத் தரப்பினர் தெரிவித்தனர்.

"நேற்றுமுன்தினம் மாலை 2 சிசுக்கள் உயிரிழந்தன. நேற்று மதியம் மற்றைய சிசுவும் உயிரிழந்தது. மூன்று சிசுக்களும் நிறை குறைந்து காணப்பட்டன. அதனால் சிறுவர் சிகிச்சைப் பிரிவில் வைத்துச் சிசுக்களுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டு வந்தன. எனினும் சிகிச்சை பயனளிக்காது சிசுக்கள் உயிரிழந்தன" என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. (வ-4)

# நள்ளிரவில் வீடு புகுந்து 15 பவுண் நகை திருட்டு

கிளிநொச்சி, ஜன. 4

நள்ளிரவில் வீடு புகுந்த திருடர்கள் 15 பவுண் நகைகள் மற்றும் பணத்தைத் திருடிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி விசுவமடு இளங்கோபுரம் பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது.

"வீட்டில் உள்ளவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது, சமையலறை புகைக் கூட்டின் ஊடாக வீட்டுக்குள் இறங்கிய திருடர்கள் அறை ஒன்றினுள் இருந்த அலுமாரியில் வைக்கப்பட் டிருந்த 15 பவுண் நகைகள் மற்றும் 60 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ள தாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது" என்று பொலிஸார் கூறினர்.

திருட்டுத் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைபாடு பதிவு செய்யப்பட்டுள் ளது. சம்பவ இடத்தில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (வ-4,35)

## அழிக்கப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னரே இந்த ஆலயம் தரைமாக்கப்பட்டுள்ளது. இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த அண்மையில் விடுவிக்கப்பட்ட காங்கேசன்துறை ஊறணி புனித அந்தோனியார் ஆலயம் இருந்த இடத்தில் நேற்று மாலை 4 மணிக்கு அருட்தந்தை ஜெயக்குமார் அடிகளாரின் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இதில் பெரும் எண்ணிக்கையான ஊறணி மக்கள் கண்ணீருடன் கலந்துகொண்டனர். எந்தவிதமான கட்டடங்களும் இல்லாத நிலையில் முன்னர் பெரிய அந்தோனியார் ஆலயம் இருந்த அதே இடத்தில் திறந்தவெளியில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டமை பக்தர்கள் கண்களில் கண்ணீரை வரவழைத்தது.

1982 களில் சுமார் ஒரு கோடி ரூபாவுக்கும் மேல் செலவு செய்து கட்டப்பட்ட இந்த ஆலயம் இன்று தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. முழுக்க முழுக்க இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த ஆலயமும் குருக்கள் பணிமனையும் திட்டமிட்டு இடிக்கப்பட்டுப் பெரும் வெளி கொண்ட இடமாகக் காட்சியளிக்கின்றது.

ஊறணி வாழ் மக்கள் இந்த ஆலயத்தைக் கட்டுவதற்காக எத்தனையோ நாள்கள் கடற்றொழில் புரிந்த வருமானத்தை அப்படியே முழுவதுமாகக் கொடுத்து தாம் அன்றாடம் பசியில் இருந்திருக்கின்றார்கள். இது மட்டுமில்லாமல் காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் கப்பல்களில் இருந்து தாமே பொருள்களை இறக்கிக் கூலித்தொழிலாளர்களாக மாறி, அந்தப் பணம் முழுவதையும் கோயில் கட்டுவதற்காக அர்ப்பணித்திருந்தார்கள். இவ்வாறு இரவு பகல் பாராமல் அர்ப்பணித்துக் கட்டப்பட்ட இந்த ஆலயத்தின் தற்போதைய பெறுமதி சுமார் 100 மில்லியன் ரூபா எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

1990 களில் வலி.வடக்கின் பெரிய இடப்பெயர்வின்போது ஊறணி வாழ் மக்களும் இடம் பெயர நேர்ந்தது. அன்றிலிருந்து இன்றுவரை அந்தக் கிராமமும் ஆலயமும் வீடுகளும் இராணுவத்தினரின் முழுமையான கட்டுப்பாட்டிலேயே இருந்தன.

மக்கள் இடம்பெயர்ந்திருந்தாலும் சிறப்பு அனுமதி பெற்று 1998, 2000, 2010 ஆம் ஆண்டுகளில் இந்த ஆலயத்தில் வழிபாடு செய்து திரும்பியுள்ளனர். அப்போது முழுமையாகக் காட்சி அளித்த ஆலயம் போர் முடிவடைந்த பின்னர் 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடித்தழிக்கப்பட்டமையானது நீதிக்கும், சமாதானத்துக்கும் விரோதமான செயற்பாடாகும் என ஊறணி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஆலயம் மட்டுமல்ல அப்பகுதியில் உள்ள மக்களின் வீடுகள், கட்டடங்கள் அனைத்துமே தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. இவற்றை நேற்று நேரில் கண்டு வேதனையடைந்தனர் ஊறணி மக்கள்.

இடிக்கப்பட்ட ஆலயத்தை மீண்டும்கட்டியெழுப்ப நல்லாட்சி அரசு உதவி புரியுமா என்றும் அந்த மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (த-555)

## இறுதிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெனரல் சாணக்ய குணவர்தன நீதிமன்றில் தெரிவித்தார். போரின் இறுதியில் சரணடைந்தவர்களின் பட்டியல் இராணுவத்திடம் இருப்பதாக மன்றில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்த நிலையிலேயே அவர் இவ்வாறு நேற்றுத் தெரிவித்தார்.

புனர்வாழ்வு பெற்று விடுதலையான முன்னாள் போராளிகளின் பெயர்ப் பட்டியல் தவிர வேறு எந்தப் பட்டியலும் தம்மிடம் இல்லை என்று அவர் மன்றில் நேற்றுக் குறிப்பிட்டார். இதனையடுத்து வழக்கு எதிர்வரும் 30ஆம் திகதிக்கு ஒத்திவைக் கப்பட்டது.

*பின்னணி*

வவுனியா மேல் நீதிமன்றத்தில் 2012 ஆம் ஆண்டு ஆள்கொணர்வு மனு, காணாமற் போனோரின் உறவினர்களால் தாக்கல் செய்யப்பட்டது. 2009 ஆம் ஆண்டு போரின் இறுதியில் இராணுவத்தினரிடம் கையளித்த - சரணடைந்த தமது உற வினர்களை மீட்டுத் தருமாறு கோரித் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு வவுனியா மேல் நீதிமன்றத்தினால், சம்பவம் இடம்பெற்ற பகுதி நீதிமன்றமாகிய முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் மனுதாரர்களின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்ட பின்னர், பிரதிவாதிகளின் சாட்சியம் பதிவு செய்யும் நடவடிக்கை 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் 10 ஆம் திகதி ஆரம்பமாகியிருந்தது. 58 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சாணக்ய குணவர்தன, (தற்போது ஓய்வுபெற்றுள்ளார்) ஆள்கொணர்வு மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் எவரும் 58 ஆம் படையணியிடம் சரணடைந்ததற்கான பதிவுகள் எதுவும் தங்களிடம் இல்லை என்று தெரிவித்திருந்தார்.

*குறுக்கு விசாரணை*

சாட்சியம் மீதான குறுக்கு விசாரணை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில், நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன் முன்னிலையில் பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி இடம்பெற்றது. 58 ஆவது படையணியின் கட்டளைத் தளபதியை, மனுதாரர்கள் சார்பில் மன்றில் முன்னிலையாகியிருந்த மூத்த சட்டத்தரணி கே.என்.ரட்ணவேல் குறுக்கு விசாரணை செய்தார். ஆள்கொணர்வு மனுத் தாக்கல் செய்தவர்களின் பெயர்கள் உங்களிடம் இல்லை என்பதை எதை வைத்துத் தெரிவித்திருக்கின்றீர்கள் என்று மனுதாரர் தரப்புச் சட்டத்தரணியினால் கேட்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த கட்டளைத் தளபதி, சரணடைந்தவர்கள் தொடர்பான பெயர்ப் பட்டியல் எம்மிடம் உள்ளது. அதில் ஆராய்ந்து பார்த்தபோது மேற்படி பெயர்கள் இல்லை. அதனடிப்படையிலேயே தெரிவித்தேன் என்று பதிலளித்திருந்தார்.

இதன்போது மனுதாரர் தரப்புச் சட்டத்தரணி கே.என்.ரட்ணவேல், சரணடைந்தவர்கள் தொடர்பான பட்டியல் இராணுவத்தினரிடம் இருந்தால் அதனை மன்றில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார். நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன், இராணுவத்தினரிடம் உள்ள சரணடைந்தவர்கள் தொடர்பான பெயர்ப் பட்டியலைச் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

*சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்*

ஜூலை மாதம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டது. மனுதாரர்கள் சார்பில் மன்றில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி கே.என்.ரட்ணவேல் அந்த ஆவணத்தைப் பார்வையிட்டு, இதில் பெயர், முகவரிகள் இருக்கின்றன. சரணடைந்த திகதி இல்லை. இந்த ஆவணத்தை நாம் கோரவில்லை. இது புனர்வாழ்வு ஆணையாளரினால் வெளியிடப்படும் ஆவணம். இதனை எவரும் பெற்றுக் கொள்ள முடியும். இதில் சரணடைந்து புனர்வாழ்வு பெற்று வெளியேறியவர்களின் பெயர்கள்தான் இருக்கின்றன.

நாம் 2009 ஆம் ஆண்டு மே 17, 18, 19 ஆம் திகதிகளில் இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்களின் பெயர்களைத்தான் கோரினோம். இராணுவத்தினரிடம் இருப்பதாக பெப்ரவரி 17 ஆம் திகதி நீதிமன்றத்தில் படையணியின் கட்டளைத் தளபதி தெரிவித்த ஆவணத்தையே சமர்ப்பிக்கக் கேட்டிருந்தோம். இங்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள பெயர்ப் பட்டியலில் மனுதாரர்கள் தெரிவிக்கும் பெயர்கள் இல்லை. நாம் கோரிய ஆவணத்தை சமர்ப்பிக்க வேண்டும் என்றார் ரட்ணவேல்.

58 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி அவ்வாறான ஆவணம் இல்லை என்று தெரிவித்தபோது, பெப்ரவரி 17ஆம் திகதி வழக்கு விசாரணையின் போது ஆவணம் இருப்பதாகத் தெரிவித்ததை மனுதாரர் தரப்புச் சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

*ஆவணங்களுடன் வரவும்*

நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன், செப்ரெம்பர் 29 ஆம் திகதிய வழக்குத்தவணையின்போது நீதிமன்றம் கோரிய ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு பணித்தார்.

மன்றில் செப்ரெம்பர் 29 ஆம் திகதி முன்னிலையான சாணக்ய குணவர்த்தன, தம்மிடம் வேறு எந்த ஆவணமும் இல்லை என்று தெரிவித்தார். இதுவரையில் நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணைகளின் அடிப்படையில் இரு தரப்புச் சட்டத்தரணிகளினதும் எழுத்து மூலச் சமர்ப்பணங்களைச் செய்யுமாறு கால அவகாசம் வழங்கிய நீதிவான் விசாரணைகளை ஒத்தி வைத்தார்.

*முதல் வழக்கு முடிவு*

முதலாவது வழக்கு நேற்றையதினம் முடிவு பெற்றது. எழுத்துமூலமான சமர்ப்பணங்கள் செய்யப்பட்டன. இரண்டாவது வழக்கு மீதான விசாரணை ஆரம்பமானது. பிரதிவாதிகள் சார்பில் சாணக்ய குணவர்த்தனவே மன்றில் முன்னிலையானார். அவர் நீதிமன்றில் மீளவும், புனர்வாழ்வு பெற்றவர்களின் பட்டியலையே சமர்ப்பித்தார்.

மனுதாரர் தரப்புச் சட்டத்தரணி ரட்ணவேல், இந்த ஆவணத்தைக் கோரவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினார். சட்டத்தரணியினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கும் தெரியாது என்பதையே பதிலாக வழங்கினார் சாணக்ய குணவர்த்தன.

வடக்கு-கிழக்கில், போரின் இறுதியில் சரணடைந்து காணாமற் போனவர்கள் தொடர்பில் எதுவும் தெரியாது. அதேபோன்று தென்னிலங்கையில் காணாமற்போனவர்கள் தொடர்பிலும் எதுவும் தெரியாது என்று அவர் குறிப்பிட்டார்.

வழக்கு விசாரணை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (த-5)

## சிவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில், அதனை சிவில் சமூகத்தின் அறிக்கை என்று குறிப்பிட்ட முன்னாள் ஜனாதிபதியும், தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் தலைவியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க, அது அரசின் அறிக்கை அல்ல என்றும் தெரிவித்தார்.

நல்லிணக்கப் பொறிமுறை குறித்த கலந்தாலோசனைச் செயலணியின் மக்கள் கருத்து அறியும் அறிக்கை, ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதியின் செயலரிடம் கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"கையளிக்கப்பட்டுள்ள இந்த அறிக்கை சிவில் சமூகத்தின் அறிக்கை. இது அரசின் அறிக்கை அல்ல. அரசின் அறிக்கையாக இதனை அர்த்தப்படுத்தக் கூடாது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை முழுமையாக ஆராய்ந்து நடைமுறைப்படுத்தக் கூடியவற்றை நடைமுறைப்படுத்துவோம்" என்று சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார். (வ-5)

## இறுதி நேரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்துக்கு இன்றைய தினம் வருகை தரவிருந்தார்.

இராணுவத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்குப் பலாலியில் கௌரவிக்கும் நிகழ்வு, வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில், 'ஜனாதிபதியிடம் தெரிவியுங்கள்' முதலாவது பிராந்திய அலுவலகத் திறப்பு விழா, பண்ணை சுற்றுவட்டத்துக்கு அண்மையில் நடைபெறும் மரம் நடுகை நிகழ்வு ஆகியவற்றில் கலந்துகொள்வதற்காகவே ஜனாதிபதி வருகை தருவதாக இருந்தது.

இருப்பினும் திடீரெனக் காரணம் எதுவும் குறிப்பிடப்படாமல் அவரது பயணம் இரத் துச் செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் நிகழ்வுக்கான ஏற்பாடுகள் யாவும் முழுமை பெற்றுள்ள நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

யா/யாழ்.இந்து ஆரம்ப அன்னை தனது வரலாற்றில்
பொற்கால நாயகனாக விளங்கி இன்று (04.01.2017)மணிவிழாக் காணும்

# உயர்திரு. வேலாயுதபிள்ளை ஞானகாந்தன்

அவர்களை
பெருமிதத்துடன் தலைநிமிர்ந்து
அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றாள்
1998.01.27 - 2010.06.15



60

1957
இலிருந்து
2017
வரை

பன்னிரண்டு வருடங்கள்
அதிபருக்குரிய ஆளுமைப் பண்புகள் நிறைந்த
சான்றோனாகவும்
ஆசிரியர்களுக்குப் புத்தூக்கம் அளித்து
ஆசிரியரை மகிழ வைத்து
மாணவர்களுக்கு வலுவூட்டிய
சிந்தனையாளனாகவும் விளங்கி
"போற்றுபவன் போற்றட்டும் தூற்றுபவன் தூற்றட்டும்
தொடர்ந்து செல்மின்
ஏற்றமிகு இலட்சியத்தின் எல்லை நோக்கி"
என்ற கூற்றுக்கமைய
மழலைகளுடைய இலட்சியக் கனவுகள்
நனவாவதற்குத் துணிச்சலுடன் பயணித்த செயல்வீரனும்
'கல்விப்பணி கடவுட்பணி' என வாழ்ந்து காட்டிய
மதிநுட்பமும் மனிதநேயமும் கொண்டவரும்
அன்பினால் பண்பினை ஓங்கச் செய்தவரும்
யாழ்.இந்து ஆரம்ப அன்னையின்
பொற்காலமது - என
எல்லோராலும் பேசப்படுகின்ற காலத்தின்
நாயகனும் ஆகிய
பெருமதிப்புக்குரிய
மணிவிழா நாயகன்
திரு.வேலாயுதபிள்ளை ஞானகாந்தன்
அவர்களைப்
பார்போற்ற பல்லாண்டு காலம் வாழ
பாராட்டி வாழ்த்தி அகமகிழ்கின்றனர்.

**விழா நாயகனுடைய பொற்காலத்தில் பணியாற்றிய**
**யாழ்.இந்து ஆரம்ப அன்னையின் அன்புள்ளங்கள்**

01. திருமதி M.P.R. கனகரட்ணம் (பிரதி அதிபர்)
02. செல்வி தா.குணரஞ்சினி
03. திரு.க.சிவஞானம்
04. திருமதி ம.பத்மநாதன்
05. திருமதி பி.தியாகலிங்கம்
06. திருமதி தி.தவபாலசுந்தரம்
07. திருமதி லோ.சிவகுமாரன்
08. திருமதி சி.கிரிதரன்
09. திருமதி ரா.சசிதரன்
10. திருமதி வ.சுகந்தி
11. திருமதி வி.அபிராமி
12. திருமதி யா.பகீரதன்
13. திரு.திருமதி நிமலன் லிந்துஜா
14. திருமதி வி.விஜயசுந்தரம்
15. திருமதி த.சுரேஸ்குமார்
16. திருமதி த. சுமதி
17. திருமதி வி.சக்திவேல்

**பொற்காலத்தில் புரிந்த சாதனைகள் சிலவும் அவருடைய ஆளுமைப் பண்புகளும்**

1. மைதான உருவாக்கம் (2010.02.25)
2. பாடசாலை இலட்சினையுடனான மாணவர்களுக்கான கழுத்துப்பட்டி (2005.02.02)
3. பாடசாலைக் கீதத்துக்கு இசையமைத்த பெருமை.
4. புலமைப் பரிசில் பரீட்சையில் வெற்றி பெறுகின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை மூவிலக்கமாக உயர்ந்தமை மட்டுமன்றி 2004ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் எட்ட முடியாத சாதனை படைத்தமை.
5. அதுமட்டுமன்றி சர்வதேச ரீதியில் கூட சாதனைகளை கால் பதிக்க வைத்தமை.
6. பாடசாலை முதல்வராக இருந்தும் கூட தரம் ஐந்துக்கான மாலை நேர வகுப்புக்களை எடுப்பதில் மிக்க ஆர்வமுடையவர்.
7. பாடசாலையில் ஆசிரியர்களுக்கிடையேயான நல்லுறவு பேணப்பட்டமை.
8. ஆளுமைமிக்க ஆசிரியர்களை உருவாக்க வேண்டும் என்ற தூரநோக்கு.
9. பங்கேற்றல், ஆதரவு, ஊக்குவிப்பு, பாராட்டு வழங்கல் என்பவற்றில் பரஸ்பர உணர்வு படைத்தவர்.
10. எந்தவிதமான பிணக்குகள், முரண்பாடுகளை வெளிச்செல்ல விடாது தீர்ப்பதில் வல்லுநர்.

Best Wishes

# மணிவிழா வாழ்த்து




எமது பாடசாலையில் நீண்ட காலம்
**அதிபராக** இருந்து பாடசாலையின் வளர்ச்சிக்கும்
பெருமைக்கும் அரும்பணி ஆற்றிய
எமது மதிப்பிற்குரிய முன்னைநாள் அதிபர்

## உயர்திரு. வேலாயுதபிள்ளை ஞானகாந்தன்

அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்புற அமைய வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
**பாடசாலைச் சமூகம்**
**யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.**

(சி.27360) (13.18.17)

# மணிவிழா வாழ்த்து

**04.01.2017**




**உயர்திரு. வேலாயுதபிள்ளை ஞானகாந்தன்** (அதிபர்)
யா/கொக்குவில் இந்து கல்லூரி
சேவையிலிருந்து ஓய்வுபெறும்
அதிபர் அவர்கள் தனது ஓய்வு
காலத்தில் சகல சுக நலத்துடன்
சிறப்பாக வாழ எல்லாம் வல்ல
நயினை நாகபூசணி அன்னையை
வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: செல்வி கமலநாயகி கதிர்காமலிங்கம்
திருமதி வரதலெட்சுமி கதிரேசபிள்ளை
திருமதி கடம்பமலர் விமலராஜா

(c.2736123) (13.18.17)

# மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்




## திருமதி புஸ்பராணி இரத்தினராசா

அவர்கள்
15.10.1979 - 04.01.2017
வரை ஆசிரியப் பணியில்
38 ஆண்டுகள் உன்னதமாக
பணிபுரிந்து ஓய்வு பெறுகிறார்.
இவரின் எதிர்காலம் சிறப்புற அமைய
உளமார வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்: **பாடசாலைச் சமூகம்**
**யா/திருநெல்வேலி றோ.க.த.க.பாடசாலை.**

(சி.27359)
(13.18)

PEARSON BTEC
*Recognised More than 100 Countries*

**GOLD PARTNER OF PEARSON**

HND IN BUSINESS SPECIALISING IN



**HND in Computing & Systems Development**



**HND in Business Management**



**HND in Accounting & Finance**



**HND in Human Resource Management**




**HND in Marketing**

Duration: 18 months

Installments Plans available *Conditions Apply




Equivalent to the 1st & 2nd Year of a UK Honours Degree

**NEW INTAKE January**

**UGC APPROVED**



Pearson
Annual Awards 2015
GOLD PARTNER

ESOFT
*Shaping Lives, Creating Futures.*

**ESOFT METRO CAMPUS**
NO.137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Tel : 021 222 4142 www.esoft.lk

HOTLINE
**077 309 9 308**

*Sri Lanka's Largest Private Sector Higher Education Network*



# சீனாவிடம் 2 விமானங்கள் வாங்குகின்றது இலங்கை அரசு

## இராணுவத்தினரின் பாவனைக்காக

கொழும்பு, ஜன 4
சீன உற்பத்தியில் உருவானவை.20 ரக இரு இராணுவ விமானங்களை புதிய வருடத்தில் கொள்வனவு செய்ய அரசு தீர்மானித்துள்ளது.
இராணுவத்தினரை ஏற்றிச் செல்வதற்கு இந்த விமானங்கள் பயன்படுத்தப்படவுள்ளதாக இராணுவ உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.
இந்த விமானங்களைச் சீனாவிலிருந்து கொள்வனவு செய்வதற்கு அமெரிக்க விமான சேவை அதிகாரிகளின் அனுமதியை இலங்கை அரசு பெற வேண்டி வரும் எனவும் கூறப்படுகின்றது. மணித்தியாலத்துக்கு 918 கிலோமீற்றர் வேகம் பயணிக்கக் கூடிய இந்த விமானம் நவீன தொழில் நுட்பங்களுடன் கூடியதாக தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த)

# கடந்த ஆண்டு சிறைக்கு சென்றவர்கள் 17,401 பேர்

## இதில் 217 வெளிநாட்டவர்கள்

கொழும்பு, ஜன 4
பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்ட 17 ஆயிரத்து 401 பேர் கடந்த வருடம் சிறைச்சாலைகளுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் அவர்களில் 217 பேர் வெளிநாட்டவர்கள் எனவும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பேச்சாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்தார்.
இந்த 17,401 பேரில் 8,215 பேர் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் எனவும், 9,186 பேர் விசாரணையிலுள்ள வழக்குகளில் சந்தேகநபர்கள் எனவும் அவர் கூறினார். (த)

# கட்டாருக்கான புதிய தூதுவராக எஸ்.பி.லியனகே

கொழும்பு, ஜன 4
கட்டாருக்கான புதிய இலங்கைத் தூதுவராக வர்த்தகர் எ.எஸ்.பி.லியனகே நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
குறித்த நியமனத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த மாதம் 31ஆம் திகதி வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.
எ.எஸ்.பி.லியனகே முன்னர் நைஜீரியாவுக்கான இலங்கைத் தூதுவராக ஒரு வருடம் கடமையாற்றியுள்ளார். (த)

# சிகரெட் பாவனை 40 வீதத்தால் குறைவு

சிகரெட் விலை கடந்த ஒக்ரோபர் மாதம் 7 ரூபாவால் அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து சிகரெட் பாவனை 40 சதவீதம் குறைவடைந்திருப்பதாகச் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
வரி அதிகரிப்பின் காரணமாகவே சிகரெட் பாவனை 40 சதவீதமாக குறைவடைந்திருப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். (த)

# ரயில் பாதையில் நடப்பதால் மாதாந்தம் 30 பேர் சாவு

ரயில் பாதையில் நடந்து செல்வதால் மாதாந்தம் 30 பேர் உயிரிழப்பதாகவும், வருடத்துக்கு இந்த எண்ணிக்கை 360 இற்கும் அதிகமாகும் என்றும் ரயில்வே திணைக்களப் பொது முகாமையாளர் பி.ஏ.பி. ஆரியரத்ன தெரிவித்தார். இந்நிலையில், ரயில் பாதைகளில் நடந்து செல்வது முழுமையாகத்தடைசெய்யப்பட்டுள்ளது. இவ்வாறு செல் வோர் பிடிக்கப்பட்டால் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் அவர் கூறினார். (த)

# மஸ்கெலியா தீ விபத்தில் 4 கடைகள் முற்றாக சேதம்



கொழும்பு, ஜன 4
மஸ்கெலியாவில் திடீரென ஏற்பட்ட தீயினால் நான்கு கடைகள் சேதமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
கவரவில கொலனி பகுதியிலுள்ள பலசரக்குக் கடை, தையல் நிலையம், களஞ்சியசாலை மற்றும் பூட்டியிருந்த கடையொன்று உட்பட நான்கு கடைகளுமே நேற்று முன்தினம் மாலை தீயினால் சேதமடைந்துள்ளன.
முதலில் பலசரக்குக் கடையிலேயே தீ ஏற்பட்டதாகவும் அதன் பின்னரே மற்றைய பகுதிகளுக்குத் தீ பரவியதாகவும் சம்பவத்தை நேரில் கண்டோர் தெரிவித்தனர்.
இதனையடுத்து பிரதேசவாசிகள் மற்றும் பொலிஸாரினதும் முயற்சியில் இரண்டு மணித்தியாலத்தின் பின் தீ முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. குறித்த தீ மின்சாரக் கோளாறு காரணமாக ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர். (த-ய-43)

# 159 பேர் கைது

கொழும்பு, ஜன 4
பாணந்துறையில் நீதிமன்றத்தைப் புறக்கணித்த நிலையில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 159 பேர் கடந்த சில தினங்களில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
பாணந்துறை பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.
பெரும் குற்றங்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய 54 பேர் இதில் உள்ளடங்குவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (த)



# சிகரெட் கடத்திய மூவர் கைது

கொழும்பு, ஜன. 4

கட்டுநாயக்க பன்னாட்டு விமான நிலையத்தில் வைத்துச் சுங்கப் பிரிவினால் 70 ஆயிரம் சிகரெட்டுக்கள் மீட்கப்பட்டன.

டுபாயில் இருந்து நேற்று அதிகாலை இலங்கை வந்த நபர்களிடம் இருந்தே 70 ஆயிரம் சிகரட்டுக்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக சுங்கப் பிரிவுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதன்போது, 3 சந்தேகநபர்கள் சுங்கப்பிரிவினால் கைது செய்யப்பட்டனர். சுமார் 35 இலட்சம் ரூபா பெறுமதியான சிகரெட்டுக்கள் மீட்கப்பட்டன எனக் கூறப்பட்டது.

65,38 மற்றும் 16 வயதுடைய குறித்த சந்தேகநபர்கள் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்ட நிலையில் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (கு)

# ஆட்சிகள் மாறினாலும் இனவாதம் குறைவதில்லை

## அசாத் சாலி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 4

இலங்கையில் எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் முஸ்லிம்களுக்கெதிரான இனவாதச் செயற்பாடுகள் குறைவடைவதில்லை என்பதற்கு ஜனாதிபதியின் வில்பத்து தொடர்பான கூற்று ஆதாரமாகும் என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

கடந்த மகிந்த ராஜபக்ச அரசில் முஸ்லிம்களுக்கெதிராக 430க்கும் மேற்பட்ட உரிமை மீறல்கள் நடைபெற்றிருந்தன. இந்த நல்லாட்சியிலும் 200க்கு மேற்பட்ட உரிமைமீறல்கள் தொடர்பாக முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அது தொடர்பாக அரசு அமைதி காக்கிறது. இந்த 23 மாத நல்லிணக்க முயற்சிகள் முஸ்லிம்கள் விடயத்தில் எவ்வித பயனும் அளித்துள்ளதாகத் தெரியவில்லை. அனைத்தும் அரசியல் நாடகமே தவிர வேறில்லை. கடந்த அரசின் அனுமதியுடனேயே முஸ்லிம்கள் மறிச்சுகட்டிய மற்றும் அவர்களின் பூர்வீகங்களில் குடியேற்றப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டது. இப்போது வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ள நிலையில், அந்தப் பிரதேசங்களை வன பிரதேசமாக அறிவிப்பது நியாயமானதல்ல.

23 மாத காலமாக வீடுகள் நிர்மாணிக்கப்படும்வரை இருந்துவிட்டு இப்போது அவற்றை வர்த்தமானி மூலம் அறிவிப்பது அந்த மக்களை அகதிகளாக்கும்வேலையாகும். ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு பிழையான தகவல்களை வழங்குபவராக இருந்துவிடக்கூடாது. அமைச்சர் ரிஷாத் அவரது உறவினர்களுக்கோ, அவரது விருப்பபடியோ இவற்றைச் செய்யவில்லை. இது கடந்த அரசின் திட்டமாகும். இதை ஜனாதிபதி விளங்காமை கவலையளிக்கின்றது. நாட்டில் முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காது என்ற ஏமாற்றமே ஜெனிவா செல்லத்தூண்டியது-என்றார். (கு)




# 5,000 ரூபா கப்பம் கோரி காசாளரை தாக்கிய குழு

கொழும்பு, ஜன. 4

மாத்தறைப் பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றில் காசாளர் ஒருவர் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

மாத்தறை பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள வர்த்தக நிலையத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பலர் அடங்கிய குழுவினர் குறித்த வர்த்தக நிலையத்திற்கு வருகை தந்து காசாளரைக் கடுமையாக தாக்கியுள்ளனர்.

5,000 ஆயிரம் ரூபா கப்பம் கோரியே குறித்த குழுவினர் காசாளரை தாக்கியுள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம்தொடர்பானகாணொலி சமூக வலைத்தளங்களில் பரவியது.

சம்பவம்தொடர்பில்பொலிஸார் மேலதிக விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர். (கு)

# ரூ. 25 ஆயிரம் தண்டம் உரியவாறு நடைமுறை

## கூறுகிறார் பொலிஸ்மா அதிபர்

கொழும்பு, ஜன. 4

போக்குவரத்து விதிகளை மீறுபவர்களுக்கு எதிராக வரவு-செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட 25 ஆயிரம் ரூபா தண்டப் பணம் பெறும் சட்டத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்தார்.

இது தொடர்பிலான கலந்துரையாடல்கள் நிறைவடைந்து சட்டம் நடைமுறைக்கு வந்தவுடன், தராதரம் பார்க்காமல் தண்டப் பணம் அறவிடப்படும் எனவும் அவர் கூறினார்.

சட்டத்தை மதித்து வாகனம் செலுத்துபவர்களுக்கு எந்தவிதத்திலும் இந்த தண்டப்பணம் அறவிடப்படமாட்டாது எனவும், அவர்களுக்கு



அநீதியிழைக்கப்படாது எனவும் அவர் மேலும் கூறினார்.

போக்குவரத்துச் சட்டங்களை மீறுபவர்களுக்கு எதிராகச் சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்த பொலிஸ் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொலிஸ்மா அதிபர் கேட்டுக் கொண்டார். (கு)

# சுப்பர் பவருக்கு ஆசைப்படுகிறார் பிரதமர் ரணில்

## திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 4

சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் ஊடாக, சுப்பர் பவர் அமைச்சராக மாற, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே முயன்று வருகின்றார் என, சோஷலிஸ மக்கள் முன்னணியின் பிரதிநிதியான முன்னாள் அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

ஜனாதிபதியாக பதவிக்கு வர முடியாது என்ற காரணத்தினால், எப்படியாவது அந்த அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கில், இந்தச் சட்டத்தைக் கொண்டு வர பிரதமர் முயற்சிக்கின்றார் என்றும் அவர் குற்றஞ் சாட்டினார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், இந்த அரசை, எந்த வகையிலும் நல்லாட்சி அரசு எனக் கூற முடியாது. இது, விச ஆட்சி அரசாகும். இதனால் இந்த அரசு, நாட்டுக்கு மட்டுமல்ல, எதிர்கால தலைமுறையினருக்கும் விசம் போன்றது.

அரசில் சுதந்திரக் கட்சி அங்கம் வகித்தாலும், ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகள் மட்டுமே செயற்படுத்தப்படுகின்றன. ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகள், நாட்டுக்கு எப்போதும் நன்மையாக அமையப்போவதில்லை-என்றார். (கு)

25% Discount
on Medical Books
Purchase Medical Books
Earn Dialog Star Points
Latest Edition & New Arrivals



5th & 6th January 2017
09.00 a.m to 5.00 p.m
at
Ladssume Hall
No. 195 A.Adiyapatham Road,
Thirunelvely, Jaffna
Hot Line - 077525377
More Details Please Call us
0768245879 / 0768425878
JEYA BOOK CENTRE

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த உறுதியுடன் செயற்படுங்கள்

## பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 4

தேசிய குறிக்கோளை அடையும் வகையில் அனைவரும் செயற்படல் வேண்டும் என்று பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

நல்லிணக்கத்தை அடைவதற்கு உறுதியுடன் செயற்படுமாறும் அவர் கோரினார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற புதுவருடத்தின் ஆரம்ப நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய குறிக்கோளை அடையும் வகையில் நல்லிணக்கம், பொருளாதார அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்பு உள்ளிட்ட செயற்றிட்டங்களைச் செயற்படுத்த உறுதியுடன்



செயற்படுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்வில், போரில் உயிரிழந்த படையினரை நினைவுகூர்ந்து இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் பாதுகாப்பு அமைச்சில் பணிபுரியும் அதிகாரிகளால் சத்தியப் பிரமாணமும் எடுக்கப்பட்டது. (கு)

# உயர்நீதிமன்றில் வாசுதேவ வழக்கு

## மாகம்புர துறைமுக ஒப்பந்தத்துக்கு எதிராக

யாழ்ப்பாணம், ஜன. 4

சீன நிறுவனத்துக்கு அம் பாந்தோட்டைத்துறை முகத்தை 99 ஆண்டு காலக் குத்தகைக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் வாசு தேவ நாணயக்கார நேற்று மனுத் தாக்கல் செய்துள்ளார்.

இலங்கை அரசு அம்பாந் தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு குத் தகைக்கு வழங் கவுள்ளது. எதிர்வரும் 7ஆம் திகதி இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது. இந்த நடவடிக்கைக்கு எதிராக மகிந்த ஆதரவு அணியினால் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சீன நிறுவனத்துக்கு வழங்குவதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப் போவதாகவும் அவர்கள் குறிப்பிட் டிருந்தனர். அதற்கு அமைவாக நேற்றைய தினம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (த-5)

## நெல்லியடிச் சந்தையில்

# குத்தகை அறவீட்டு முரண்பாட்டை நீதிமன்று ஊடாகவே தீர்க்க முடியும்

*பொலிஸார் அறிவுறுத்தல்*

யாழ்ப்பாணம், ஜன. 4

நெல்லியடிச் சந்தையில் குத்தகைப் பணம் பெறுவதில் உள்ள முரண்பாட்டைச் சீர்ப்படுத்த நேற்று நடத்தப்பட்ட சந்திப்பில் இணக்கம் காணப்படவில்லை. அதனால் இணக்க முயற்சி கைவிடப்பட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய பொலிஸாரால் அறிவுறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பு நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது. மரக்கறி மற்றும் மீன் சந்தைகளின் குத்தகைக்காரர்கள் இருவரும் குறித்த இரண்டு சந்தைகளின் வியாபாரிகள் 30 பேரும் கலந்து கொண்டிருந்தனர்.

குத்தகைப் பணம் பெறுவதில் உள்ள முரண்பாட்டை தீர்க்கும் பொருட்டு நெல்லியடிப் பொலிஸார் இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தனர்.

சந்தையில் வழமையாக நாளாந்தம் ஒவ்வொரு வியாபாரியிடமிருந்தும் தலா 70 ரூபா வீதம் இதுவரை பெறப்பட்டு வந்தது. ஆனால் குத்தகை எடுத்திருந்தவர்கள் 70 ரூபா போதாது என்றுகூறி நாளாந்தம் ஒவ்வொ வியாபாரியிடமிருந்தும் 90 ரூபாவைத் தருமாறு கேட்டு அறவிட முற்பட்ட போது, வியாபாரிகள் அதற்குச் சம்மதம் தெரிவிக்கவில்லை. அதனால் இருதரப்பினருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது.

கடந்த ஒரு வாரமாக இந்தப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. அதனால் வியாபாரிகள் குத்தகைக்காரருக்குப் பணம் செலுத்தவில்லை.

இந்தப்பிரச்சினைக்கு நேற்றைய சந்திப்பிலும் தீர்வு பெறமுடியவில்லை. அதனால் இதற்கான தீர்வை நீதிமன்றில் பெற்றுக்கொள்ளுமாறு குறித்த இரண்டு தரப்பினருக்கும் நேற்று அறிவுறுத்தியதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,26)

# நல்லாட்சிக்கு எதிராக நாடு முழுவதும் போர்

## ஜே.வி.பி. நேற்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 4

லஞ்ச, ஊழல் குற்றவாளிகளையும், கொலைகாரர்களையும் பாதுகாப்பதும் நாட்டைப் பன்னாட்டுச் சமூகத்துக்கு விற்பனை செய்தததுமே 2016ஆம் ஆண்டில் நல்லாட்சி அரசால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளாகும். மக்கள் ஆணையை மீறிச் செயற்பட்டு வரும் இந்த அரசின் செயற்பாடுகளைக் கண்டித்து இந்த மாதம் முதல் நாடு தழு விய ரீதியில் போராட்டங்களை நடத்தவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) எச்சரிக்கை விடுத்துள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அதன் தலைவரும், எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவுமான அநுர குமார திஸாநாயக்க மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

நல்லாட்சி அரசு ஆட்சிபீடமேறி இரண்டு வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. எந்த விதமான அபிவிருத்தியையும் முன் னெடுக்கவில்லை. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் கடந்த காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளுக்குத் தண்டனை வழங்கப்படும் என்று கூறினார்கள். நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை.

லசந்த விக்கிரமதுங்க, தாஜுதீன், ரத்துபஸ்வெல, வெலிக் கடை போன்ற கொலை வழக்குகளை விசாரணை செய்து உரிய தீர்வைப் பெற்றுக் கொடுப்போம் என்று கூறினர். வெறும் செய்திகளாக மட்டுமே உள்ளன. ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் பொலனறுவைச் சொத்துக்களையோ அல்லது பிரதமர் ரணில் விக்கிரசிங்கவின் கொழும்பு சொத்துக்களையோ இவ்வாறு விற்பனை செய்தால் நாம் எந்த எதிர்ப்பையும் வெளியிட்டிருக்கமாட்டோம்.

ஊழல் குற்றவாளிகள், கொலைகாரர்களைப் பாதுகாத்தே இரண்டு வருடத்தை அரசு நகர்த்திவிட்டது. இனியும் இதனை எம்மால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எதிர்ப்புத் தெரிவித்து நாளை (இன்று) புறக்கோட்டை ரயில் நிலையம் முன்பாகத் துன் டுப்பிரசுரங்களை வெளியிடவுள்ளோம்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீனாவுக்கு வழங்கு வதற்கு எதிர்ப்பைத் தெரிவித்து நாளை மறுதினம் அந்தத் துறைமுகத்துக்கு முன்னாலும், கொழும்பு துறைமுகத்தின் கிழக்குப் பகுதியை வெளிநாட்டுக் கம்பனிக்கு வழங்கும் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் 17 ஆம் திகதி அந்தத் துறைமுகத்துக்கு முன்னாலும் நாம் பெரிய ஆர்ப்பாட்டங்களையும் மேற்கொள்ளவுள்ளோம்.

இதனை ஜே.வி.பியினரால் நடத்தப்படும் ஆர்ப்பாட்டமாகக் கருதாமல் பொதுச் சொத்துக்களை விற்பனை செய்யும் அரசின் நடவடிக்கையை எதிர்க்கும் ஆர்ப்பாட்டமாகக் கருதி, அனைவரும் கலந்து கொண்டு அரசுக்கு எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும் - என்றார். (த-5)

# திருட்டுப் பொருள்களுடன் 3 பேர் வீமன்காமனில் கைது

தெல்லிப்பழை வீமன்காமம் பகுதியில் வீட்டு ஜன்னல் மற்றும் தண்ணீர் இறைக்கும் குழாய் உள்ளிட்ட பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டில் 3 பேரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

"திருட்டு இடம்பெற்ற பகுதியில் சனநடமாட்டம் குறைவு. அதனைச் சாதகமாகப் பயன்படுத்தி திருடிய பொருள்களை வேறு இடத்துக்குக் கொண்டு செல்ல முற்பட்ட போதே சந்தேகநபர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். அதே இடத்தைச் சேர்ந்த 20, 21, 27 வயதுடைய 3 பேரே கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து திருட்டுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

விசாரணையின் பின்னர் சந்தேகநபர்கள் மல்லாகம் நீதிவான் மன்றில் முற்படுத்தப் பட்டனர். அவர்களை எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதி மன்று உத்தரவிட்டது" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன.4

நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையின் வேலுப்பிள்ளை மண்டபத் திறப்பு விழா மற்றும் பரிசளிப்பு விழா நிகழ்வுகள் நாளை காலை 9 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

வித்தியாலய மண்டபத்தில் நடைபெற உள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ந. சிவநேசனும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-ரி)

# தெய்வீகக் கலையரங்கு

யாழ்ப்பாணம், ஜன.4

காரைநகர் கிழவன்காடு கலா மன்றத்தின் ஏற்பாட்டில் தெய்வீகக் கலையரங்கு நிகழ்வு நாளை மாலை 5 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் நடைபெற உள்ள இந்த நிகழ்வில் சொற்பொழிவு, சிறப்புப் பட்டிமன்றம், கலா மன்றத்தின் இசை மற்றும் நடனத் துறையினரின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-ரி)

# கல்வியியல் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.4

கல்வியியல் சொற்பொழிவும் கலந்துரையாடலும், வாழ்க்கைகான கல்வியும் இலத்திரனியல் ஊடான கற்கையும் என்ற நிகழ்வு இன்று புதன்கிழமை பி.ப.3 மணிக்கு நடைபெறும் என்று யாழ். ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம் அறிவித்தது.

ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கி 3ஆம் மாடிக் கட்டடத்தில் அமைந்துள்ள நோத் லங்கா IIரி பன்னாட்டுப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் லண்டன் பல்கலைக்கழக கலாநிதி பிரிச்சி சோமகியால் கலந்து கொள்வார்.

கல்வியியல் ஆய்வுத்துறையில் ஈடுபட்டுள்ளோர், அதிபர், ஆசிரியர்கள், கல்விப் பணிப்பாளர்கள், கல்வியியலாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

# 3000 பேருக்குத் தொழில் வாய்ப்பு

## *குளியாப்பிட்டிய மோட்டார் வாகன தொழிற்சாலை அமைக்கும் பணிகள் நேற்று ஆரம்பம்*

கொழும்பு, ஜன. 4

3 ஆயிரம் நேரடித் தொழில் வாய்ப்புக்களை வழங்கும் வகையில் கொழும்பு குளியாப்பிட்டிய - மஹனுகலந்தவத்தயில் மோட்டார் வாகன தொழிற்சாலை நிறுவப்படவுள்ளது. வொக்ஸ்வெகன என்று பெயிரிடப்பட்ட அந்தத் தொழிற்சாலைக்கான அடிக்கல்லை ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இணைந்து நேற்று மாலை நட்டனர்.

கடந்த தேர்தல் காலப்பகுதியில் அரசினால் வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைவாக, ஜேர்மனி அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள 26.5 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் அமைக்கப்படும் இந்தத்தொழிற்சாலையின் நிர்மாணப் பணிகளை இரண்டரை வருட காலப்பகுதியினுள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் கருத்திட்டத்தின் ஊடாக மோட்டார் வாகன தொழிற்சாலை அமைக்கப்படுதல் மட்டுமன்றி மோட்டார் வாகன தொழிற்துறை தொடர்பான பயிற்சிகளை இளையோருக்கு வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனூடாக இளையோருக்கான 3 ஆயிரம் நேரடித் தொழில் வாய்ப்புக்களும், 10 ஆயிரம் மறைமுக தொழில் வாய்ப்புக்களும் உருவாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, காமினி ஜயவிக்ரம பெரேரா, எஸ்.பி. நாவின்ன, அகிலவிராஜ் காரியவசம் மற்றும் வெஸ்டன் ஒடோமொபைல் தனியார் நிறுவனத்தின் பணிப்பாளர் ரீசோ ரவுப் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் பங்குபற்றினர். (வ-4)

# கைவிடப்பட்ட ரயில் பெட்டிகளை அகற்றும் பணிகள் ஆரம்பம்


யாழ்ப்பாணம், ஜன. 4

யாழ்ப்பாணம்து காங்கேசன்துறைப் பகுதியில் 1990ஆம் ஆண்டில் தரித்து நின்று பின்னர் கைவிடப்பட்ட ரயில் பெட்டிகளை அகற்றும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு இறுதியாக 1990ஆம் ஆண்டு கொழும்பில் இருந்து வந்த நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை ரயில் பெட்டிகள் இவை என்று தெரிவிக்கப்பட்டது.

"காங்கேசன்துறை ரயில் நிலையத்தில் 26 வருடங்களாகக் குறித்த ரயில் இயந்திரம் மற்றும் பெட்டிகள் கைவிடப்பட்டிருந்தன. அந்தப் பகுதியில் தற்போது மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மேற் கொள்ளபட்டு வருகின்றன.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட பகுதியில் உள்ள சில குறுக்கு வீதிகளின் பாதையின் போக்குவரத்து இந்த ரயில் பெட்டிகள்



பெரும் இடையூறாகக் காணப்படுகின்றன. இவற்றினை அகற்றுமாறு கோரிக்கை விடப்பட்டிருந்தது. பழைய ரயில் பெட்டிகள் அகற்றும் பணிகள் ரயில்வே திணைக் களத்தால் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. அதற்காக நீராவியில் இயங்கும் மிகப் பெரும் பாரம் தூக்கி யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அதன்மூலமாககுப்பை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன" என்றுமேலும் தெரிவிக்கப்பட்டது. (வ-4,101)

# யாழ்ப்பாண நீதிவான் மன்ற அமர்வுகள் இரு இடங்களில்

## திங்கள் முதல் இடம்பெறுகின்றன

யாழ்ப்பாணம், ஜன.4

யாழ்ப்பாண நீதிவான் மன்றம் அமர்வுகள் இரு இடங்களில் கடந்த திங்கட்கிழமை முதல் இடம்பெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

பொலிஸாரினால் முன்வைக்கப்படும் குற்றவியல் வழக்குகள் யாழ்ப்பாண நீதிமன்ற கட்டடத் தொகுதியிலும் சட்ட விதிமுறை மீறல்கள் மற்றும் தாபரிப்பு வழக்குகள் யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள சிறுவர் நீதிவான் மன்றக் கட்டடத் தொகுதியிலும் இடம்பெறுகின்றன.

யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெறும் யாழ். நீதிவான் மன்ற அமர்வில் நீதிவான் சி. சதீஸ்தரன் முன்னிலையில் வழக்குகள் இடம்பெறுகின்றன. யாழ்ப்பாண சிறுவர் நீதிமன்றில் இடம்பெறும் அமர்வில் மேலதிக நீதிவான் ஜீவராணி கருப்பையா முன்னிலையில் நடைபெறுகின்றன.

யாழ்ப்பாணம் நீதிவான் மன்றுக்கு மேலதிக நீதிவானாக யாழ்ப்பாண சிறுவர் நீதிமன்ற நிதிவான் ஜீவராணி கருப்பையா நீதிச்சேவை ஆணைக்குழுவால் கடந்த முதலாம் திகதி முதல் இடமாற்றம் பெற்றார். இதனையடுத்தே இந்த ஏற்பாடுகள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த இரண்டு அமர்வுகளையும் நடத்த யாழ்ப்பாண நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் இட வசதியின்மை காரணமாகவே இவ்வாறு இரண்டு இடங்களில் அமர்வுகளை நடத்த அனுமதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதில் மது வரித் திணைக்களம், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை, உள்ளூராட்சி சபைகள் உள்ளிட்ட அரச துறை திணைக்களங்களினால் முன்வைக்கப்படும் வழக்குகள் மற்றும் தாபரிப்பு வழக்குகளே யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள சிறுவர் நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் மேலதிக நீதிவான் முன்னிலையில் இடம்பெறுகின்றன. பொலிஸாரின் முன்வைக்கப்படும் வழக்குகள் உள்ளிட்ட குற்றவியல் வழக்குகள் யாழ்ப்பாண நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் இயங்கும் நீதிவான் மன்ற அமர்வில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ)

## நெடுந்தாரகை கையளிப்பு



தீவகம் குறிகட்டுவான் – நெடுந்தீவு இடையே பயணிகள் சேவையில் ஈடுபடுவதற்காக வடக்கு மாகாண சபையினால் நெல்சிப் நிதியில் 150 மில்லியன் ரூபா செலவில் புதிதாகக் கட்டப்பட்ட நெடுந்தாரகை கொழும்பு டொக்கியாட் நிறுவனத்தில் அதன் பணிப்பாளர் கோசியினால் வடக்கு மாகாண தலைமைச் செயலாளரிடம் உத்தியோகபூர்வமாக நேற்றுக் கையளிக்கப்பட்டது. (வ-101)

# 2016ஆம் ஆண்டு திட்டங்களுக்கு ரூபா 6,300 மில்லியன் கிளிநொச்சியில் செலவீடு

யாழ்ப்பாணம், ஜன. 4

கிளிநொச்சி மாவட்டத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான மொத்தத் திட்டத்துக்காக 6 ஆயிரத்து 363 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டதாக கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.அருமைநாயகம் தெரிவித்தார்.

"கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியில் அதிகளவு இரணைமடுக் குளத்தின் அபிவிருத்திக்கானது. மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆயிரத்து 130 வீடுகளுக்காக 900 மில்லியன் ரூபா கிடைக்கப்பெற்றது.

மீள்குடியேற்ற அமைச்சின் ஊடான ஏனைய திட்டங்களான வாழ்வாதாரம், பகுதி வீட்டுத் திருத்தம், கிணறு அமைத்தல் ஆகிய திட்டங்களுடன் நீர் விநியோகத் திட்டமும் கிடைக்கப் பெற்றன. இவ்வாறே கிராமத்துக்கு ஒரு மில்லியன் திட்டத்தின் கீழ் 95 மில்லியன் ரூபா பெறுமதியிலான திட்டங்களும் , மாவட்டத்தின் இரு முதன்மைச் செயலகங்களுக்கான அலுவலக அமைப்புப் பணிகளும் முடிவுறுத்தப்பட்டன.

பூநகரி மற்றும் கண்டாவளை ஆகிய பிரதேச செயலகக் கட்டடங்கள் தொடர் திட்டத்தின் கீழ் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதிக்கான திட்டங்கள் உள்ளிட்ட அனைத்து அபிவிருத்திப் பணிகளுக்கும் 2016ஆம் ஆண்டு 6 ஆயிரத்து 363 மில்லியன் ரூபா நிதி மாவட்ட அபிவிருத்திக்காக செலவிடப்பட்டது" என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

(வ-101)

# அதிபர் பரீட்சையில் சித்தியடையாதோரை ஆசிரிய ஆலோசகராக நியமிக்க எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 4

இலங்கை அதிபர் சேவை தரம் 111 போட்டிப் பரீட்சையில் சித்தியடையாதோர் கடமை நிறைவேற்று அதிபராகப் பாடசாலைகளில் கடமையாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட நிலையில், அவர்கள் ஆசிரிய ஆலோசகர்களாக நியமிக்கப்படவுள்ளமைக்கு வடக்கு மாகாண ஆசிரிய ஆலோசகர்கள் சங்கம் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

ஆசிரிய ஆலோசகர் உள்ளிட்ட பதவிகளுக்கு கடமை நிறைவேற்று அதிபர்களாக கடமையாற்றியோர் விண்ணப்பிக்க முடியும் என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்திருந்தார்.

"பல வருடங்களாகப் போராட்டம் நடத்தி உயர் நீதிமன்றம் வரை சென்று நீதிமன்றத் தீர்ப்பின்படி 'இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவை' உருவாகுவதற்கான நடவடிக்கையில் எமது சங்கமும் கொழும்பு கல்வி அமைச்சும் தீவிரமாகச் செயற்பட்டுவரும் நிலையில், ஆசிரிய ஆலோசகர் சேவைப் பிரமாணக் குறிப்புக்குப் புறம்பாக கடமை நிறைவேற்று அதிபர்களை போட்டிப் பரீட்சையின்றி எழுந்தமானமாக இந்தப் பதவியை வழங்குவற்கு நடவடிக்கை எடுக்கப்படுவது நல்லதல்ல.

இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டால், எமது சேவை உருவாக்கத்துக்குத் தடையாக இந்த நடவடிக்கை அமைந்துவிடும் என்பதால் நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம்.

கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு தீர்வு ஒன்றை முன்வைப்பதை எமது சங்கம் எந்த வகையிலும் ஆட்சேபிக்கவில்லை. அவர்களை இந்தச் சேவையில் உள்வாங்குவதாயின் உரிய முறையில் விண்ணப்பங்களைக் கோரி போட்டிப் பரீட்சையின் மூலமாக அவர்களைத் தெரிவு செய்வதை எமது சங்கம் ஆட்சேபிக்காது" என்று வடக்கு மாகாண ஆசிரிய ஆலோசகர்கள் சங்கம் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வ-4)

# இருவரைக் குத்தி காயப்படுத்திய குற்றத்தில் 2 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 4

இரண்டு பேரைக் இரும்புக் கம்பியால் குத்திக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் 2 பேரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயத்துக்கு அருகில் கடந்த 25ஆம் திகதி இரண்டு நபர்கள் இரும்புக் கம்பியால் குத்தப்பட்டுப் படுகாயமடைந்தனர். அது தொடர்பில் பொலிஸில் முறையிடப்பட்டது. விசாரணை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தில் 4 பேரைக் கைது செய்ததாகத் தெரிவித்தனர்.

"சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 5 பேர் தேடப்படுகின்றனர். இரண்டு இளைஞர் தரப்புகளுக்கு இடையே நீண்ட காலமாக இருந்து வந்த தகராறே இதற்குக் காரணம் என்று ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டதாகப் பொலிஸார் கூறினர்.

(வ-4)

# பரீட்சைப் பெறுபேறு வெளிவராததால் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பாதிப்பு

தென்னிலங்கையிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பரீட்சார்த்திகளது கற்பித்தல் பயிற்சிப் பெறுபேறுகள், ஒப்படைப் பெறுபேறுகளை அந்தக் கலாசாலை நிர்வாகம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. அதனாலேயே ஒரு வருடம் கடந்தும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படவில்லைஎன்றும்தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பரீட்சைக்குத் தோற்றி பெறுபேற்றை எதிர்பார்த்திருப்பவர்கள் தெரிவித்ததாவது:

கடந்த வருடம் மார்ச் மாதம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் பயின்ற ஆசிரியர்களுக்கான இறுதிப் பரீட்சைகள் நடத்தப்பட்டன. இந்தப் பரீட்சைகளின் பெறுபேறுகள் கடந்த வருடம் ஜூலை மாதமளவில் வெளியிடப்படும் என்று கூறப்பட்டபோதும் இதுவரை வெளியிடப்படவில்லை.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படாமல் இழுத்தடிக்கப்படுவதனால், எம்மை இலங்கை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கும் செயற்பாடு தாமதமாகிறது. அதனால் எமது சம்பளம் அதிகரிக்கப்படாத நிலை தொடர்கிறது. நாம் தொடர்ந்தும் பாதிக்கப்படுகிறோம். எனவே பெறுபேறுகளை விரைந்து வெளியிடுமாறு கோருகிறோம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கல்வி அமைச்சர் உள்ளிட்டவர்களுக்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்களால் கோரிக்கை மனுக்கள் அனுப்பப்பட்டிருந்தன. அவற்றுக்கு ஜனாதிபதியிடமிருந்தோ கல்வி அமைச்சரிடமிருந்தோ எந்தவொரு பதிலும் இதுவரை கிடைக்கவில்லை.

ஆசிரியர் பரீட்சைப் பெறுபேறுகள் ஒரு வருடமாகின்ற நிலையில் வெளியிடப்படாதமை, அதனால் நாங்கள் பாதிக்கப்படுகின்றமை குறித்து வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு, வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் இந்த விடயத்தில் உரிய கவனம் செலுத்தாமல் கண்மூடியிருந்து வருகின்றனர்.

ஆசிரியர் கலாசாலைப் பரீட்சார்த்திகளின் பரீட்சைப் பெறுபேறுகள் 2 வாரங்களில் வெளியிடப்படும் என்று ஆசிரிய தொழிற்சங்கம் ஒன்று கடந்த மாத முற்பகுதியில் கூறியிருந்தது. எனினும் இதுவரை பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை. அதற்கான முயற்சியும் இடம்பெறவில்லை.

வடக்கு மாகாண பரீட்சார்த்திகளில் அதிகளவானவர்கள் 6 ஆயிரம் ரூபா மாதாந்தச் சம்பளமாகப் பெறும் ஆசிரிய உதவியாளர்கள். ஆனால் தென்னிலங்கையிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயின்ற பரீட்சார்த்திகள் ஏற்கனவே இலங்கை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர் – என்று ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பரீட்சைக்குத் தோற்றி பெறுபேற்றை எதிர்பார்த்திருப்பவர்கள் தெரிவித்தனர்.

(வ-4,426)

# திருட்டுக் குற்றச்சாட்டில் இளைஞன் கைது

வீடு புகுந்த 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் 6 ஆயிரத்து 500 ரூபா பணம் என்பவற்றைத் திருடிய குற்றச்சாட்டில் ஊர்காவற்றுறைப் பகுதியைச் சேர்ந்த இளைஞனைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் திருட்டு யாழ்ப்பாணம், திருநெல்வேலி - ஆடியபாதம் கிழக்கு வீதியில் கடந்த திங்கட்கிழமை அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றது.

"வீட்டு உரிமையாளர் இயற்கைக் கடன் கழிப்பதற்கு கதவைத் திறந்து வெளியில் சென்றபோது, திருடர் உள் நுழைந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

காலையில் பொருள்கள் திருடப்பட்டமை தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதன்படி விசாரணை முன்னெடுக்கப்பட்டது. கரம்பன் கிழக்கு ஊர்காவற்றுறைப் பகுதியைச் சேர்ந்த இளைஞனைச் சந்தேகத்தில் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-4)

# 3,270 மில்லியன் நிதிச் செலவில் முல்லைத்தீவில் அபிவிருத்தி

## மாவட்டச் செயலர் தகவல்

முல்லைத்தீவு, ஜன.4
முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 2016ஆம் ஆண்டில் மொத்தமாக 3 ஆயிரத்து 270 மில்லியன் ரூபா நிதி அபிவிருத்தி திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என மாவட்ட செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 2016ஆம் ஆண்டில் மொத்தமாக 3 ஆயிரத்து 270 மில்லியன் ரூபா நிதிக்கான அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு இடம்பெற்ற வேலைத் திட்டங்களில் மீள்குடியேற்ற அமைச்சின் 8 லட்சம் ரூபா பெறுமதியிலான 1035 வீடுகள் அமைக்கப்பட்டது.

இதேபோன்று 170 பகுதி வீட்டுத் திருத்தங்களும், உட்கட்டுமான அபிவிருத்துக்காக கிராமத்திற்கு ஒரு மில்லியன் திட்டத்தின் கீழ் 136 மில்லியன் ரூபாவும், கிணறு களை அமைப்பதற்கு 100 மில்லியன் ரூபாவும் வாழ்வாதார உதவியாக 150 மில்லியன் ரூபாவுடன், 38.7 மில்லியன் ரூபாவிலான பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலான வேறு திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன-என்றார். (க-101)



பாசையூர் கடற்றொழிலாளி ஒருவரின் வலையில் நேற்றுச் சிக்கிய நீளமான சுறாமீன், கூடிய விலைக்கு விற்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது (த-23)

## புத்தாண்டுத் தினத்தில் பிறந்த 10 குழந்தைகள்

யாழ்ப்பாணம் ஜன.4
புத்தாண்டு தினத்தன்று யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் பத்து பிரசவங்கள் இடம்பெற்றன.

வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதியில் சேர்க்கப்பட்ட கர்ப்பிணி தாய்மார்களில் பத்து பேர் குழந்தைகளைப் பிரசவித்தனர். இதில் ஆறு ஆண் குழந்தைகளும் நான்கு பெண் குழந்தைகளும் புத்தாண்டு தினத்தன்று பிறந்துள்ளன.

புத்தாண்டின் குழந்தைகளை பிரசவித்த தாய்மார்கள் அங்கு இனிப்புக்கள் மற்றும் கற்கண்டுகளை வழங்கி மகிழ்ச்சியடைந்தனர். (க-17)

## கற்குழி வாள்வெட்டு; கைதாகினர் நால்வர்

புதுவருட தினத்தன்று வவுனியா, கற்குழிப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு மற்றும் குழு மோதல் தொடர்பில் நான்கு பேர் கைது செய்யப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, கற்குழி பகுதியில் உள்ள இரு குழுக்களுக்கிடையில் முரண்பாடுகள் இருந்துள்ளது. புதுவருட தினத்தன்று ஒரு குழுவினர் தமது வீட்டில் பாட்டு போட்டு வீட்டின் முன் ஆடிக் கொண்டிருந்துள்ளனர்.

இதனையடுத்து ஆத்திரமடைந்த அப்பகுதியைச் சேர்ந்த மற்றுமோர் குழுவினர் அங்கு வந்து பாட்டு போட்டு ஆடிக்கொண்டிருந்தவர்களுடன் முரண்பட்டுக் கொண்டதுடன் வாள், கம்பிகள், பொல்லுகளால் அவர்களைத் தாக்கவும் முயற்சித்தனர். இதனையத்து குறித்த வீட்டில் இருந்த பெண்கள் சமரசம் செய்ய முயச்சித்தனர். இருந்தும் அங்கு வந்த இளைஞர்கள் வீடு புகுந்துதாக்கமுற்பட்டபோது இடம்பெற்ற கைகலப்பில் இருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு, வாள்வெட்டு, குழு மோதல் தொடர்பில் நான்கு பேர் கைது செய்யப்பட்டனர். மேலும் மூவர் தேடப்படுகின்றனர் எனத் தெரிவித்தனர். (க-21,402)

## ஆலயத்துக்குச் செல்லும் வீதி அடைக்கப்பட்டதால் சிரமம்

வவுனியா, ஜன.4
வவுனியா சிதம்பரபுரம் பகுதியிலுள்ள கிறிஸ்தவ ஆலயத்திற்குச் செல்லும் பிரதான பாதையை அந்தப் பகுதி கிராம சேவையாளர் கட்டையிட்டு அடைத்துள்ளார். இதனால் அப்பகுதியால் ஆலயத்திற்கு செல்ல முடியாது மக்கள் சிரமப்படுகின்றனர் என ஆலயச் சபையின் குரு தெரிவித்தார்.

கடந்த 20ஆம் திகதி சிதம்பரபுரம் பகுதியிலுள்ள எமது ஆலயத்திற்குச் செல்லும் பிரதான வீதியை மறித்து ஆலயத்துக்குப் பொதுமக்கள் செல்ல வழிவிடாது கட்டைகள் வீதியின் நடுவே போடப்பட்டு அடைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து சிதம்பரபுரம் பகுதியிலிருக்கும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. எமது ஆலயத்துக்கு விசேட பூசைக்குச் செல்லும் மக்களைச் செல்லவிடாது தடுக்கும் நோக்கில் திட்டமிட்டு இவ்வாறு கட்டைகள் நடப்பட்டுள்ளன. கடந்த 25 வருடங்களுக்கு மேலாக இந்த ஆலயத்தில் வைத்து இந்த பகுதி மக்களுக்கு சேவையாற்றி வருகின்றோம். இந்துப் பாதையைப் பயன்படுத்தி 200 க்கும் மேற்பட்ட மக்கள் ஆலயவழிபாட்டிற்கு வந்தும் செல்கின்றனர். கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நிகழ்வுகளின்போது இப்படியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த 15ஆம் திகதிக்கு முன்னர் குறித்த வீதியை அடைத்து விடுமாறு பொறுப்பாக இருக்கும் கிராம சேவையாளர் அறிவுறுத்தினார். அதற்கு அமைவாகவே நாம் கடந்த 20 ஆம் திகதி குறித்த பகுதியை அடைத்தோம் என வேலி போட்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் குறித்து பொறுப்பாக இருக்கும் கிராமசேவையாளருக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்ட போதும் தொலைபேசி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. குறித்த கிராம சேவையாளர் அலுவலக நேரத்தில் மட்டுமே தொலைபேசி பயன்பாட்டில் வைத்திருப்பதாகவும் அலுவலகத்திலிருந்து சென்றால் தனது தொலைபேசியை நிறுத்திவைத்து விடுவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்தனர்.

'இந்த விடயம் எனது கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை, காணி உத்தியோகத்தரிடம் இது தொடர்பாக கலந்துரையாடி ஆலயத்துக்குச் செல்வதற்கு 10அடி பாதையை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்' என வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராஜா தெரிவித்தார். (க-21)

# மன்னாரில் மீன்பிடி வளர்ச்சிப் பாதையில்

## கடற்றொழில் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் கூறுகிறார்

மன்னார், ஜன.4
மன்னார் மாவட்டத்தில் 2015இல் வீழ்ச்சி கண்ட மீன்பிடி 2016இல் சற்று வளர்ச்சிப் படியை நோக்கிச் சென்றது என மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 'மன்னார் மாவட்டத்தின் கடற்றொழிலானது 2015இல் பெரும் வீழ்ச்சி கண்டிருந்தது. இவ்வாறு வீழ்ச்சிகண்ட மீன்பிடியானது 2016இல் சற்று வளர்ச்சிப் படியை நோக்கிச் சென்றுள்ளது. இதன் பிரகாரம் மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இங்கு வாழும் 11 ஆயிரம் மீனவர்களின் வாழ்வாதாரத்துக்காக 4 ஆயிரம் கடற்கலங்கள் உள்ளன.

இவ்வாறுள்ள கடற்கலங்களின் மூலம், போர் அழிவுகளின் பின்பும் 2014ஆம் ஆண்டில் 25 ஆயிரத்து 938 மெற்றிக் தொன் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தனர்.

இருப்பினும் 2015இல் இந்த அளவில் பெரிய வீழ்ச்சி ஏற்பட்டு இதன் அரைவாசியையே ஈட்ட முடிந்தது. 2015இல் பெறப்பட்ட மீன்பிடியானது 13 ஆயிரத்து 509 மெற்றிக் தொன்னாகும். இருப்பினம் தற்போதும் 2014ஆம் ஆண்டின் மீன்பிடியை எட்டமுடியாவிட்டாலும் சற்று அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் 2016ஆம் ஆண்டில் மன்னார் மாவட்டத்தின் மொத்த கடல் உற்பத்தியானது 16 ஆயிரத்து 308 மெற்றிக் தொன் எனக் கண்டறியப்பட்டுள்ளது- என்றார். (க-101)

# 13 மில்லியன் ரூபா செலவில் நடைபாதை வியாபார அங்காடி

யாழ்ப்பாணம், ஜன.4
13 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும் யாழ். நகர நடைபாதை வியாபாரிகளுக்கான அங்காடி விற்பனைக் கூடத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மத்திய பஸ்தரிப்பு நிலையத்துக்கு அருகில் மாநகராட்சி மன்றத்துக்குச் சொந்தமான வளாகத்தில் இந்த அங்காடி அமைக்கப்பட்டு வருகின்றது.

நகரில் வீதியோரங்களில் இருந்து நடைபாதை வியாபாரம் செய்யும் வியாபாரிகள் இந்த நடைபாதைக் கூடத்திலேயே வியாபாரம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படும் என்று மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.

அதேசமயம் முனீஸ்வரன் வீதி அகலித்துப் புனரமைக்கப்படவுள்ளதால் இந்தப் பகுதியில் உள்ள நடைபாதை வியாபாரமும் இந்த அங்காடிக்கு மாற்றப்படும். இந்த வீதி புனரமைக் கப்பட்டு மக்களின் போக்குவரத்துக்கும் முழுமையாக திறக்கப்படும்.

நகரில் ஏற்பட்டிருக்கும் போக்குவரத்து நெரிசல்களைத் தவிர்க்கும் முகமாக இந்த வீதி மக்கள் பயன்பாட்டுக்கு விடப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. (க-17)



# பி.எச்.ஐமாரின் புறக்கணிப்பு சட்டவிரோதம்

## கூறுகிறார் வட மாகாண சுகாதார அமைச்சின் செயலர்

யாழ்ப்பாணம், ஜன 4

சேவைக்குச்சேரும்போது நாட்டின் எந்தப்பாகத்திலும் கடமையாற்றச் சம்மதம் என உறுதியளித்து சேவையில் சேர்பவர்கள் வெளி மாவட்டம் ஒன்றுக்கு இடமாற்றப்படும் போது, அமைச்சு பழிவாங்குகின்றது எனக் கூறுவது புரியாத விடயமாக இருக்கின்றது என வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் இடமாற்றத்திற்கு எதிரான பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தொடர்பில் விளக்கமளிக்கும் பொருட்டு அவரால் அனுப்பிவைக்கப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

அரச சேவையில் இடமாற்றம் என்பது தவிர்க்க முடியாத விடயமாகும். எனவே பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மட்டும் விதி விலக்காக இருக்க முடியாது. இந்தச் சேவைக்கான ஆளணி எல்லா மாவட்டங்களிலும் குறைந்த அளவில் காணப்படும் போது அதிகமான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாக உள்ள சூழ்நிலையில் சில அலுவலர் கள் சில காலமாவது வெளி மாவட்டத்தில் பணியாற்ற வேண்டியது அவசியமாகின்றது. வெளிமாவட்டத்தில்நீண்ட காலம் பணியாற்றுவோர் சொந்த மாவட்டத்துக்கு இட மாற்றம் கோரும் சந்தர்ப்பத் தில் வெளிமாவட்டங்களில் பணிகள் பாதிக்கப்படாமல் அவர்களுக்கு நீதி வழங்க வேண்டியதும் அமைச்சின் பொறுப்பாகும். இந்த நடவடிக்கைக்காகத் தொடர்ச்சியாக சொந்த மாவட்டங்களில் கூடிய காலம் கடமையாற்றியவர்கள் வெளி மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்வேண்டும். இவர்களின் சங்கம் குறிப்பிடுவது போலன்றி அலுவலர்களின் முன்னுரிமைகளை விட மக்களுக்கு அவசியமான இடங்களிலேயே சேவை வழங்கப்படல் வேண்டும்.

தாபனக்கோவை விதிகளுக்கு மாறான இடமாற்றம் என இந்தச் சங்கம் கருதுமாயின் அவர்களுக்கான மேன்முறையிடுகளைச் செய்து நீதியைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகள் உள்ளன. சட்ட ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் பொறுப்புடையவர்கள் அனைவரது அங்கீகாரமும் பெற்றே இட மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தனிப்பட்ட முறையில் செயலரின் முடிவு அல்ல. இடமாற்றத்தின் மூலம் தனிப்பட்ட முறையில் பாதிக்கப்படுபவர்களின் மேன் முறையீட்டை ஆராய்வதற்காக அழைக்கப்பட்ட போதும் சங்கம் அதனை நிராகரித்து, பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதானது டெங்கு மற்றும் தொற்று நோய்கள் பரவக் கூடிய இந்த கால கட்டத்தில் மக்கள் விரோத நடவடிக்கையாகவே கருதப்படவேண்டும் - என்றுள்ளது. (சு-8,101)

# சுகாதார அமைச்சர் இன்று சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன.4

இடமாற்றங்கள் தொடர்பாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் கடந்த மாதம் 19 ஆம் திகதியிலிருந்து ஈடுபட்டுவருகின்றனர். பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் இடமாற்றம் தொடர்பாக இலங்கையில் வட மாகாணத்தில் மட்டும்தான் கூடிய பாதிப்புக்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இடமாற்றங்களின் போது அரச சுற்றறிக்கைகளை ஏற்று நடப்பதாகவும் இல்லை எனக் குற்றம் சாட்டி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். இன்று 17ஆவது நாளாக அவர்களது போராட்டம் தொடரும் நிலையில் வடக்கு மாகாண சுகாதா அமைச்சர் பொதுச் சுகாதார பரிசோதகர்களை இன்று சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆரம்பத்திலேயே எங்களுடன் அவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடியிருந்தால் இவற்றை இலகுவாகத் தீர்த்திருக்கலாம். எனினும் அவர்கள் ஆரம்பத்திலிருந்து எங்களுடன் எந்தத் தொடர்பையும் ஏற்படுத்தவில்லை. அத்துடன் அவர்கள் தங்களின் பிரச்சினைகளைத் தெளிவாக எங்களுக்கு விளங்கப்படுத்தியிருக்கலாம். கடந்த சில நாள்களுக்கு முன்னர் ஒரு தொகுதியினர் என்னைச் சந்தித்து கலந்துரையாடினர். அதன் பிரகாரம் இன்றைய தினமும் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடனும் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும் இடமாற்றங்கள் வருடா வருடம் வழங்கப்படும் ஒருவிடயமாகும் எனவே இடமாற்றங்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இடமாற்றங்களில் உள்ள பிரச்சினைகளை சம்பந்தப்பட்ட எங்களுடன் கதைத்துத் தீர்த்துக்கொள்ளவேண்டும். என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் போராட்டங்கள் தொடர்பில் அமைச்சர் சத்தியலிங்கம் தெரிவித்தார். (சு-21,8)

# உப உணவு உற்பத்தி முல்லையில் பெரு வீழ்ச்சி

## போதிய மழை இன்மையே காரணம்

முல்லைத்தீவு, ஜன. 4

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 2016ஆம் ஆண்டுக்கான காலபோக பயிர்ச் செய்கையில் போதிய மழைவிழ்ச்சி இன்மையால் உப உணவு உற்பத்தி விளைச்சலில் உரிய இலக்கை அடைய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2016ஆம் ஆண்டு கால போகத்தில் 4 ஆயிரத்து 810 ஹெக்ரேயரில் மேட்டு நில உப உணவுப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும் ஆயிரத்து 852 ஹெக்ரேயரில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. 49 ஹெக்ரேயரில் சோளமும், 745 ஹெக்ரேயரில் உழுந்தும், 90 ஹெக்ரேயரில் பாசிப்பயறும், 87 ஹெக்ரேயரில் கௌப்பியும், 880 ஹெக்ரேயரில் நிலக்கடலையும் செய்கை பண்ணப்பட்டன. போதிய மழைவீழ்ச்சி கிடைக்கப் பெறாமையால் எதிர் பார்க்கப்பட்ட விளை நிலங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக் களத் தகவல்கள் தெரி விக்கின்றன. (சு-7)

# மாணவியைத் தாக்கிய பெண் கீரை வியாபாரி

சாவகச்சேரி, ஜன. 4

பாடசாலை ஆரம்பித்ததை அடுத்து பாடசாலைச் சீருடைய எடுப்பதற்கு பணம் இல்லாத காரணத்தால் தாயார் நோய்வாய்ப்பட்ட போதும் தனது தோட்டத்தில் இருந்த பொன்னாங்காணிகளை கொண்டுவந்து சந்தையில் போட்டு வியாபாரம் செய்த பாடசாலை மாணவி சந்தையில் இருந்த சக வியாபாரியான பெண் ஒருவரால் கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரிச் சந்தையில் இடம்பெற்றது.

பாடசாலைக்கான சீருடை தைத்த நிலையிலும் அதை பெற்றுக் கொள்வதற்காக பணம் இல்லாது சிரமப்பட்ட பாடசாலை மாணவி, வழமையாக அவரது தாயாரால் கொண்டு செல்லப்படும் பொன்னாங்காணிகளை சந்தையில் கொண்டுசென்று விற்று அதில் இருந்து கிடைக்கும் பணத்தில் சீருடையைப் பெற்றுக் கொண்டு பாடசாலைக்குச் செல்லலாம் எனத் தீர்மானித்து நேற்று அதிகாலை தனது வீட்டு தோட்டத்தில் இருந்த பொன்னாங்காணிகளை சாவகச்சேரி சந்தைக்கு விற்பனைக்காக கொண்டுவந்தார்.

சுகவீனம் காரணமாக தாய் சந்தைக்கு வர முடியாததால் பொன்னாங்காணி கீரைக் கட்டுகளுடன் சந்தைக்கு வந்த குறித்த மாணவி வழமை போல சந்தையில் உள்ள வியாபாரிகளுக்கு அதை வழங்கியுள்ளார். கீரையின் விலை வீழ்ச்சியடைந்துள்ள தெனக்கூறி மாணவி கொண்டு வந்த பொன்னாங்காணிகளை கொள்வனவு செய்ய வியாபாரிகள் மறுத்துள்ள னர்.

சீருடைக்குப் பணம் தேவை என்பதால் அந்த பொன்னாங்காணிகளை வீட்டுக்கு எடுத்து செல்லாது சந்தை வளாகத்தில் வைத்து மாணவி அதனை விற்பனை செய்துள்ளார். தமக்கு எதிராக குறைந்த விலையில் பொன்னாங்காணி விற்பனை செய்ததைக் கண்ட கீரை வியாபாரியான பெண் ஒருவர் மாணவியைத் தாக்கியுள்ளார். தாக்குதலுக்கு இலக்கான போதிலும் மாணவி பொன்னாங்காணியை வேறு இடத்தில் வைத்து விற்பனை செய்துள்ளார். இருந்தும் கீரை வியாபாரி மாணவியை விடுவதாக இல்லை, இந்த விடயம் அயல் வியாபாரிகளால் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அங்கு வந்த பொலிஸார் மாணவியை வைத்தியசாலையில் சேர்த்ததுடன் தாக்கியவரைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (சு-21,9)



# விக்ஸ் காட்டை அழிப்பதற்கு இடமளியோம்

## வன வளத் திணைக்களத்தின் உத்தியோகத்தர் தெரிவிப்பு

வவுனியா இராசேந்திரகுளம் பகுதியிலுள்ள விக்ஸ் காடு எம்மால் பாதுகாக்கப்படும். அதனை அழிக்க இடமளியோம், என வவுனியா வன இலகா உத்தியோகத்தர் கே. பிள்யூ.எஸ்.எச். அமரவீர தெரிவித்தார்.

வவுனியா இராசேந்திரகுளம் விக்ஸ் காட்டுப் பகுதியில் வசிக்கும் மக்கள் குறித்த காட்டுப் பகுதியிலுள்ள காணிகளை நிரந்தரமாக வழங்குமாறு வலியுறுத்தி நேற்றுமுன்தினம் அமைதியான முறையில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். விக்ஸ் காட்டுப் பகுதியில் இருந்து எம்மை வெளியேற்றும் பட்சத்தில் வவுனியா மாவட்ட செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோம் என்றும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் எச்சரிக்கை விடுத்தனர். 'கடந்த 5 வருடங்களுக்கு மேலாக வசித்துவரும் எம்மை குறித்த காணிகளில் இருந்து வெளியேறுமாறு வனஇலாகா அதிகாரிகள் அறிவித்துள்ளனர். போர் இடம்பெற்ற காலப் பகுதியில் பல்வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து, கடந்த 2011 ஆம் ஆண்டு இராசேந்திரகுளம் விக்ஸ் காட்டுப் பகுதியை துப்புரவுசெய்து தற்காலிக வீடுகளை அமைத்து வாழ்ந்து வருகின்றோம். இந்த நிலையில், காட்டுப் பகுதியில் எமக்குக் காணிக்கான அனுமதியைத்தருமாறு அதிகாரிகளிடம் பல்வேறு தடவைகள் கேட்டுக்கொண்ட போதிலும், இது வரை எந்தவித பதிலும் கிடைக்கவில்லை, தற்போது வீட்டுத்திட்டத்துக்கு விண்ணப்பித்துள்ளோம். எமக்கு வேறு இடங்களில் காணிகள், வீடுகள் இல்லாத நிலையில், விக்ஸ் காட்டுப் பகுதியில் வீட்டுத் திட்டங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்தோம். காட்டுப்பகுதியில் இருந்து வெளியேறுமாறு வன இலாகா அதிகாரிகள் அறிவித்துள்ளனர் எனப் போராட்டததில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் காலை வவுனியா வன இலகா திணைக்களத்தில் அலுவலகரைச் சந்தித்து தமக்கான காணி கோரும் மனுவினைக் கையளிக்கச் சென்றனர். இதன் போதே அந்த அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், '35தொடக்கம் 40வரையான குடும்பங்கள் கடந்த சில வருடங்களாக வன இலகாத் திணைக்களத்துக்குச் சொந்தமான விக்ஸ்காட்டுப்பகுதியினை அபகரித்து வீடுகட்டி, மின்சாரம் பெற்று வசித்துவருகின்றன. தற்போது அவர்களைவிட வேறு சிலர் அங்கு வந்து சட்டவிரோதமான முறையில் காணியை அபகரித்து வீடுகள் அமைத்து வருகின்றனர். இதற்கு இந்த பகுதியிலுள்ள சிலர் முகவர்களாகச் செயற்பட்டு வருகின்றனர். அவர்கள் மக்களிடம் 20ஆயிரம் ரூபா நிதியை அறவிட்டு அந்த பகுதியில் காணி பிடித்துக் கொடுத்து வருகின்றார்கள் என்று எங்களுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது சட்டவிரோதமான செயற்பாடு எனத் தெரிவித்துக் கொள்கின்றோம். எம்மைக் காடுகளைப்பாதுகாக்கவே நியமித்திருக்கின்றார்கள், மாறாக அழிப்பதற்கு இடம் கொடுக்கமாட்டோம். எனவே இந்தப் பகுதியில் முன்பு குடியேறிய குடும் பங்களைத் தவிர வேறு எவரும் புதிதாக காணியை அபகரித்துச் சட்டவிரோதமாகக் குடியேறினால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெளிவாகத் தெரிவித்துக் கொள்கின்றோம்' - என்றார். (சு-21)

# கைபேசிகள்திருடியதாக ஒருவர் கைது

பருத்தித்துறை, ஜன.4

பருத்தித்துறைப் பகுதியில் 58 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு கைத்தொலைபேசிகளைத் திருடிய குற்றச் சாட்டில் சந்தேக நபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார் எனப் பருத்தித்துறைப் பொலி ஸார் தெரிவித்தனர்.

கைத்தொலைபேசி களைத் தொலைத்த உரிமையாளரால் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே சந் தேக நபர் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து கை தொலை பேசிகள் இரண்டும் மீட்கக்கப்பட்டன. தொடர்ந்து விசாரணைகள் மேற்கொளப்பட்டுள்ளன. விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸார் கூறினர். (து-109)



# ஆட்சிக் கவிழ்ப்புக்கு சிறுபான்மைச்சமூகம் துணைபோகக்கூடாது

## ஸ்ரீநேசன் எம்.பி. கோரிக்கை

செங்கலடி, ஜன.04
இந்த ஆட்சியைக் கவிழ்ப்பதற்குச் சிறுபான்மை இனங்கள் துணைபோகக் கூடாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

ஏறாவூர்ப்பற்று பிரதேச மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:
நாட்டில் தற்போது நடைபெறும் ஆட்சியைக் கவிழ்ப் பது என்பது சிறுபான்மை மக்களுக்கு அடிக்கப்படும் அபாய மணி யாகவே நான் கருதுகிறேன். இவ்வாறு ஓர் ஆட்சிக் கவிழ்ப்புக்குச் சிறுபான்மை இனத்தவர்கள் எந்த வித்திலும் துணைபோகக் கூடாது. அவ்வாறு இடம்பெற்றால் மீண்டும் ஓர் அபாயத்தை நோக்கிச் செல்ல நேரிடும்.

முன்னாள் ஜானாதிபதி மகிந்த ராஜபக்ச இந்த வருடத்தில் ஆட்சியைக் கவிழ்ப்பேன் எனக் கூறியுள்ளார். அவர் ஆட்சியைப் பிடிப்பேன் என்று கூறியிருந்தால் நாங்கள் பெரிதுபடுத்தாமல் இருந்திருக்கலாம், ஆனால் ஆட்சியைக் கவிழ்ப்பேன் என்று கூறும் செய்தியானது ஒரு சதியோடு கூடிய திட்டமாக இருக்கலாம்.

ஆட்சிக் கவிழ்ப்பு ஏற்பட்டால் கடந்த காலத்தில் இடம்பெற்றது போன்று பேச்சு எழுத்து சுதந்திரம் காவுகொள்ளப்பட்டுவிடும்.

ஓர் அரசியல் தீர்வினைப் பெறுவதற்காகச் சர்வதேசத்தின் பார்வையின் முன்னிலையில் புதிய அரசு பேச்சில் ஈடுபட்டுக்கொண் டிருக்கிறது. இதன்மூலம் மீண்டும் ஒருமுறை வன்முறை ஏற்படாதவகையில் நல்லிணக்கமாகன தீர்வு கிடைக்கவேண்டும் என அனைவரும் எதிர்பார்க்கிறோம்.

இன்றை சூழ்நிலையில் சரியான பொறிமுறையின் கீழ் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு அதன் மூலம் இணக்கமான தீர்வு காணப்பட வேண்டும் - என்றார்.
(த-ய-47)

# நீர்கொழும்பு நீதிமன்றத்துக்கு தமிழ் ஊழியரை நியமியுங்கள்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் கோரிக்கை

மன்னார், ஜன.4
நீர் கொழும்பு நீதிமன்ற கட்டடத் தொகுதியில் தமிழ் மொழியில் சரளமாகப் பேசக்கூடிய தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் இல்லாத காரணத்தால் தமிழ் மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர், எனவே மக்களின் மொழிப்பிரச்சினையை தீர்க்கும் வகையில்தமிழ்பேசும்உத்தியோகத்தர்களை நியமனம் செய்யுமாறு வடமாகாண சபை உறுப்பினர்செந்தில்நாதன்மயூரன்கோரிக்கை விடுத்தார்.

இந்த விடையம் தொடர்பாக அவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தேசிய சகவாழ்வு கலந்துரையாடல்கள் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசனுக்கு அனுப்பி வைத்த கடிதத்திலேயே இவ் வாறு தெரிவிக்கப்பட்டது.

அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டதாவது, 'நீர் கொழும்பு நீதிமன்ற கட்டடத் தொகுதியில் தமிழ் மொழியில் பரிச்சயமாக பேசக்கூடிய தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் இல்லாத காரணத்தால் தமிழ் மக்கள் சிரமங்களை எதிர் நோக்கி வருவதாக அறிகின்றேன். வழக்குகளோடு சம்பந்தப்பட்ட வழக்காளிகளாக இருப்பினும் அல்லது எதிராளிகளாக இருப்பினும், வழக்குத்தவணைக் காலத்திலும், வழக்குகள் முடிவடைந்த பின்னரும் தமிழ் மொழியை மட்டுமே தெரிந்தவர்களாக இருக்கும் பட்சத்தில் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

சரியான மொழி பெயர்ப்பு இன்மையால் வழக்குகளின் நிலமைகள், தன்மைகளைக் கூட அறிந்து கொள்ள முடியாமல் அவஸ்தைப்படுகின்றவர்களை காணக்கூடியதாக இருக்கின்றது. சொந்த மொழியில் தகவல்களை பெற முடியாத நிலை காணப்படுகின்றது. வேறு திணைக்களங்களிலோ அல்லது அலுவலகங்களிலோ மொழி பெயர்த்துக் கூற உதவிக்கு சிலரை அழைத்து செல்வது சுலபம். ஆனால் நீதிமன்றங்களில் காணப்படும் இறுக்கமான கட்டுப்பாடுகள் காரணமாக நினைத்தது போன்று தமிழ் மக்கள் எவரையும் அழைத்து செல்லவும் முடியாது. தமிழ் பேசும் சட்டத் தரணிகளும் மிகக் குறைந்தளவிலேயே காணப்படுகின்றனர்.

எனவே தமிழ் பேசும் உத்தியோகத்தர் களை நியமனம் செய்து மொழிப் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், இல்லையேல் விசேடமான மொழி பெயர்ப்பாளர்களை நீதிமன்ற வளாகத்துக்குள் கடமையாற்ற தங்கள் அமைச்சினூடாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். இதில் தாங்கள் உடனடியாக எடுக்கும் நடவடிக்கையானது மொழிப்பிரச்சினையால் காரியங்களை செய்து முடிக்காமல் விடப்பட்டிருக்கும் நீண்டகால, உடனடி பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க வழிசமைக்கும் என நம்புகின்றேன் என்றுள்ளது.
(க- 21,56)

# தபால் துறை ஊழியர்கள் மீண்டும் போராட முடிவு

கொழும்பு, ஜன 4
ஜனாதிபதி செயலகத்துக்குத் தபால்சேவைஊழியர்களினால் வழங்கப்பட்டுள்ள மனுவுக்கு எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் உரிய பதில் கிடைக்காவிட்டால், நாடு முழுவதிலுமுள்ள சகல தபால் நிலையங்களையும் மூடிப் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாகத் தபால் தொழிற்சங்களின் முன்னணி அறி வித்துள்ளது.
(த)

# யானை தாக்கியதில் குடும்பஸ்தர் சாவு

மட்டக்களப்பு, ஜன 4
மட்டக்களப்பு - பெரிய புல்லுமலை - 40 ஏக்கர் வட்டை வயற்பிரதேசத்தில் காட்டு யானை தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பெரிய புல்லுமலை தும்பாலஞ்சோலை பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான 72 வயதுடைய தம்பிராசா பரமானந்தன் என்பவரே காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் மாலை 5.30 அளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகக் கரடியனாறுப் பொலிஸார் தெரிவித்தனர்.

கூலித் தொழிலாளியான இவர், மாடுகளை அழைத்துக்கொண்டு வரும்போது எதிரே வந்த யானை தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவரது சடலம் பிரேத பரிசோதனைக்காகச் செங்கலடி வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டு

# மீண்டும் ஒன்றிணையும் முஸ்லிம் எம்.பிக்கள்

## வில்பத்து விவகாரத்துக்காக

கொழும்பு, ஜன 4
நாட்டில் மீண்டும் தலைதூக்கியுள்ள வில்பத்து. விவகாரத்தால் ஏற்படவுள்ள பின்விளைவுகளைக்கருத்திற்கொண்டு நாடாளுமன்றத்தில் அங்கம்வகிக்கும் 21முஸ்லிம் உறுப்பினர்களும் இணைந்து செயற்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த விடயம் தொடர்பாக எதிர்வரும் 9ஆம் திகதிநாடாளுமன்றத்தில் கூடவுள்ளதாகவும், பின்னர் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க உள்ளதாகவும் நேற்று முன் தினம் அமைச்சர் ரிசாத் பதியுதீன் தலைமையில்கொழும்பில்இடம்பெற்ற கலந்துரையாடலில்தீர்மானிக்கப்பட்டது.

இதில் அமைச்சர்களான, பௌசி, ஹிஸ்புல்லாஹ், ஹலீம், ரிசாத் உட்பட பிரதியமைச்சர் அமீர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான், நவவி, அப்துல்லா மஹ்ரூப் ஆகியோர் கலந்துகொண்டதுடன் முஸ்லிம் மீடியா போரம், சிறிலங்கா முஸ்லிம் கவுன்சில், தேசிய ஷூரா சபை ஆகியவற்றின் பிரதிநிதிகளும் பாதிக்கப்பட்ட மன்னார் முசலிப் பிரதேச மக்கள் பிரதிநிதிகளும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.
(த)

# பாகிஸ்தான் கடற்படைக் கப்பல்கள் கொழும்புக்கு

கொழும்பு, ஜன 4
நல்லெண்ணப் பயணமொன்றை மேற்கொண்டு பாகிஸ்தான் கடற்படை பாதுகாப்புக் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தரவுள்ளன எனக் கொழும்பில் உள்ள பாகிஸ்தான் தூதரகம் தெரிவித்தது.

இலங்கை-பாகிஸ்தான் கடற்படைக்கு இடையிலான உறவை வலுப்படுத்தும் நோக்கிலேயே குறித்த கப்பல்கள் இலங்கைக்கு வருகை தரவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த கப்பல்கள் இரண்டும் நாளை வியாழக்கிழமை கொழும்புத் துறைமுகத்தைவந்தடையும் எனவும், இவை நான்கு நாள்கள் கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் என்றும் கூறப்பட்டது.
(த)

# பல்கலை மாணவரின் பதிவுத் திகதி மாற்றம்

செங்கலடி, ஜன.04
கிழக்கு பல்கலைக்கழகத்தின் 2015 மற்றும் 2016ஆம் ஆண்டு அனுமதி பெற்ற கலை கலாசாரப் பீடத்துக்குரிய புதிய மாணவர்களைப் பதிவு செய்யும் திகதி மாற்றப்பட்டுள்ளது எனப் பீடாதிபதி முனியாண்டி ரவி தெரிவித்தார்.

நாளை மாணவர்களின் பதிவுகள் நடைபெறவிருந்த நிலையில் திகதி மாற்றப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் 19 ஆம் திகதி பதிவுகள் நடைபெறும் எனவும் கலை கலாசாரபீட அலுவலகம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி பதிவுகளை மேற்கொள்வதற்கு வருகைதரும் மாண வர்களுக்குரிய வகுப்புக்கள் அன்றைய தினமே ஆரம்பிக்கப்பட இருப்பதால் விடுதியில் தங்குவதற்குரிய அனைத்து ஏற்பாடு களுடனும் வருமாறு அறி விக்கப்பட்டுள்ளது. (த-ய-47)

# 50 மருந்துப் பொருள்களின் விலைகள் குறைக்கப்படும்

## விலைக் கட்டுப்பாட்டுக் குழுவின் தலைவர் தெரிவிப்பு

மருந்துப்பொருள்களின் விலை குறைப்புக்கமைய மேலும் 50 மருந்துப்பொருள்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக மருந்துப் பொருள்களின் விலை கட்டுப்பாட்டுக் குழுவின் தலைவர் பாலித்த அபேகோன் தெரிவித்துள்ளார். அவர் தெரிவித்ததாவது:

இது தொடர்பில், மருந்து உற்பத்தி மற்றும் விநியோக நிறுவனங்களுக்கும் அரச மருத்துவ தரப்பினருக்கும் இடையில் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. 48 அத்தியாவசிய மருந்துப் பொருள்களின் விலைகள் கடந்த ஒக்ரோபர் மாதம் அரசால் குறைக்கப்பட்டன. இந்த நிலையிலேயே மேலும் சில மருந்துப்பொருள்களின் விலைகள் குறைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே விலைகள் குறைக்கப்பட்டுள்ள மருந்துப்பொருள்கள் தொடர்பில் எந்த முறைப்பாடுகளும் கிடைக்கப்பெறவில்லை- என்றார்.
(த)



## பெஞ்சமின் நெந்தன்யாகுவிடம் மூன்று மணிநேரம் விசாரணை

ஜெருசலேம், ஜன. 4

ஊழல்மோசடிக்குற்றச்சாட்டில் இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின்நெத்தன்யாகு நேற்றுமுன் தினம் விசாரணைக்கு உட் படுத்தப்பட்டார்.

ஜேர்மனியிடமிருந்து இருந்து நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்கியதில் ஊழல் செய்து பண ஆதாயம் அடைந்தார் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு மீது பரவலான குற்றச்சாட்டு இருந்து வருகிறது. வழக்கும் தொடரப்பட்டது. ஆனால், தனக்கு எதிரான குற்றச்சாட் டுக்களை நெத்தன்யாகு மறுத்து வந்தார்.

இந்த நிலையில் இந்த விசாரணை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

நெத்தன்யாகுவின் வீட்டுக்கு நேற்றுமுன்தினம் மாலை சென்ற பொலிஸார் கிட்டத்தட்ட மூன்று மணிநேரம் விசாரணை நடத்தினர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)



## அமெரிக்க ஜனாதிபதியாக ஒபாமாவின் இறுதியுரை

வொஷிங்டன், ஜன. 4

அமெரிக்க ஜனாதிபதியாக தனது இறுதி உரையை எதிர்வரும் 10 ஆம்திகதி ஒபாமா நிகழ்த்தவுள்ளார் என்று அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

2009 ஆம் ஆண்டு ஜோர்ஜ் டபிள்யு புஷ் தனது இறுதியுரையை வெள்ளை மாளிகையில் நிகழ்த்தினார்.

ஆனால் ஒபாமா வெள்ளை மாளிகையில் அல்லாமல் தனது பிறந்த நகரான சிக்காக்கோவில் பிரிவு உரையை நிகழ்த்தவுள்ளார். (ம-எ)

# சிரிய அரசுடன் பேச்சில்லை ஆயுதக் குழு அறிவித்தது

## விதிகளை மீறிய தாக்குதலை அடுத்து

டமஸ்கஸ், ஜன. 4

சிரிய அரசுடனான பேச்சுக்கு ஒருபோதும் இணங்கப் போவதில்லை என்று அரசுக்கு எதிரான ஆயுதக் குழு அறிவித்தது.




சிரிய ஜனாதிபதி அல்-அசாத்தைப் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி, ஆரம்பித்த அமுக்கக் குழுக்கள் படிப்படியாக அரசுக்கு எதிரான ஆய்துக் குழுக்களாக மாற்றம் பெற்றன. கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் சிரிய அரசு, ஆயுதக் குழுக்களுக்கு எதிரான போரைச் சந்தித்து வருகிறது. சிரியாவின் இரண்டாவது பெரிய நகரான அலெப்போ ஆயுதக் குழுக்களின் பிடியிலேயே இருந்தது. ரஷ்யா மற்றும் துருக்கி ஆகியவற்றின் உதவியுடன் அண்மையில் அலெப்போ நகரை மீட்டது சிரியா. இது வரையிலுமான போரில் 3 லட்சம் மக்கள் கொல்லப் பட்டனர். 40 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் ஐரோப் பாவுக்கும் ஏனைய நாடுகளுக்கும் அகதிகளாகச் சென்றனர். இவ்வாறு மிகப் பெரும் இழப்புக்களைச் சந்தித்த பின்னர் ரஷ்யா, துருக்கி ஆகியவற்றின் இணக்கத்துடன் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இரு தரப்புக்கும் இடையில் கஜகஸ்தானில் இந்த மாதம் முக்கிய பேச்சு இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப் பட்ட நிலையில், குறித்த பேச்சுக்கு இணங்கப் போவதில்லை என்று ஆயுதக் குழு நேற்று முன்தினம் அறிவித்தது.

போர் நிறுத்த காலமான இந்தக் காலத்தில் விதிகளை மீறி அரசுப் படைகள் நாம் இருக்கும் பகுதியில் பெரிய அளவிலான தாக்குதலை நடத்துகின்றன.

சிரியத் தலை நகருக்கான நீர் வழங்கும் முக்கிய நீர் அருவிகள், குழாய் கள் போன்றன எமது கட்டுப்பாட்டிலேயே உள்ளன. இதனால் அவற்றை எம்மிடம் இருந்து மீட்பதற்காகவே அரச படைகள் தாக்குதல் நடத்துகின்றன.

இதனால் கஜகஸ்தானில் இந்த மாதம் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வரும் முக்கிய பேச்சுக்கு நாம் இணங்கோம் என்று அரசுக்கு எதிரான கிளர்ச்சிக்குழு அறிவித்தது. (ம-எ)




அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள ட்ரம்ப் போன்று தோற்றமளிக்கும் மிகப் பெரிய பறவையின் உருவம் சீனாவின் வர்த்தகவளாகம் ஒன்றில் வைக்கப்பட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ட்ரம்பின் தலை அலங்காரம், கை அசைவுகளை பிரதி பலிக்கும் வகையில் குறித்த பறவை வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும் குறித்த ஊடகங்கள் மேலும் தெரிவித்தன. (ம-எ)

## அகதிகளின் ஊடுருவலை முறியடித்தது ஸ்பெய்ன்

ஆபிரிக்காவில் இருந்து ஸ்பெய்னுக்குள் ஊடுருவ முயன்ற ஆயிரத்து 100 அகதிகளின் முயற்சி முறியடிக்கப்பட்டது.

புத்தாண்ட தினத்தன்று அதிகாலையில் அகதிகள் இந்த ஊடுருவலை மேற்கொண்டிருந்தனர். பொலிஸ் மற்றும் இராணுவச் சிப்பாய்களின் போராட்டத்தால் அது முறியடிக்கப்பட்டது என்று ஸ்பெய்ன் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. பயணப் பையில் வைத்து மொரோக்கோ வழியாக ஸ்பெய்னுக்கு கடத்த முயன்ற அகதிச் சிறுவன் ஒருவனும் மீட்கப்பட்டான். (ம-எ)





# வடகொரியாவால் ஒருபோதும் தொட


## கிம் கருத்துக்கு ட்ரம்ப் பதிலடி

வொஷிங்ரன், ஜன. 4

அமெரிக்காவை தாக்கும் அளவுக்கு வட கொரியாவால் அணு ஆயுத ஏவுகணைகளைத் தயாரிக்க முடியாது என்று அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள டொனால்ட் ட்ரம்ப் வெளிப்படுத்தினார்.

பன்னாட்டு சட்டதிட்டங்களை மீறி வடகொரியா அவ்வப்போது பல்வேறுபட்ட அணுவாயுத சோத னைகளை நடத்தி வருகிறது. இதனால் அந்த நாட்டின் மீது ஐக்கிய நாடுகள் சபை பல பொரு ளாதாரத் தடைகளை விதித்துள்ளது. வடகொரியா வின் முக்கிய ஆதரமான நிலக்கரி விற்பனையை முடக்கும் வகையில் எந்தவொரு நாடும் வட கொரியாவிடமிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்யக்கூடாது என்று சில வாரங்களுக்கு முன் னர்தடையுத்தரவுபிறப்பித்திருந்தது. இதன்மூலம் வடகொரியா தனது முக்கிய வருவாயை இழந்து, அணுவாயுத சோதனையைக் கைவிடும் என்பது ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கம். அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் போன்ற நாடுகள் தனித்தனியாக வடகொரியாவுக்கு சில தடைகளை விதித்திருந்தன. ஆனால், தனக்கெதிரான தடைகளைக்கண்டு வடகொரியா மிரண்டுவிடவில்லை. தனது வலிமையைப் பறைசாற்றும்வகையில்மிகப்பெரிய இராணுவத் தளபாட அணிவகுப்பை ஐ.நா. பொருளாதாரத் தடையை விதித்த சில தினங்களில் நடத்தியது. அணிவகுப்பைத் தொடர்ந்து "ஐ.நா. சபையின் தடை சிறுபிள்ளைத்தனமானது" என்று வட கொரிய ஜனாதிபதி கிம் யோங் உன் தெரிவித்திருந்தார். தற்பொழுது, புதிய ஏவுகணையொன்றின் கட்டுமானத்தையும் வடகொரியா தீவிரமாக முன்னெடுத்து வருகிறது. "கட்டுமானம் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. அமெரிக்காவிடமிருந்து அச்சுறுத்தல் என்று உணர்ந்தால் தாக்குவதற்குத் தயங்கோம்" என்று தனது புதுவருட உரையில் வடகொரிய ஜனாதிபதி கிம் யோங் உன் கருத்துத் தெரிவித்திருந்தார். இதனால்

# இறந்த காலத்துக்குப் பயணித்தல்





வொஷிங்ரன், ஜன. 4
2017 ஆம் ஆண்டு தனது பயணத்தை ஆரம்பித்த விமானமொன்று 2016 ஆம் ஆண்டில் தரையிறங்கியது.
அமெரிக்காவுக்குச் சொந்தமான போயிங் 787-909 ரக விமானம், சீனாவின் சாங்காய் நகரில் இருந்து 2017 ஆம் ஆண்டில் புறப்பட்டு அமெரிக்காவில் 2016 ஆம் ஆண்டு தரையிறங்கியது. பன்னாட்டுத் திகதிக் கோட்டின் படி சீனாவை விட அமெரிக்கா 13 மணிநேரம் பின்தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-எ)



# தாய்லாந்தில் கோர விபத்து 25 பேர் பரிதாப உயிரிழப்பு

பாங்கொக், ஜன. 4
தாய்லாந்தில் வானும், ட்ரக்கும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 25 பேர் பரிதாபமாகச் சாவடைந்தனர். பான்பெங் மாவட்டத்தில் நேற்றுக் காலை இந்த விபத்து இடம்பெற்றது. வான் வேகக் கட்டுப்பாட்டை இழந்ததை அடுத்தே விபத்து இடம்பெற்றது என்று முதுல் கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டது. வானில் பயணித்த 14 பேரும், ட்ரக்கில் பயணித்த 11 பேரும் உயிரிழந்தனர். இருவர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ம-எ)

# இஸ்தான்புல் தாக்குதல்தாரியின் ஒளிப்படங்கள் வெளியாகின



அங்காரா, ஜன. 3
துருக்கியின் இஸ்தான்புல் நகரத் தாக்குதலில் ஈடுபட்ட ஆயுததாரியில் ஒளிப் படங்கள் துருக்கிப் பொலிஸாரால் வெளியிடப்பட்டன.
புது வருடம் பிறந்து சில மணிநேரத்தில் இஸ்தாண்புலில் இருந்த களியாட்ட விடுதிக்குச் சென்ற ஆயுததாரி விடுதிக்குள் சென்று சரமாரியான தாக்குதலை நடத்தினார். கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் 39 பேர் கொல்லப்பட்டதுடன், 69 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். தாக்குதல் சம்பவத்துக்கு ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்புப் பொறுப் பேற்றது. குறித்த தாக்குதல் நடத்திய ஆயுதாரி கொல்லப்பட்டார் என்று ஆரம்பத்தில் செய்திகள் வெளியாகின. ஆனால் அவர் தப்பிச் சென்றுள்ளார் என்றும்-பொலிஸார் அவரை தேடி வருகின்றனர் என்றும்-பன்னாட்டு ஊடகங்கள் நேற்றுமுன்தினம் செய்தி வெளியிட்டன.
விடுதியின் கண்காணிப்புக் கமராக்களில் பதிவாகியிருந்த ஆயுததாரியின் சில ஒளிப்படங்கள், காணொலிகள் போன்றன துருக்கிப் பொலிஸாரால் வெளியிடப்பட்டது. ஆயுததாரியை அடையாளம் காண அவை இலகுவாகஅமையும்என்றுதுருக்கிப்பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ம-எ)



கடந்த வருடத்தின் சிறந்த படங்கள் என்று தான் கருதும் படங்களை பன்னாட்டு ஊடகமான பி.பி.ஸி. பட்டியலிட்டது. அமெரிக்காவின் மோவாப் மலையில் ஏறும் வீரர் ஒருவரின் இந்தப் படமும் அவற்றில் ஒன்று. இந்த ஒளிப்படத்தை மக்ஸ் செய்கல் என்ற ஒளிப்படக் கலைஞர் பதிவுசெய்தார். (ம-எ)

# இருவேறு ஆண்டுகளில் பிறந்தனர் இரட்டையர்

வொஷிங்ரன், ஜன. 4
அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தில் இருவேறு ஆண்டுகளில் இரட்டைக் குழந்தைகள் பிறந்துள்ளமை பன்னாட்டு ஊடகங்களின் கவனத்தைப் பெற்றது. அமெரிக்காவைச் சேர்ந்த தம்பதியர் பரடன் மற்றும் சயி, குழந்தைப் பேறுக்காக டிசம்பர் 31 ஆம் திகதி இரவு 11:50 மணியளவில் மருத்துவ மனைக்குச் சென்றனர். 2016 ஆம் ஆண்டின் இறுதி நிமிடத்தில் ஒரு குழந்தையும், மற்றைய குழந்தை 2017 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலும் பிறந்தது. (ம-எ)



# டியாது அமெரிக்காவை



தற்போது தயாரிக்கப்படும் ஏவுகணை கிட்டத்தட்ட 10 ஆயிரம் கிலோ மீற்றருக்கு அப்பால் பாய்ந்து சென்று அமெரிக்காவைத் தாக்கவல்லது என்று கருதப்படும் நிலையில் ட்ரம்ப், அது வடகொரியர்வால் இயலாது என்று வெளிப்படுத்தினார். வடகொரியாவால் அமெரிக்காவை நெருங்க முடியாது. எமது கடற்கரை நகரங்களைத் தாக்கும் அளவுக்கு அந்த நாட்டிடம் சக்தியோ அல்லது திறனோ இல்லை என்று ட்ரம்ப் தனது ருவிற்றரில் பதிவிட்டுள்ளார்.
கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனையை நடத்தக் கூடாது என்று ஐ.நா. பாதுகாப்புச் சபை ஏற்கனவே வடகொரியாவுக்கு தடை விதித்து உள்ளது. அதையும் மீறி வடகொரியா செயற்பட்டு வருகிறது. பன்னாட்டு அமைதி, உறுதித்தன்மை ஆகியவற்றுக்கு ஊறுவிளைவிக்கும் நடவடிக்கைகளில் வடகொரியா ஈடுபட்டால், தனது சட்டவிரோத நடவடிக்கைகளுக்காக அது கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும். அமெரிக்கப் படைகளுக்கு, தன்னையும், தனது கூட்டணி நாடுகளையும் பாதுகாக்கும் திறனும், எதிரியை ஒடுக்கும் வலிமையும் எப்போதும் உள்ளது என்று அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்ரகனும் தனது கண்டனத்தைத் தெரிவித்தது. (ம-எ)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதே அரச தலைவருக்கு அழகு

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இன்று மீண்டும் யாழ்ப்பாணம் வருகிறார். 2015ஆம் ஆண்டு தை மாதத்தில் அவர் அரச தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர், யாழ்ப்பாணத்துக்கு அவர் வருகை தருவது இது 13ஆவது தடவையாகும். இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிக்கு பதவியேற்ற குறுகிய காலத்திலேயே இப்படி அடிக்கடி பயணித்திருக்கும் அரச தலைவர் தான் மட்டுமே என்று அவரே ஒரு தடவை பெருமைப்பட்டுக் கொண்டார் என்பது இங்கு நோக்கற்பாலது.

யாழ்ப்பாணத்திற்கு அதிக தடவைகள் அவர் பயணித்தார் என்பதும், தமிழர்கள் தொடர்பில் அவர் அக்கறை கொண்டவராகத் தன்னைக் காட்டிக்கொள்கிறார் என்பதும் மறுப்பதற்கு அப்பாற்பட்டது. ஆனா லும், இந்தப் பயணங்களின்போது தமிழ் மக்களுக்குத் தான் வழங்கிய வாக்குறுதிகளில் எத்தனையை அவர் நிறைவேற்றினார் என்று பார்த்தால் ஏமாற்றமே மிஞ்சுகின்றது.

வலி. வடக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்களை – குறிப்பாக மயிலிட்டி தையிட்டிப் பகுதி மக்களை – 6 மாதங்களில் மீளக் குடியமர்த்துவேன் என்று 2015 டிசெம்பர் இயேசு பிறப்பு நிகழ்வில் கலந்துகொண்டபோது அரச தலைவர் வாக்குறுதியளித்தார். ஆனால், ஒரு வருடம் கடந்துவிட்டபோதிலும், அந்த வாக்குறுதி நிறை வேற்றப்படும் என்ற எதிர்பார்ப்புடனேயே மக்கள் காத்திருக்கிறார் கள்.

முழு இலங்கையும் கொந்தளித்த புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கில், தனி விசாரணை ஆயம் அமைக்கப்படும் என்று வாக்குறுதியளித்தார். அது எப்போது நடக்கும் என்பதற்காகவும் மக்கள் காத்துக்கிடக்கிறார்கள்.

அதற்கு முன்னதாக தேர்தல் காலத்தில், மக்கள் சொந்தக் காணி கள் அனைத்தும் அவர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்படும் என்று வாக்குறுதியளித்தார். அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்று வாக்குறுதியளித்தார். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான ஒரு தீர்வு காணப்படும் என்று வாக்குறுதியளித்தார். பாதுகாப்புக்கு அவசியமான இராணுவ முகாம்கள் தவிர ஏனை யவை அகற்றப்படும் என்றார். போரில் காணாமற்போனோர் விவ காரத்திற்கு முடிவு கட்டப்படும் என்றார். இவையெல்லாம் நடைபெறும் நடைபெறும் என்று எதிர்பார்த்து எதிர்பார்த்து தற்போது மக்கள் ஏமாந்து போயுள்ளார்கள். விரக்தியடைந்திருக்கிறார்கள். அரசியல்வாதிகள் மீதான நம்பிக்கையை இழந்திருக்கிறார்கள். சிங்களத் தலைவர்கள் எல்லோருமே தமி ழர்கள் தொடர்பில் வாக்குறுதிகளை நிறைவேற்றாதவர்கள் என்று அவநம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.


அரச தலைவர் என்ற வகையில் மைத்திரிபால சிறிசேன மீது தமிழர்கள் கொண்டிருந்த நம்பிக்கையின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

ஒற்றையாட்சியை விட்டுக்கொடுக்கமாட்டேன் என்று சொல்வது, பௌத்தத்துக்கான முன்னுரிமையைத் தக்க வைப்பதற்குப் போராடுவது, குற்றமிழைத்த படையினரை நம்பகமான நீதியின் முன்னால் நிறுத்துவதைத் திட்டமிட்டே தாமதிப்பது, வடக்குக் கிழக்கில் படைக் குறைப்பைச் செய்யாமல் பார்த்துக் கொண்டிருப் பது, வடக்கு கிழக்கில் பௌத்தர்களே இல்லாத நிலங்களில் விகாரைகள் முளைப்பதற்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுக்காமல் இருப் பது என்று அரச தலைவரின் நடவடிக்கைகள் அவர் மீதான அவ நம்பிக்கையைத் தமிழர்கள் மத்தியில் வளர்த்துச் செல்கிறதே தவிரக் குறைப்பதாகத் தெரியவில்லை. புதிய அரசமைப்பு முயற்சிகளில் ஏற்பட்டிருக்கக்கூடிய தாமதமும் அந்த அவநம்பிக்கையை மேலும் வளர்க்கிறது.

இந்த நிலையிலேயே அரச தலைவர் இன்று யாழ்ப்பாணம் வருகிறார். வடக்கு மக்கள் தமது குறைபாடுகள் தொடர்பில் முறையிடுவதற்கான அலுவலகத்தை வடக்கு ஆளுநர் அலுவலகத்தில் தொடக்கி வைக்கிறார். ஏற்கனவே மக்களின் முறைப்பாடுகளுக்குத் தீர்வு காணப்படாத நிலையில், இந்தப் புதிய அலுவலகத்தின் பயன் என்ன என்கிற கேள்வி மக்களிடம் எழுகிறது.

வாக்குறுதிகளை வழங்குவது மட்டுமல்ல தலைவர்களின் பணி. அவற்றை எப்பாடுபட்டாவது நிறைவேற்ற வேண்டும். யாழ்ப்பாணத் திற்கு அடிக்கடி வந்துசெல்வதைவிட வாக்குறுதிகளை நிறை வேற்ற அரசதலைவர் முயற்சிப்பதே மக்கள் பணியாக இருக்க முடியும்.





# இரு கட்சி கூட்டாட்சிக்குள் முரண்பாடுகள் முற்றும் அறிகுறி

## முன்னணி அமைச்சர்கள் பகிரங்கமாக மோதல்; தீர்வுத் திட்டம் எல்லாம் தவிடுபொடியாகும் நிலை

சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து
ரெங்கன்

2015 ஜனவரி 8 ஆம் திகதிய ஜனாதிபதித் தேர்தலை அடுத்து பெரும் ஆரவாரத்துடன் உருவாக்கப்பட்ட "வானவில்" கூட்டணி அரசானது இப்போது அந்த வானவில்லுக்குரிய வண்ணங்களை இழந்து வருவது மாத்திரமன்றி, வானவில் காணப்பட்ட இடத்தில் பெரும் இடி முழக்கங்களுக்கான கருமேகங்கள் சூழத் தொடங்கியிருக்கின்றன.

சிறிசேன - ரணில் அரசுக்குள் இப்படியான ஒரு சூழ்நிலை இப்போது உருவாகி இருப்பது ஒன்றும் இரகசியம் அல்ல. ஆட்சியிலுள்ள இரு முக்கிய கட்சிகளான ஐ.தே.க. மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிகளின் உறுப்பினர்கள் மேற்கொள்ளும் செயற்பாடுகளும், வெளியிடும் கருத்துக்களும் ஒரு பகுதியினரை மறு பகுதியினர் ஏட்டிக்குப் போட்டியாக எதிர்த்து நிற்பதைப் பளிச்சென வெளிப்படுவதாக உள்ளன. இரு தரப்பினரும் தமது அரசியல் போராட்டத்தை இப்போது பகிரங்கமாகவே ஆரம்பித்துவிட்டார்கள். இதனால் இப்பொழுது எழுந்துள்ள கேள்வி என்னவென்றால், 2017ஆம் ஆண்டிலாவது அவர்கள் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த, தங்களுக்கிடையிலான முரண்பாடுகளைத் தீர்த்துக் கொண்டு முன்னேறுவார்களா அல்லது தங்கள் தங்கள் வழிகளில் செல்வதற்குத் தீர்மானிப்பார்களா என்பதே. அவ்வாறு அவர்களுக்குள் ஒற்றுமை ஏற்படுமானால், தேசிய நல்லிணக் கத்தை முன்னெடுப்பதற்கும் அவர்கள் வாக்களித்துள்ளபடி ஊழல் புரிந்தவர்களைத் தண்டிப்பதற்கும் வழிவகுத்ததாக இருக்கும். அவ்வாறு இல்லை எனில், இந்த இரண்டு தரப்பினரையும் பதவியில் அமர்த்திய மக்கள் ஏமாற்றத்துக்கு உள்ளாவதாகவே அமையும்.

மத்திய வங்கி பிணை முறி ஊழல் விவகாரத்தை அடுத்தே இரு தரப்புக்களுக்கும் இடையில் முரண்பாடுகள் உச்சத்தை அடையத் தொடங்கின.

நாடாளுமன்றப் பொது நிறுவனங்கள் தொடர்பான குழுவானது (கோப் குழு) கண்டுபிடித்து வெளியிட்ட விடயங்கள் இதற்கு மேலும் வலுவூட்டுவனவாக அமைந்தன. இந்தக் குழுவின் அறிக்கை மீதான நாடாளுமன்ற விவாதம், இந்த மாதம் மூன்றாம் வாரத்தில் நடைபெற இருக்கின்றது. அதில் எதுவித தவறும் நடைபெறவில்லை என்று சில ஐ.தே.க. மூத்த அமைச்சர்கள் கூறிவந்தாலும், தனிப்பட்ட முறையில் அதனைத் தற்காத்துக் கொள்வது கடினம் என்றே அவர்கள் கூறி வருகிறார்கள். சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரைப் பொறுத்தவரை இதில் அவர்கள் அதிக ஆத்திரம் அடைந்திருப்பதுடன், இந்த விடயம் மேலும் ஆராயப்படவேண்டும் என்று வற்புறுத்தி வருகிறார்கள். நாடாளுமன்றத்தில் நடைபெற விருக்கும் இது குறித்த விவாதம் மிகவும் சூடுபறப்பதாகவே காணப்படும்.

### ஜனாதிபதி சட்ட ஆலோசனை

கடந்த வாரங்களில் இது குறித்த சில விடயங்கள், திரைக்குப் பின்னால் இடம்பெற்று இருப்பதும் தெரியவந்துள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த விடயத்தில் என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது குறித்து சட்ட ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டுள்ளார். தம்மிடம் இது தொடர்பாக அறிக்கை சமர்ப்பித்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களிடம், தாம் நாடாளுமன்றத்தில் இது குறித்த விவாதம் நடைபெற்றதன் பின்னர் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

குற்றவியல் நீதி ஆணையம் ஒன்றை அமைப்பது தொடர்பான சட்ட முன்வரைவொன்றைச் சில அமைச்சர்கள் தமது சட்டத்தரணிகளின் ஆலோசனையுடன் தயாரித்து வருகிறார்கள்.

மோசடிகள், ஊழல்கள், நிதிக் கையாடல்கள் போன்றவற்றில் சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிப்பதற்கான ஏற்பாடு இதுவாகும். இதில் இலங்கை மத்திய வங்கியின் பிணை முறி ஊழல் விசாரணையும் உள்ளடங்குவதாய் இருக்கும். அமைச்சரவையில் ஏற்கனவே சில அமைச்சர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள 19 அம்ச அறிக்கையுடன் சேர்த்து, இந்தச் சட்ட முன்வரைவும் அமைச்சரவை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். இந்த விடயத்தை அமைச்சர்கள் சரத்

அமுனுகம மற்றும் சம்பிக்க ரணவக்க ஆகியவர்கள் முன்னின்று நகர்த்துகிறார்கள்.

### ஜனாதிபதியின் முன்னுள்ள மூன்று தெரிவுகள்

பிணை முறிப் பிரச்சினை நீர்த்துப் போக விடப்படமாட்டாது என்று ஜனாதிபதிக்கு நெருக்கமான ஒரு தரப்பினர் தெரிவித்துள்ளனர். ஜனாதிபதிக்கு முன்னால் மூன்று தெரிவுகள் காணப்படுகின்றன. விரிவான அதிகாரங்களைக் கொண்ட குற்றவியல் நீதி ஆணையம், விசாரணையின்போது வெளிவரும் ஆதாரங்களை நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்யும் அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதியின் விசேட விசாரணை ஆணையம், துறைசார் நிபுணர்களின் அனுசரணையுடன் செயற்படும் பொலிஸ் விசாரணை என்பனவே அவையாகும். குற்றவியல் நீதி விசாரணை ஆணையம் அமைக்க வேண்டும் என்ற அறிக்கையில், சில ஐ.தே.க. அமைச்சர்களும் கையயழுத்திட்டுள்ளார்கள் என்பது ஏற்கனவே தெரிந்த விடயம். ஆனால் மத்திய வங்கி பிணை முறி தொடர்பாக விசாரணை கோருவதை அவர்களும் ஆதரிப்பார்கள் என்று கூறமுடியாது. பிணை முறியில் தவறு ஏதும் இடம் பெறவில்லை என்ற அவர்களின் நிலைப்பாடே இதற்குக் காரணம்.

இந்தப் பின்புலத்தில்தான், அரசிலுள்ள இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுவதைப் பகிரங்கமாக மேற்கொள்ளத் தொடங்கியுள்ளார்கள்.

சில ஐ.தே.கட்சியினர், முன்னாள் அமைச்சர் பசில்ராஜபக்சவுடன் பத்தரமுல்லவில் பேச்சுகள் நடத்தியுள்ளார்கள் என்று இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா குற்றஞ்சாட்டியுள்ளார். புதிய முன்னணி ஒன்றை அமைக்கும் நோக்கத்தில் இது நடைபெற்றுள்ளது என்று பத்திரிகையாளர்களிடம் அவர் கூறி யுள்ளார்.

ஆனால், அதே குற்றச்சாட்டை டிலான் பெரேரா மீதும் அவரது நண்பர்கள் மீதும் ஐ.தே.கவினர் திருப்பிவிட்டிருக்கிறார்கள். இந்தக் குற்றச்சாட்டை விடுப்பதற்கு கொழும்பு மத்தி நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரகுமான், ஐ.தே.க. தலைமையகமான சிறிகோத்தாவில் பத்திரிலைகயாளர் மாநாடு ஒன்றை நடத்தியிருந்தார். பிரச்சினைகள் இரு கட்சிகளுக்குமிடையில் இவ்வாறு விரிவடைந்து போவதற்கு முக்கிய காரணியாகக் காணப்படும் இன்னொரு விடயம் என்னவென்றால், பல்வேறு குற்றங்களுக்காக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வரும் ராஜபக்ச குடும்ப உறுப்பினர்களுக்கு, விசாரணை பற்றிய விவரங்களை வழங்கி அவர்களுக்கு சில ஐ.தே.க அமைச்சர்கள் உதவி புரிந்து வருகிறார்கள் என்பதாகும். இந்த விடயம் மேலும் தீவிரம் அடைவதற்கு பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர மேற்கொண்டிருந்த தொலைபேசி உரையாடல் ஒன்றின்போது ஒருவரை "சேர்" என்று விளித்து "நிலமே" என்பவர் கைது செய்யப்படமாட்டார் என்று உறுதியளித்திருந்தமையாகும். இந்தச் சம்பவம் ஊடகவியலாளர் ஒருவரால் ஒளிப்பதிவு செய்யப்பட்டு தொலைக்காட்சிகளில் காட்டப்பட்டிருந்தது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் இது குறித்து மிகுந்த ஆத்திரமடைந்தவர்களாய்க் காணப்பட்டனர்.

### அபிவிருத்திச் சட்டப் பிரச்சினை

ஐ.தே.கவினருக்கு ஏற்பட்டுள்ள மிக மோசமான பின்னடைவு என்னவென்றால் அபிவிருத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்ட முன்வரைவுக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்பாகும். இலங்கையின் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்களின் முன்னேற்றத்துக்கு உதவுவது போன்றவை உள்ளடங்கலாக சகல விடயங்கள் தொடர்பாகவும் தேசியக் கொள்கை ஒன்றை உருவாக்க உதவுவதே இந்தச் சட்ட வரைவின் நோக்கம் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

> “ திறமாகச் செயற்பாடாதவர்கள் அல்லது மோசமான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்களை மாற்றிப் புதுப்பிப்பதற்கு ஜனாதிபதி விரும்புகிறதனைங எனத் தெரிகின்றது. ஆனால் ஐ.தே.கவைச் சேர்ந்த அமைச்சர்கள் எவரும் தமது அமைச்சுக்களில் மாற்றம் செய்யப் படுவதை விரும்புவதாகத் தெரியவில்லை. சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்களும் அவ்வளவாக மாற்றத்தை விரும்பவில்லை.

இந்தச் சட்ட முன்வரைபு தொடர்பாக எழுப்பப்படும் பிரதான இரண்டு பிரச்சினைகளில் ஒன்று, சிறப்பு அதிகாரங்கள் கொண்ட அமைச்சர் பதவி ஒன்றை உருவாக்க முயற்சிக்கப்படுவதாகவும், அது இப்பொழுது மாகாண சபைகளிடம் உள்ள அதிகாரங்களைப் பறிப்பதாகவும் இருக்கிறது என்பதாகும். இந்தச் சட்டத்தின் நோக்கம் அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதே என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த மாதம் 23ஆம் திகதி நடத்திய முதலமைச்சர்கள் மாநாட்டில் விளக்கம் கொடுத்திருந்தார். இப்பொழுது பிரதமரின் கீழ்ச் செயற்படும் தேசியக்கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் தொடர்பான அமைச்சு, புதிய சுப்பர் அமைச்சின் கீழ் கொண்டுவரப்படுவதாக இருக்கும். இதனையே எதிர்த்தரப்பினர் கடுமையாக விமர்சித்து வருகிறார்கள்.

இந்தச் சட்டத்தின் கீழ் அபிவிருத்திக் கான முகவர் அமைப்பொன்று உருவாக்கப்படும். இதில் பொருளாதாரத்தை நவீனப்படுத்தல், ஏற்றுமதிப்பொருள்கள் மற்றும் சேவைகளை முன்நகர்த்தல், நுகர்வோர் நலன்களை உறுதிப்படுத்தல் மற்றும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவது போன்றவை அடங்கும். இவைகளில் பலவும் இப்போது பல அமைச்சுகளின் கீழ் இருக்கின்றன. எனவே அமைச்சர்கள் பலரின் கீழ் இருக்கும் பல பணிகள், தேசியக் கொள்கைகள் பொருளாதார அமைச்சின் கீழ் கொண்டுவரப்படுவதில் நியாயம் இருப்பதாகவே தென்படுகிறது. இப்போது அமைச்சர்களின் கீழ் இருக்கும் சில பணிகளை வேறிடத்துக்கு மாற்றும் யோசனையானது, இப்போது அவைகளுக்குப் பொறுப்பாக உள்ள அமைச்சர்களின் செயற்றிறன் குறித்த கேள்விகளை எழுப்புகின்றது. எதிர் பார்த்த அளவில் அவர்கள் செயற்படாவிடில், அந்தப் பொறுப்புக்களை வேறு இடத்துக்கு மாற்றுவது சரியான நடவடிக்கையாக இருக்க மாட்டாது. இந்தச் சட்ட வரைவானது, ஊவா, வட மத்தி, சப்ரகமுவ, மத்திய மாகாணம், தெற்கு மற்றும் வடமேல் மாகாண சபை களால் நிராகரிக்கப்பட்டுள்ளது. வடமாகாண சபையும் இதனை நிராகரித்துள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்ப்பாளர்களும் நிராகரித்துள்ளார்கள். ஜனாதிபதியை ஆதரிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும், நாடாளுமன்றில் அதற்கு ஆதரவு தெரிவிக்கப்போவதில்லை என்று அறிவித்துள்ளார்கள். அதே நிலைப்பாட்டில் தான் கூட்டு எதிர்க் கட்சியினரும் உள்ளனர். இப்பொழுது இந்தச் சட்டம் முழுமையாக கைவிடப்படுமா அல்லது சில மாற்றங்களுடன் கொண்டுவரப்படுமா என்பது கேள்வியாக எழுந்துள்ளது. சில ஐ.தே.க. அமைச்சர்கள், சட்டத்தைத் தொடர்ந்து முன்னகர்த்தவேண்டும் என்று விரும்புகிறார்கள். அவ்வாறாயின் பெரும்பான்மையான மாகாணசபைகளும், சிறிசேனவின் சுதந்திரக்கட்சியினரும் நிராகரித்துள்ள நிலையில், இது அரசமைப்புப் பிரச்சினை ஒன்றைக் கிளப்புவதாக அமையலாம்.

அத்துடன் அதிகாரப் பகிர் வுக்கு உறுதியளித்துள்ள ஐ.தே.கவின் கொள்கைக்கு மாறானதாகவும் அமையும்.

இவைகளுக்கிடையில், அமைச்சரவையை மாற்றி அமைப்பது தொடர்பாக ஜனாதிபதி ஆலோசித்து வருகிறார் எனத் ஒரு தகவல் வெளியாகி உள்ளது. திறமான நிகழ்ச்சி நிரல் ஒன்றின் கீழ், வேகமாகப் பணியாற்றக் கூடிய ஓர் அமைச்சர் குழுவை உருவாக்கி பொது மக்களின் குறைகூறல்களில் இருந்து விடுபடுவது இதன் நோக்கம் எனத் தெரிகின்றது. திறமாகச் செயற்பாடாதவர்கள் அல்லது மோசமான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்களை மாற்றிப் புதுப்பிப்பதற்கு ஜனாதிபதி விரும்புகிறார் எனத் தெரிகின்றது.

ஆனால் ஐ.தே.கவைச் சேர்ந்த அமைச்சர்கள் எவரும் தமது அமைச்சுக்களில் மாற்றம் செய்யப்படுவதை விரும்புவதாகத் தெரியவில்லை. சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்களும் அவ்வளவாக மாற்றத்தை விரும்பவில்லை. எனவே அமைச்சரவை மீளமைப்பு, இப்போதைக்கு இரண்டாம் விடயமாகவே காணப்படுகின்றது. ■





## வாசகர் திருமுகம்

### நெற்செய்கைக் காணிகளை விட்டு வையுங்களேன்!

சில்லாலை வடக்கு ஜே/148 கிராம சேவகர் பிரிவிலுள்ள தும்பளப்பாய் வயல் வெளியின் எல்லைகளில் இரு இந்து ஆலயங்கள் அமைந்துள்ளன. இந்தப் பகுதியில் இந்துக்களும் கத்தோலிக்கர்களும் இதுவரை எதுவித சிக்கல்களும் இன்றி விவசாயம் செய்து வந்தனர். தமக்கென ஓர் ஆலயம் அமைக்க விரும்பிய இந்தப்பகுதி கத்தோலிக்க மதத்தவர்கள், இந்த வெளியின் நடுப்பகுதியில் வயல் வீதியருகில் ஒரு கத்தோலிக்க ஆலயத்தைச்சென்றவருடம் அமைத்தனர். சில தீவிரபோக்குடையோர் ஏட்டிக்குப் போட்டியாக இந்த ஆலயத்திலிருந்து சிறிது தூரம் தள்ளி மேலுமொரு இந்து ஆலயம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதனால் இருதரப்பினர்கள் மத்தியில் ஒரு பெரும் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. இதன் பின்னணியில் ஒரு இந்து சமய தீவிர மதவாத இயக்கம் செயற்படுவதாக அறிய முடிகின்றது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் புதிதாக ஆலயம் அமைப்போருடன் தொடர்பு கொண்டு அவர்களது முயற்சிகளைத் தடுத்து நிறுத்தி நெற்செய்கைக்கு இடமளிக்க வேண்டுமென இந்தப்பகுதி விவசாயிகள் வேண்டிக் கொண்டுள்ளனர். அதிகாரிகள் இது விடயத்தில் கவனம் எடுப்பார்களா?

*பாதிப்படையுமொரு விவசாயி, சில்லாலை*

### பயணம் ஒரு தண்டனை

இப்போது நேரம் காலை 4.10, கொழும்பு யாழ் சொகுசு பேரூந்தில் 'பயணம்' என்ற பெயரில் தண்டனை அனுபவிக்கின்றேன். கொழும்பில் ஏறிய நேரம் முதல், இறங்கும் வரை, 'பாடல்' என்ற பெயரில் காதைப் பிளக்கும் சத்தம். எல்லோருக்கும் ஒட்டு மொத்தமாக காது கேட்காது என்ற முடிவுடன், எல்லோரையும் செவிடாக்கும் இந்த தனியார் பேரூந்து சேவையின் குறும் பார்வையை நிவர்த்தி செய்ய அதிகாரிகள் முன்வருவார்களா?

10 மணித்தியாலங்கள் அங்காடி வியாபாரியின் விளம்பர வண்டியில் பயணம் செய்யும் அவலமான அனுபவம் எமக்கு தண்டனை போன்று உள்ளது. ஒரு விமான ஓட்டி இப்படிப் பயணிகளை இம்சைப்படுத்துவதில்லை. நோயாளிகள், சிறுவர், வயோதிபர் என்று பலதரப்பட்டோர் இரவுப் பயணம் செய்யும் போது, நித்திரையைக் குழப்பி, தலைவலி ஏற்படுத்தித்தான் பயணம் செய்ய வேண்டுமா?

தேவைக்கு ஒரு தொலைபேசி அழைப்பு ஏற்படுத்த முடியாது. பாடலை ரசிப்பவர்கள்கூட வேண்டாம்என்றுசொல்லுமளவுக்கு கட்டுப்பாடற்ற முறையில் நடைமுறை உள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பயணிகளுக்கு கருணை காட்டுவார்களா?

*ரோகினி நாகலிங்கம்*



# உலகின் தனித்துவமான இலத்திரனியல் உபகரணங்களை அபான்ஸ் வழங்குகிறது

*இலத்திரனியல் உற்பத்திகள், வீட்டு மின் உபகரணங்கள் மற் றும் கணினி உற்பத்திகளை இலகு விலையிலும் சலுகை அடிப்படையிலும் பெற்றுக்கொள்ள முடிகிறது*

பண்டிகைக் காலத்தில் தனித்துவமான,தரமான இலத்திரனியல் உபகர ணங்களை அபான்ஸ் நிறுவனத்திடமிருந்து குறைந்தவிலையிலும் சலுகை அடிப்படையிலும் வாடிக்கையாளர்கள் பெற்றுக் கொள்ளலா மென தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதன்பிரகாரம் நாடு முழு வதும் அமையப்பெற் றுள்ள அபான்ஸ் காட்சியறை களில் நீண்ட ஆயுளைக் கொண் டமைந்த அதியுயர் தரத்துடனான உற்பத்திகள் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன.

எல்.ஜி,மிற்சுபிசி கூவர்,எலக்ரோ லக்ஸ்,அல்பா,பிலிப்ஸ்,ரொசீபா, காவெல்ஸ்கோறெலி, கோர் னிங்,விசன்ஸ், மோர்பி றிச் சாட்ஸ்,பமிக்ஸ் மற்றும் கோ புறோ உற்பத்திகளை அபான் சிடம் பெற்றுக்கொள்ள முடிகிறது. இவற்றுள் அபான்ஸ் வழங்கும் குளிரூட்டிகள், சலவை இயந் திரங்கள், மைக்ரோவேவ் அவண், ஏயர்ஸ்; பிறேயர்கள், வக்கியூம் கிளீனர்கள், ஸ்டான் டிங் குக்கர்கள், ஹொப்ஸ், ஹட்ஸ், பில்ட் இன் அவண், குக் வேயார்,பூட் புரோஸோஸர்கள், பிளேண்டர்கள், மிக்ஸர் கிரைண் டர்கள், சமயலறை உபகரணங் கள், அயன்கள், அழகுசாதனப் பொருள்கள், மின்விசிறிகள் என்பன முதன்மையான பொருள்களாகக் காணப்படு கின்றன.

**பண்டிகைக் காலத்தில் அபான்ஸ் வழங்கும் 50 சத வீதம் வரையான விலைக்கழிவை பெறமுடியும். அத்துடன் பெறுமதியான பரிசுகள், பொதி சலுகைகள், மாற்றீட்டு சலுகைகள், நீண்டகால இலவச உத்தரவாதம், வட்டியற்ற தவணை கொடுப்பனவுகள், இலகு தவணை கொடுப்பனவுகளையும் வாடிக்கையாளர்கள் உரித்தாக்கிக் கொள்ள முடியும்.**

அத்துடன் உல கின் தலைசிறந்த தொலைக் காட்சி கள், கோம் தியேட் டர்கள்,சவுண்ட்பார், ஓடியோ உபகரணங் கள், அதிதிறன் கைபேசிகள்,ஹெட் போன் மற்றும் பாகங்களையும் அபான்ஸ் காட்சி யறைகளில் பெற் றுக்கொள்ள முடி யும்.

உலகின் முதல்தர கணினி விற் பனை நாமங்கள் பலவற்றின் அதிகாரப்பூர்வமான விற்பனை முகவர் மற்றும் சேவை வழங்கு நராக அபான்ஸ் நிறுவனம் திகழ் கின்றது. அதேபோன்று உலகின் முதல்தரமான பல்வேறு விற் பனை நாமங்களைக் கொண்ட வளிச்சீராக்கிகளின் அதிகாரப் பூர்வ முகவராகவும் அபான்ஸ் நிறுவனம் செயற்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது.

## யூனியன் அசுரன்ஸ் சமூகப் பொறுப்புணர்வு செயற்பாடுகள் தொடர்பில் கரிசனை



யூனியன் அசுரன்ஸின் சமூகப் பொறுப்புணர்வு வர்த்தக நாமம் யூனி யன் மனிதாபிமானம் என்பதான மக்களின் சுகாதாரம், ஆரோக்கியம் மற்றும் நலன் ஆகியவை தொடர் பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்றிட்டங்களை நடத்தியுள்ள துடன் அவை தொடர்பில் அதிக கவ னம் செலுத்தி வருவதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட யூனியன் மனிதாபிமானம் சமூகப் பொறுப்புணர்வுச் செயற்பாடுகள் என்பது சமூகத்தில் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் கொழும்பு மாநகர சபையின் பொது சுகாதாரத் திணைக்களம் மற்றும் பொது சுகா தாரப் பரிசோதகர் ஆகிய தரப்பினரின் உதவியுடன் மொத்தமாக 57 டெங்கு விழிப்புணர்வுச் செயற்றிட் டங்களும் 60 இற்கும் அதிகமான தலசீமியா விழிப் புணர்வு நிகழ்ச்சிகளும் 14 நீரிழிவு தடுப்பு செயற்பாடு களும் யூனியன் அசுரன்ஸ் நிறுவனத்தால் முன் னெடுக்கப்பட்டுள்ளது. இவைதவிர டெங்கு நோயிலி ருந்து சமூகத்தை விடுவிப்பது தொடர்பில் யூனியன் அசுரன்ஸ் கவனம் செலுத்தி வருவதுடன் நாடு முழுமைக்குமாக டெங்கு ஒழிப்புத் தொடர்பான விழிப் புணர்வு செயற்றிட்டமொன்றை யூனியன் அசுரன்ஸ் முன்னெ டுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த செயற்பாடுகள் தொடர்பில் கருத்துரைத்துள்ள யூனியன் அசுரன்ஸ் பணிப்பாளரும், பிர தம நிறைவேற்று அதிகாரியுமான டேர்க் பெரேரா, 2016ம் ஆண்டில் நாம் முன்னெடுத்திருந்த சமூகப் பொறுப்புணர்வுச் செயற்பாடுகள் தந்துள்ள பெறு பேறுகள் குறித்து நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். ஆனாலும் சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்த வேண் டிய மேலும் பல செயற்பாடுகளை முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளன. குறிப்பாக எமது யூனியனினால் மனிதாபிமானம் வர்த்தக நாமத்தினூடாக இன்னும் அதி கமான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக் கப்பட வேண்டியுள்ளன - என்றார்.

நுட்பம்



## சர்பேஸ் புறோ கைபிரிட் 5 மடிக்கணினி அறிமுகம்

மைக்ரோ சொப்ட் நிறுவனத்தின் புதிய தயாரிப்பாக சர்பேஸ் புறோ கைபிரிட் 5 மடிக்கணினி சந்தைக்கு அறிமுகம் பெறவுள்ளதான தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் வெளியிடப்படவுள்ள சர்பேஸ் புறோ கைபிரிட் 5 மடிக்கணினியானது 4 கே அல்ட்ரா எச்.டி திரை, வயர்லெஸ் மின்னேற்ற வசதி மற்றும் மாக்னெட்டிக் வடிவமைப்பு என்பவற்றை கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்பதாக வெளியிடப் பட்ட சர்பேஸ் புறோ சாதனங் களை போன்றதாகவே புதிய சர் பேஸ் புறோ கைபிரிட் 5 மடிக்கணினி பெகட்ரான் மூலம் வடிவமைக்கப்படவிருப்பதாக கூறப்படுகிறது.

எனினும் மேற்படி புதிய மடிக்கணினி வடிவமைப்பினுள் குவாண்டா கணினியை உள்ளீர்க்க மைக்ரோ சொப்ட் திட்டமிட்டுள்ளதான தகவலும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

சர்பேஸ் புறோவோடு சமீபத்தில் அறிமுகம் செய்யப்பட்ட சர்பேஸ் ஸ்ருடியோ ஏ.ஜ.ஓ என்பவற்றைவிட பெகட்ரானின் செயல்திறன் மேம்படுத்தப்பட்ட தாக இருக்குமென எதிர்பார்க்கப் படுகிறது.

இவைதவிர மைக்ரோ சொப்ட் நிறுவனம் விண்டோஸ் 10 இயங்கு தளத்தினை இணைய விளையாட்டு பிரியர்களுக்கு ஏற்றதாக வடிவமைக்கும் பணிகளை முன்னெடுத்துவருவதாகச் சொல்லப்படுகிறது.

வணிகம்

## கொமர்ஷல் கிரெடிட் பங்குரிமை 70 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு கொள்முதல்



தாய்லாந்து பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள ஒரு டிஜிற்றல் நிதிக் கம்பனியான குறூப் லீஸ் பப்ளிக் கம்பனியானது கொழும்பு பங்குச் சந்தையில் கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி.நிறுவனத்தி ற்குரித்தானதாக காணப்பட்ட 29.99 வீதம் பங்குரிமையை 70 மில்லியன் ஐக்கிய அமெ ரிக்க டொலருக்கு கொள்முதல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கொடுக்கல் வாங்கல் செயற்பாடானது 10.56 பில் லியன் ரூபாவிற்கும் அதிக மானது என மதிப்பிடப்பட் டுள்ளதுடன் கொழும்புப் பங்குச் சந்தையில் பதிவு செய்யப்பட்ட மிகவுயர்ந்த பெறுமதிகளுள் ஒன்றாகவும் அமைந்துள்ளது.

இதுதொடர்பில் கருத்துரைத் துள்ள கொமர்ஷல் கிரெடிட் நிறுவனத்தின் பிரதம தொழிற் பாட்டு அதிகாரி ரஜிவ் காசி செட்டி, "குறூப் லீஸ் பப்ளிக் கம்பனியுடன் பங்காளியாக ஒன்றிணைகின்றமை தொடர்பில் கொமர்ஷல் கிரெடிட் நிறுவனம் மிகவும் மகிழ்ச்சி யடைகின்றது. அதேநேரத்தில் முதலீட்டுதல், ஒன்றிணைந்த பலம் மற்றும் வளர்ச்சி ஆகிய வற்றுக்கான பல வாய்ப்புக் களைக் கொண்டுள்ள இந்த முதலீட்டு செயற்பாடானது நீண்டகால அடிப்படையிலான பரஸ்பரம் வெற்றியளிக்கும் பங்காளித்துவத்தை கொண்டுள்ளமையை நாம் உணர்கின்றோம்" - என் றார்.

# மண்ணின் புகழைப் பறைசாற்றிய பெருவிழா



எமது கலாசாரங்களை அழியவிடாது பேணுவதற்குரிய விழாவாகவும் எமது கலைஞர்களை ஊக்குவித்து அவர்களைக் கௌரவிக்கும் ஒரு நிகழ்வாகவும் வருடந்தோறும் காலாசாரப் பெருவிழா நடைபெறுவது வழக்கம். இந்த வகையில் இந்த வருடமும் மிகச்சிறப்பாக நடைபெற்றது காரைநகர் பிரதேச கலாசாரப் பெருவிழா.

வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் காரைநகர் பிரதேச செயலகமும், கலாசாரப் பேரவையும், கலாசார அதிகார சபையும் இணைந்து நடத்திய இந்தக் கலாசாரப் பெருவிழாவில் 'கலங்கரை-2016' மலர் வெளியீடும், கலைஞானச் சுடர் விருது வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

கடந்த 27ஆம் திகதி செவ்வாய்க் கிழமை அன்று பி.ப 2 மணிக்கு காரைநகர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற காரைநகர் பிரதேச கலாசாரப் பெருவிழா பாரம்பரியப் பெருமைகள் மிக்க காரைநகர் மண்ணின் புகழைப் பறைசாற்றுவதாக அமைந்தமை உண்மையேயன்றி வெறும் புகழ்ச்சியன்று.

அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தும் வகையில் இலங்கையில் உள்ள தோற்கருவிகளிலேயே மிகவும் பெரியதான பேரிகை வாத்தியத்தின் முழக்கத்துடன் இந்த நிகழ்வு ஆரம்பமானது. ஐந்து அடி விட்டத்தைக் கொண்டதான இந்தப் பேரிகை காரைநகரைச் சேர்ந்த கலைஞர் சின்னையா சோமசேகரம்பிள்ளையால் உருவாக்கப்பட்டதுடன், இந்த வாத்திய விருந்தானது ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் லி. அனிருத்தனால் நெறியாள்கை செய்யப்பட்டிருந்தது.

தொடர்ந்து இடம்பெற்ற காரைநகர் சக்தி கல்வி மேம்பாட்டு நிலையம், கிழவன்காடு கலாமன்றம், காரைநகர் கலாசார மத்திய நிலையம் ஆகியவற்றின் மாணவ மாணவிகள் வழங்கிய கலை நிகழ்வுகள் பார்ப்போரை மெய்சிலிர்க்க வைப்பனவாக அமைந்திருந்தன. இவற்றில் சக்தி கல்வி மேம்பாட்டு நிலையத்தினால் ஆற்றுகை செய்யப்பட்ட காவடி நடனம் தேசிய அளவில் இடம்பெற்ற போட்டியில் முதலிடத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப் பெருவிழாவின் பிரதான அம்சமாக இடம்பெற்ற காரைநகரில் வாழ்ந்து மறைந்த, இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்த மண்ணுக்குப் பெருமை சேர்த்த ஆளுமைகளைப் பற்றிய தகவல்களை ஆவணப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட 'கலங்கரை 2016' மலர் வெளியீடு இடம்பெற்றது. அதன் முதற் பிரதியை முதன்மை விருந்தினராக இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்த வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணத்திடமிருந்து காரை மண்ணின் மைந்தனும் பிரபல தொழிலதிபருமான கல்விக் காருண்யன் ஈ.எஸ்.பி நாகரட்ணம் பெற்றுக் கொண்டார். இந்த நூலில் சுமார் நாற்பத்து ஐந்து வரையான ஆளுமைகள் பற்றிய தகவல்கள் ஆவணப்படுத்தப்பட்டு இருந்தமை பாராட்டத்தக்கது.

அடுத்து இடம்பெற்ற, காரைநகரில் கலை இலக்கியப் பணியாற்றிய மூத்த கலைஞர்கள் எழுத்தாளர்களுக்கான கலைஞானச் சுடர் விருது வழங்கும் நிகழ்வில் தமிழர் வாழ்வியலின் தனித்துவமானதொரு பாதுகாவலனாகத் திகழ்கின்ற களபூமியைச் சேர்ந்த கந்தப்பு நடராஜாவுக் குப் பாரம்பரிய பொருள்களைப் பேணிப் பாதுகாக்கின்றமையைப் பாராட்டியும், தோப்புக்காட்டைச் சேர்ந்த நாடக நடிகரும் நெறியாளருமான கந்தையா மதியாபரணம் மற்றும் நாடக நடிகர் பொன்னையா வேலும்மயிலும் ஆகியோருக்கு நாடகத் துறைக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டியும், விக்காவிலைச் சேர்ந்த நாடக நடிகர்களான சின்னையா சோமசேகரம்பிள்ளை மற்றும் சின்னையா பிரமநாதன் ஆகியோருக்கு நாடகத் துறைக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டியும், கைவினைக் கலைஞரும், கூத்து, நவீன நாடகங்களுக்கான மேடைப் பொருள்கள், வேட உடை, ஒப்பனைக் கலைஞருமான தோப்புக்காட்டைச் சேர்ந்த கந்தையா பாலனுக்கு அவரது கலைப் பணிகளைப் பாராட்டியும் இந்த வருடத்துக்கான 'கலைஞானச்சுடர்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் இலங்கைத் திருநாட்டின் நெற்றித் திலகம் போன்று திகழ்கின்ற காரைநகரின் பெருமைகளைப் பறைசாற்றும் வகையில் அமைந்த இந்தக் கலாசாரப் பெருவிழா பலரினதும் பாராட்டையும் வரவேற்பையும் பெற்றமை சிறப்பு அம்சமாகும்.



# சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெற்ற திருவாசக விழா






சந்நிதியான் ஆச்சிரமம் முன்னெடுத்த திருவாகச விழா, முன்னாள் இந்து கலாசார அமைச்சர் அமரர் தி.மகேஸ்வரனின் ஒன்பதாம் ஆண்டு நினைவு நிகழ்வு மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வுகள் 01.01.2016 ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன. பேரவைத் தலைவர் பொ.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுகளில் கு.தயாளரூபினி, கு. தயாளநீதினி ஆகியோரின் திருவாசக இசைக்கச்சேரி பக்கவாத்திய சகிதம் இடம்பெற்றது. நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக பரமாசாரிய சுவாமிகள் வழங்கினார்.

அமரர் தி.மகேஸ்வரன் குறித்த நினைவுரையை புற்றளை மகா வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் ஆற்றினார். திருவாசகம் பற்றிய எழிலுரையை ஆசிரியர் துரை. கணேசமூர்த்தி நிகழ்த்தினார். சிறப்பு நிகழ்வாக திருவாசகத்தைக் கற்போர் மனதைக் கவர்வதில் விஞ்சி நிற்பது தத்துவ அறிவா? பக்தி உணர்வா? என்ற பொருளில் பட்டிமன்றம் இடம்பெற்றது.

தத்துவ அறிவே என்ற பொருளில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் சி.ரமணராஜா, ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் சி.கா. கமலநாதன் ஆகியோரும் பக்தி உணர்வே என்ற பொருளில் யாழ். பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா, சமூகசேவை உத்தியோகத்தர் வே. சிவராஜா ஆகியோரும் வாதிட்டனர். நடுவராக கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் பங்கேற்றார்.

நிகழ்வில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன. நிகழ்வின்போது 140 மாணவர்களுக்கு ஆச்சிரம சுவாமிகளால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

ஸ்ரீ.நதிபரன்



# ஆறுமுக நாவலரின் புனிதப் பணிக்கு பெருமை சேர்ப்பது

## அவரின் வழிநின்றுழைத்தலே

வரலாற்றில் முதற்றடவையாக சைவமும் தமிழும் சீர்பெற்றிலங்கும் யாழ். மண்ணில் நல்லை நகரிலே இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சைவ சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட பெருமகனான ஆறுமுக நாவலரின் குருபூசை தினத்தைச் சிறப்பிக்கும் முகமாகவும் திணைக்களத்தின் 90 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் ஏற்பாடு செய்யப்பட்ட நாவலர் ஆய்வு மாநாடு ஆன்மிக எழுச்சியுடனும் பக்திபூர்வமாகவும் அண்மையில் வெகு சிறப்பாக நடைபெற்று முடிவடைந்திருக்கிறது. அதுவும் நாவலர் பெருமான் அவதரித்த புனித மண்ணான நல்லூரில் நடந்தேறியது இந்நிகழ்வுக்கு மேலும் பலம் சேர்ப்பதாக அமைந்துள்ளது. இதில் நாவலர் பற்றிய பல நூல்களும் வெளியீடு செய்யப்பட்டிருக்கின்றமை சிறப்பம்சமாகும்.
தமிழ்க் குலம் உலகப் புகழெய்தத் தாழாது ஞற்றுங்கள். அஃது ஒன்றே எனக்கு தமிழினம் செய்யும் மிகப்பெரும் கைமாறாகும் என்பது இற்றைக்கு ஏறக்குறைய ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஈழம் தந்த ஆறுமுகநாவலர் பெருமான் கூறிச்சென்ற மெய்க்கூற்றாக அமைகிறது.

### ஆழமான மதம், மொழி மீதான பற்று

இது அரசியல்வாதிகளிடமிருந்து பிறக்கும் வெற்றுரையைப் போல வெறுமனே அவர் வாயிலிருந்து எழுமாறாக வந்து தித்ததல்ல. அவரது இதயப்பரப்பெல்லாம் இழையோடி ஆழ வேரோடியுள்ள மதம் - மொழி மீதிருந்த ஆழமான பற்று தலின் -வேணவாவின் வெளிப்பாடே அது. தமிழ் மொழியும் சைவசமயமும் - இவையிரண்டுமே என்னிரு கண்கள்: இவற்றை ஒளிகுன்றாது பாதுகாப்பதே என்முன் விரிந்திருக்கும் பணியாகும். அதுவே எனது வாழ்வின் குறிக்கோளுமாகும் என்ற தனது பணிக்கூற்றுக்கு ஒப்ப தன் வாழ்வியலைக் கட்டமைத்து வாழ்ந்த கர்மவீரர் அவர்.நல்லை நகர் நாவலர் பிறந்திலரேல் சொல்லுதமிழ் எங்கே, சுருதி எங்கே என பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஓர் இடத்தில் நாவலரை விதந்துரைத்திருக்கின்றமை குறிப்பிடற்பாலது. இவரைப் பற்றிய சிறிய முன்னோட்டத்துடன் விடயத்துக்குள் நுழைவோம். சைவமும், தமிழும் சிறப்புற்றிலங்கிய யாழ்ப்பாண நன்நகரில் அதன் இதய பூமியாக விளங்கும் நல்லை மாநகரில் 1822 டிசெம்பர் 18இல் கந்தப்பிள்ளை- வள்ளியம்மை தம்பதியினர் செய்த அருந்தவப் பேற்றால் நிகழ்ந்த அற்புதம் நிறைந்த உற்பவமாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் வந்துதித்தார். பெற்றோர் அவருக்கிட்ட நாமம் ஆறுமுகம் பிள்ளை. பின்நாளில் அவரது ஆழ்ந்த கல்விப் புலமையை முன்னிறுத்தியும் அவராற்றிய சைவத் தமிழ்ப் பணிகளை கௌரவித்தும் அவருடன் இயல்பாகவே இருந்த நாவன்மையை சிறப்பித்தும் 1865 இல் மதுரை திருவாவடுதுறை ஆதீனமானது நாவலர் என்ற மதிப்பார்ந்த அதிசிறப்புப் பட்டத்தை வழங்கியமையால் எல்லோரும் ஆறுமுகநாவலர் என்றே அழைக்கலாயினர். ஐந்து வயதில் வித்தியாரம்பம் செய்யப்பட்ட இவர், தமது இளமைப் பருவத்தில் நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயர், இருபாலை சேனாதிராய முதலியார், நல்லூர் சரவணமுத்துப்புலவர் ஆகியோரிடம் குருகுல முறைப்படி தமிழ் மொழியையும் சைவ சமய சாத்திரங்களையும் பயின்றதுடன் கூடவே வடமொழியையும் துறைபோகக் கற்றார். யாழ்ப்பாணம் வெஸ்லியன் மெதடிஸ்த மிஷன் கல்லூரியில் (இக்கால யாழ். மத்திய கல்லூரி) ஆங்கில மொழியைக் கற்றதுடன், அக்கல்லூரியில் சிலகாலம் ஆசிரியராகவும் கடமை புரிந்தார். 1841ஆம் ஆண்டில் ஆசிரியப் பணிசெய்ய ஆரம்பிக்கையில் அவருக்கு வயது 19. இவரது கல்விப்புலமையை -ஆங்கில மொழி அறிவை அவதானித்த அவ்வேளையில் அப்பாடசாலையின் அதிபராக இருந்த பேர்சிவல் பாதிரியார், ஆங்கிலத்திலுள்ள கிறிஸ்தவ விவிலிய நூலை தமிழில் மொழிபெயர்க்கும்வேலையைஒப்படைத்தார்.அவ்வேலையை சிறந்த முறையில் செய்து அவரின் பாராட்டையும் பெற்றார். காலத்தின் அசைவினால் அவரது வாழ்க்கைப் பயணம் சமயப் பணி நோக்கி திருப்பப்படுகிறது.இதனால் தமக்குக் கிடைத்த உத்தியோகத் தையும் ஏனைய வாய்ப்பு, வசதிகளையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு சைவ மக்களின் நல்வாழ்வுக்காக தன்னையே அர்ப்பணித்தார்.

### பகவத் கீதையில் கிருஸ்ணனின் உபதேசம்

பகவத் கீதையிலே கிருஷ்ண பரமாத்மாவால் அருச்சுனனுக்கு கூறிய உபதேசத்தில் "உலகில் அதர்மம் மேலோங்கி தர்மத்துக்கு அழிவு ஏற்படும்போது நான் என்னை விளக்குகிறேன். நல்லோரை காக்கவும் தீயோரை அழிக்கவும் யுகம் தோறும் அவதாரம் புரிகின்றேன்." எனக் குறிப்பிடுவதாக பகவத்கீதை இயம்புகிறது. நாவலரின் பெருமை பேசுகின்ற இவ்விடத்தில் ஏனிந்தப் பீடிகை? இரண்டுக்குமிடையே என்ன சம்பந்தம்? எனக் கேட்பின் சம்பந்தமிருக்கிறது. இவர் அவதரித்த காலப்பகுதி, சைவமும் தமிழும் நலிவுற்று மக்களின் வாழ்வை இருள் சூழ்ந்திருந்த நேரமது. இலங்கைக்கு வர்த்தக நோக்குடன் வந்த அந்நியரின் ஆட்சியில் நம் தேசம் கட்டுண்டு கிடந்த நேரத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட சமயமாகவும் ஈழத்தமிழ் மக்களின் உள்ளத்துள் ஒளிவிளக்காய் சுடர்விட்டிலங்கும் சைவசமயமும் அவர்களது தாய்மொழியான தமிழ்மொழியும் அன்னியரது ஆட்சியதிகாரம் வலிவுற்றிருந்தமையால் அழிவின் விளிம்பில் நின்று ஊசலாடிய வேளையில் அந்நிய ஆதிக்கப்பிடியிலிருந்து சைவத்தையும் தமிழையும் மீட்டெடுக்கவல்லமீட்பராக அவதரித்த பெருமைக்குரியராக விளங்குகிறார். இவர் தனது சொல்லாலும்-எழுத்தாலும்-செயலாலும்-சுய சமய கலாசார வரன்முறைகளை மறந்து வாழ்ந்த மக்களின் அகக் கண்களை திறந்து உண்மை நிலையை அவர்களுக்கு உணர்த்தியதுடன், சைவமும்-தமிழும் அழியவிடாமல் பாதுகாத்து அவை புத்துயிர் பெற தன்னாலியன்ற அத்தனை பணிகளையும் செவ்வனே செய்த ஆபத்தானவனாக விளங்கினார். இவரது பணிகள் இலங்கையில் மாத்திரம் எல்லைப்படுத்தாமல் தென்இந்தியாவிலும் விரிவுகண்டன. இவரது பணிகள், சைவ சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டமையால் இவரை மக்கள், ஐந்தாம் குரவராகவும் போற்றிச் சிறப்பிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனைத்தான் மேற்போந்த கீதோபதேசம் வெளிப்படுத்தி நிற்கிறது நாவலர்பெருமானின் சமயப் பணிகளுள் மிகமுக்கியமானது திண்ணைப் பள்ளிக்கூடங்களை நிறுவி ஏழை மாணவர்களுக்கு கல்வி புகட்டியமையாகும். அவரால் முதன் முதல் ஸ்தாபிக்கப்பெற்ற சைவப் பாடசாலை வண்ணார் பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை. இது 1848 இல் நிறுவப் பட்டது. இங்கு மட்டுமன்றி இந்தியாவின் சிதம்பரத்திலும், 1864 ஆம் ஆண்டில் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவி கல்விப்பணியாற்றினார். பள்ளிகளை நிறுவுவதால் மட்டும் கல்வியறிவூட்ட முடியாது. மாணவர் களுக்கான பாடவிதானங்களை தயாரித்து அவற்றை ஒழுங்குறத் தொகுத்து நூலுருவில் வெளிக்கொணர வேண்டும்.

### அச்சுக் கூடங்கள் நிறுவப்பட்டன

அப் போதுதான் கற்றல்-கற்பித்தல் செயன்முறை இலகுவாக்கப்படும் என்ற-யதார்த்தத்தை உணர்ந்தவராக யாழ்ப்பாணத்திலும், சென்னையிலும் அச்சுக் கூடங்களை நிறுவியதுடன் ஏராளமான சைவசமயம், மொழியியல்சார்ந்த நூல்களை எழுதி-யாத்து, ஏலவே காணப்பட்ட பழம்பெருமை வாய்ந்த இலக்கியங்கள், புராணங்கள், சாத்திரங்களை தனது உரைநடையில் - மொழிநடையில் எழுதியும் ஏடுகளில் எழுதப்பட்டிருந்த பல்லரிய நூல்களை ஆய்வு செய்தும், மீள் பதிப்புச்செய்து அச்சு வாகன மேற்றினார்.


> சமகாலத்தில், எமது பாடசாலைகளில் சமயக் கல்விக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் குறைந்து வருகின்றமையைக் காணமுடிகிறது.

சமகாலத்தில், எமது பாடசாலைகளில் சமயக் கல்விக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் குறைந்துவருகின்றமையைக் காண முடிகிறது. இதன்விளைவு அறநெறிகள், ஒழுக்க விழுமியங்கள் தலைசாய்ந்து அக்கிரமங்கள், அட்டூழியங்கள் தலைதூக்கிவருகின்ற இக் காலகட்டத்தில் அறநெறிக் கல்வியறிவூட்டலின் தேவைப்பாடுகள் மேலெழுகின்றன. அன்று இதனை நன்குணர்ந்த எங்கள் நாவலர், சமயக்கல்வி ஊடான அற நெறிக்கல்வி முறையைப் புகுத்தி நாடு பெருமைகொள்ளுமளவுக்கு கல்விச் சாதனைகளை நிகழ்த்தினார். கல்வி அழகும் அற ஒழுக்கநெறியும் பொலிந்து விளங்கும் ஒரு சமூகத்தைக் காணத்துடித்தார். ஈற்றில் வெற்றியும் கண்டார். அதற்கு அவர் கொடுத்த விலையோ சொல்லும்தரமன்று. சமூக மேன்மைக்காகவும் மக்களது விடிவுக்காகவும் கடுமையாக உழைத்தார். தனது அறப்பயணத்துக்கு இல்லறம் தடையாக விருக்கும் எனக்கருதி இல்வாழ்வையும் துறந்தார். அதுமாத்திரமன்றி சிவாலயங்களிலும் மடாலயங்களிலும் சைவ சமய உண்மைகளை எடுத்தியம்பி பிரசங்கம் செய்தல், பஞ்சபுராணம் ஓதுதல், புராண படனம் செய்தல் மற்றும் துண்டுப் பிரசுரங்கள், கையேடுகள் என்பவற்றை வெளியிட்டும் சைவ மக்களிடையே புகுந்திருந்த கறைகளை- மாசுக்களையகற்றி புறச் சமயவாதிகளின் தீவிர பரப்புரைகளைத் தடுக்க எதிர்ப் பரப்புரை செய்தார்.ஈழத்தில் முதன் முதல் புராணபடன மரபை தோற்றுவித்த பெருமை இவரையே சாரும். குறிப்பாக புராண படனத்தில் கந்தபுராணம் சிறப்பிடம் பிடித்தமையினால், யாழ்ப்பாண கலாசாரம் கந்தபுராண கலாசாரம் என சிறப்பித்து போற்றவும் அடிகோலியது. ஆலயங்கள் ஆன்மாக்கள் லயிக்கும் புனிதமான இடம். அவற்றைக் காவார்விடுதல்மகாபாவம். எனவேஅவற்றை புனரமைத்து, நித்திய-நைமித்திய பூசைகளை கிரமாக செய்வதற்கு வழிவகுத்தமையால் ஆலயங்கள் மீண்டும் பொலிவுற்று விளங்கலாயின.

### நாவலரின் அறப்பணிகள்

நாவலர் செய்த அறப்பணிகளுள் காத்திரமானதாக அமைவது, பல சமய நூல்களை எழுதி வெளியிட்டமையைக் குறிப் பிடலாம். குறிப்பாக சைவ வினாவிடை, சைவசமய நெறி, பாலபாடம், பெரியபுராண வசனம், கந்த புராண வசனம், திருவிளையாடல் புராண வசனம், இலக்கண வினாவிடை, இலக்கணச் சுருக்கம், இலங்கை பூமி சாஸ்திரம், சிதம்பர மான்மியம், கொலைமறுத்தல், கோயிற் புராணம் உரை, ஏரெழுபது, சூடாமணி, நிகண்டு உரை, யாழ்ப்பாணச் சமய நிலை,திருத்தொண்டர் புராணம்,சிவராத்திரி புராணம்,திருமுருகாற்றுப்படை, தொல்காப்பியம் சூத்திர விருத்தி, நன்னூல் விருத்தியுரை, நீதிநூற்திரட்டு, திருவாசகம், விநாயக கவசம், போலியருட்பாமறுப்பு, பிரபந்தத் திரட்டு,சிவாலய தரிசனவிதி, திருக்குறள் பரிமேலழகர் உரை, தாயுமான சுவாமிகள் திருப்பாடற்திரட்டு, தனிப் பாமாலை என்பவை குறிப்பிட்டுக் கூறக் கூடியவையாகும். மொத்தமாக, அவர் இயற்றிய நூல்கள் -23, உரைசெய்தவை -08, பரிசோதித்து பதிப்பித்தவை -39, யாத்த பாடல்கள் -14 என்றவாறாக அமை கின்றன.மேலும் தான் செல்லுமிடமெங்கும் சைவசமயப் பரப்புரைகளை முடுக்கிவிட்டு, சைவநாயன்மார்களது திருமுறைகளையும் மக்களிடத்தே விளங்கச் செய்த பெருமையும் நாவலரையே சாரும். குறிப்பாக திருவாவடுதுறையினின்று ஓதுவார்களை அழைத்து வந்து இங்குள்ளவர்களுடன் சேர்ந்து திருவிழாக் காலங்களில் ஆலயங்களில் திருமுறைகளை ஓதுவித்தார்.
தனது உடல், பொருள், ஆவி அத்தனையையும் மக்களுக்காக அர்ப்பணம் செய்து வாழ்ந்து சைவசமய வளர்ச்சிக்கும், மறுமலர்ச்சிக்கும் தமிழ்மொழியின் உயர்ச்சிக்கும் வித்திட்ட பெருமகனாகிய நாவலர் 1879ஆம் ஆண்டு கார்த்திகை 21 மக நட்சத்திரத்தில் இறைபதமெய்தினார். இவரது அறப்பணியை நினைவு கூர்ந்து இலங்கை அரசு 1971 ஒக்ரோபர் 29இல் அஞ்சல் தலை ஒன்றையும் வெளியிட்டுக் கௌரவித் தமையின் பின்னர் இது போன்றதான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் நடைபெற்றதாக இதுவரை பதியப்படவில்லை. எனவே இவரது நற்பணிகளைச் சிறப்பித்துக் கௌரவம் செய்வதற்கான முன்முயற்சிகளை சமய நிறுவனங்கள் எடுக்கவேண்டியது அவசியமாகும்.

# ஆங்கில புத்தாண்டுப் பலன்



# 2017

## சிம்மம்

உங்களுடைய ராசிக்கு 6 ஆம் வீட்டில் சந்திரன் நிற்கும் போது இந்த 2017ஆம் ஆண்டு பிறப்பதால் உங்களின் நீண்ட கால ஆசைகளெல்லாம் நிறைவேறும். கடினமான இலக்கையும் எளிதாக எட்டிப் பிடிப்பீர்கள். எதிரிகளை வீழ்த்தும் வல்லமை உண்டாகும். அதிகாரிகளின் நட்பு கிடைக்கும். சின்ன சின்ன சந்தர்ப்பங்களையும், வாய்ப்புகளையும் நழுவ விடாமல் சரியாக பயன்படுத்தி முன்னேறுவீர்கள். உங்களுடைய ராசியை சுக்ரன் பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் உங்கள் செயலில் வேகம் கூடும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். தந்தையாருக்கு இருந்த நோய் வெகுவாக குறையும். மகளின் திருமணத்தை வெகுவிமரிசையாக நடத்தி முடிப்பீர்கள். இந்த ஆண்டில் பணபலம் கூடும். அடிக்கடி பழுதான வாகனத்தை மாற்றி புதிய வாகனம் வாங்குவீர்கள்.

ஜுலை 26 ஆம் திகதி வரை ராசிக்கு 7இல் கேதுவும், உங்கள் ராசிக்குள்ளேயே ராகுவும் நிற்பதால் மூச்சுத் திணறல், அல்சர், குருதிச்சோகை வந்து செல்லும். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து விலகும். மனைவி உணர்ச்சிவசப்பட்டு பேசினால் அதைப் பெரிது படுத்திக் கொண்டு பதிலுக்கு பதில், ஏட்டிக்கு போட்டியாக ஏதாவது சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போங்கள். முன்கோபத்தை குறையுங்கள். மனைவிக்கு மாதவிடாய்க் கோளாறு, கர்ப்பப் பையில் நீர் கட்டி, நரம்புச் சுளுக்கு வந்து நீங்கும். யாருமே உங்களை சரியாகப் புரிந்து கொள்ளவில்லையே என ஆதங்கப்படுவீர்கள். பழைய இழப்புகள், ஏமாற்றங்களை நினைத்து வருத்தப்படுவீர்கள்.

ஜுலை 27ஆம் திகதி முதல் வருடம் முடியும் வரை உங் கள் ராசியை விட்டு ராகு விலகி 12 ஆம் வீட்டிலும், கேது 6ஆம் வீட்டிலும் தொடர்வதால் மனப் போராட்டங்கள் ஓயும். தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருந்த கத்தியாக நெருக்கடிகள் இருந்ததே, அவற்றிலிருந்து விடுபடுவீர்கள். பிரிந்திருந்த கணவன்-மனைவி ஒன்று சேருவீர்கள். நோய்களெல்லாம் விலகும். தோற்றப் பொலிவு கூடும். ஜனவரி 17ஆம் திகதி முதல் பெப்ரவரி 26ஆம் திகதி வரை உங்களின் யோகாதிபதியான செவ்வாய் பகவான் 8இல் மறைந்து காணப்படுவதாலும் மற்றும் ஏப்ரல் 11ஆம் திகதி முதல் மே 26ஆம் திகதி வரை உள்ள கால கட்டங்களில் செவ்வாயை சனி பார்க்கயிருப்பதாலும் சகோதர வகையில் சச்சரவு, குருதி அழுத்தம், மனஉளைச்சல், வீண் அலைச்சல், காரியத் தடங்கல் ஏற்படும். புத்தாண்டின் தொடக்கம் முதல் செப்ரெம்பர் முதலாம் திகதி வரை உங்களின் பூர்வ புண்யாதிபதியும்-அஷ்டமாதிபதியுமான குரு உங்கள் ராசிக்கு தனஸ்தானத்தில் அமர்ந்திருப்பதால் எதிர்பார்த்த தொகை கைக்கு வரும். திருமணம், சீமந்தம், கிரகப் பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். குடும்பத்தாரின் உணர்வுகளை புரிந்து கொண்டு, அதற்கேற்ப வளைந்து கொடுப்பீர்கள். ஆடை, ஆபரணம் சேரும். வழக்குகள் சாதகமாக முடியும்.

ஆனால் செப்ரெம்பர் 02ஆம் திகதி முதல் வருடம் முடியும் வரை குரு 3ஆம் வீட்டிலேயே அமர்வதால் எந்த ஒரு காரியங்களை முதல் கட்டத்திலேயே முடிக்க முடியாமல் மூன்றாவது முயற் சியில் போராடி முடிக்க வேண்டி வரும். இளைய சகோதர வகையில் மனத் தாங்கல் வரும். முன்பின் தெரியாதவர்களிடம் உங்களுடைய குடும்ப விடயங்களைப் பகிர்ந்து கொள்ளவேண்டாம். பிள்ளைகளின் உயர்கல்வி, உத்தியோகம், திருமணம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் சற்று தாமதமாகி முடியும். அவர்களிடம் உங்களுடைய பழங் கதைகளையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். டிசெம்பர் 14ஆம் திகதி வரை சனி 4இல் நின்று அர்த்தாஷ்டமத்துச் சனியாக வருவதால் மூட்டு வலி, முதுகு வலியால் தாயார் சிரமப்படுவார். தாயாரின் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள். அன்பு, பாசம் மிகுதியால் தாயார் ஏதேனும் உரிமையுடன் பேசினால் அதற்கெல்லாம் வருத்தப்பட்டுக் கொண்டிருக்காதீர்கள். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் இருக்கும்.

டிசெம்பர் 15ஆம் திகதி முதல் சனி 5ஆம் இடத்தில் நுழைவதால் குடும்ப வருமானத்தை உயர்த்துவதற்காக கூடுதலாக உழைக்க வேண்டிவரும். வேலைச்சுமையால் சோர்வடைவீர்கள். மகளின் திருமணத்திற்காக வெளியில் கடன் வாங்கவேண்டிவரும். மகனின் உயர்கல்விக்காக சிலரின் பரிந்துரையை நாடவேண்டி வரும். பூர்வீக சொத்தில் புதிய முதலீடுகள் வேண்டாம். பாகப்பிரிவினை வியத்தில் உணர்ச்சிவசப்படாதீர்கள்.

பிள்ளைகளிடம் அதிக கண்டிப்புக் காட்ட வேண்டாம். அன்பால் அரவணைத்துப் போங்கள். வியாபாரத்தில் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவீர்கள். சந்தை நிலவரத்தை அறிந்து அதற்கேற்ப முதலீடு செய்து வாடிக்கையாளர்களை கவர்வீர்கள். அர்த்தாஷ்டமச் சனி தொடர்வதால் வேலையாள்கள் முரண்டு பிடிப்பார்கள். அவர்களிடம் வேலை வாங்குவதற்குள் அவர்களை எதிர்பார்க்காமல் நாமே அந்த வேலையை செய்துவிடலாம் என்று முடிவெடுப்பீர்கள். உத்தியோகத்தில் வேலையில் ஆர்வம் அதிகரிக் கும். என்றாலும் எவ்வளவு உழைத்தாலும் உங்களைப் பற்றி குறை கூறத்தான் செய்வார்கள். கவலைப்படாதீர்கள், கடமையை செய்யுங்கள். பழைய பிரச்சினைகளை தூர்வாரிக் கொண்டிருக்காமல் தேங்கிக் கிடக்கும் பணிகளை முடிக்கப்பாருங்கள். மேலதிகாரிகள் வற் புறுத்தினாலும், நீங்கள் நேர் பாதையில் செல்வது நல்லது. சக ஊழியர்களில் ஒருசிலர் அவர்களின் வீழ்ச்சிக்கு நீங்கள் காரணம் என்று தவறாகப் புரிந்து கொள்வார்கள். வேலைச் சுமை அதிகரிக்கும்.

கன்னிப் பெண்கள் போலியாக பழகியவர்களிடமிருந்து ஒதுங்குவீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். மனசை அலைபாயவிடாமல் ஒரு நிலைபடுத்துங்கள். காதல் விவகாரத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். தோலில் நமைச்சல், அடிவயிற்றில் வலி வந்து போகும். கல்யாணம் இந்த வருடத்தின் இறுதியில் முடிவடையும். மாணவர்கள், உங்களுடைய தனித்திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். தேர்வின்போது படித்துக் கொள்ளலாம் என்று மனக்கோட்டை கட்டாதீர்கள். ஆய்வகப் பரிசோதனையின் போது கண்ணிலோ, கையிலோ அசிட் படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். தெரியாதவற்றை ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். மதிப்பெண் கூடும். எதிர்பார்த்த கல்வி நிறுவனத்தில் உயர்கல்வி தொடர இடம் கிடைக்கும். பெற்றோரின் ஆதரவு உண்டு.

இந்தப் புத்தாண்டு போராட்டங்கள் நிறைந்ததாக இருந்தாலும் இறுதியில் உங்களின் கனவுகளை நனவாக்குவதாக அமையும்.

## நாளை

**மார்கழி-21**

வியாழக்கிழமை -05.01.2017

தீதி: ஸப்தமி மு.ப.11.17

நட்சத்திரம்: உத்தரட்டாதி பி.ப.02.21

ராகுகாலம்:02.01-03.31 வரை

சுபநேரம்:08.01-09.31 வரை











## பஜனைப் பாமாலை புத்தகம் மற்றும் இறுவட்டு வெளியீடு

கொக்கட்டிச்சோலை நாகசக்தி கலை மன்றத்தின் ஏற்பாட்டில் அபிமன்னன் சண்டை, கூத்து, கரகம், கும்பி, வசந்தன் இறுவட்டு வெளியீடும், பஜனைப் பாமாலை புத்தக வெளியீடும் அண்மையில் முனைக்காடு நாகசக்தி கலை அரங்கில் இடம் பெற்றது. கூத்து இறுவட்டின் முதற்பிரதியை முனைக்காடு ஸ்ரீ நாகலிங்கேஸ் வரர் ஆலய பிரதமகுரு ப.மானாகப்போடியிடமிருந்து மூத்த கூத்துக் கலைஞர் வே.மாசிலாமணி பெற்றுக்கொண்டார். அதுபோன்று பஜனைப் பாமாலைப் புத்தகத்தின் முதற்பிரதியை இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் ஞா.பேரின்பம் பெற்றுக்கொண்டார். நிகழ்வின் தொகுப்புரையை மு.நமசிவாயமும், கூத்து அறிமுக உரையை இ.குகநாதனும், புத்தகத்துக் கான நயவுரையை செ.முருகுப்பிள்ளையும் நிகழ்த்தியிருந்தனர். மன்றத்தின் தலைவர் ந.சுவாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட கலாசார இணைப்பாளர் த.மலர்ச்செல்வன், பிரதேச கலாசார உத்தியோகத்தர் எஸ்.ருபேசன் மற்றும் அரச அதிகாரிகள், கலைஞர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# தமிழ்நேசன் அடிகளாருக்கு சிறப்பு விருது

இஸ்லாமிய ஆய்வகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் தமிழ் நேசன் அடிகளாருக்கு சிறப்பு விருது வழங்கப்பட்டது.

கடந்த 11,12,13 ஆகிய மூன்று தினங்களாக கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள இலங்கை மன்ற மாநாட்டு மண்டபத்தில் உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டுக்கு இலங்கையின் பல்வேறு பாகங்களில் இருந்தும் மற்றும் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளில் இருந்தும் தமிழ் அறிஞர்கள், ஆய்வாளர்கள், இலக்கியவாதிகள் எனப் பலரும் வருகைதந்தனர்.

மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வின்போது மன்னார் தமிழ்ச் சங்கத் தாபகரும், மன்னார் மறைமாவட்ட கலையருவி அமைப்பின் இயக்குநரும், மன்னா என்ற மாதாந்தக் கத்தோலிக்க பத்திரிகையின் ஆசிரியருமான அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் நீண்ட நெடிய - இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான - தமிழ் இலக்கிய வரலாற்றுப் பாரம்பரியத்தில் தமிழ் மொழிக்கும் சமயங்களுக்கும் இடையிலான உறவு, தொடர்பு பற்றியும் இலக்கியத்தின் ஊடாக எவ்வாறு நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பலாம் என்பது குறித்தும் சிறப்புரையாற்றினார். இவருடைய தமிழ் இலக்கியப் பணிகளைப் பாராட்டி, அவருக்கு பொன்னாடை போர்த்தி சிறப்பு விருதும் வழங்கப்பட்டது. நிறைவுநாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட கைத்தொழில் வர்த்தகத்துறை அமைச்சர் ரிசாத் பதியுதீன் விருதை வழங்கிவைத்தார். நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர்களாக பிரதி அமைச்சர் அமீர் அலி மற்றும் முன்னாள் அமைச்சர்கள், பிரமுகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

நிறைவு நிகழ்வில் பல்துறை சார்ந்த பல இஸ்லாமிய கலை இலக்கியவாதிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டாலும் இஸ்லாம் அல்லாத மூன்று முக்கிய ஆளுமைகளுக்கே சிறப்பு விருது வழங்கப்பட்டது. பல்வேறு தளங்களில் தமிழ்ப் பணியாற்றும் அருட்திரு தமிழ்நேசன் அடிகளார், மூத்த எழுத்தாளரும் மல்லிகை ஆசிரியருமான டொமினிக் ஜீவா, மூத்த எழுத்தாளரும் ஞானம் சஞ்சிகையின் ஆசிரியருமான தி. ஞானசேகரன் ஆகியோருக்கே சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன. நிகழ்வின் இரண்டாம் நாள் நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.












# யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மூதறிஞர் அமரர் சிற்பியின் நினைவு நிகழ்வு

மூதறிஞர் சிற்பி அமரத்துவம் அடைந்ததன் ஓராண்டு நினைவாக, நினைவுகளைக் கையளித்தல் என்ற பெயரில் கடந்த 24ஆம் திகதி யாழ். இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மூதறிஞர் சிற்பியின் துணைவி சரஸ்வதி சிவசரவணபவன் சுடரேற்றி வழிபாடாற்றினார். சிற்பியின் புதல்வர் வங்கியாளர் சி.சுந்தரேசன் வரவேற்புரையாற்றினார். நிகழ்வில் இரண்டு நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன. சிற்பி குறித்துப் பல்வேறு அறிஞர்களது பார்வையாக அமைந்த நுணுக்கரிய நுண்ணுணர்வே என்ற நூலின் அறிமுகவுரையை கலாபூசணம் ப.சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்) ஆற்றினார். சிற்பி எழுதிய கலைச்செல்விக் காலம் என்ற நூலின் வெளியீட்டு ரையை ஞானம் மாத இதழின் ஆசிரியர் டாக்டர் தி.ஞானசேகரன் ஆற்றினார். இந்நூலின் நயப்புரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை வருகையை விரிவுரையாளர் தி.செல்வமனோகரன் ஆற்றினார்.

நிகழ்வில் சிற்பி ஐயா ஞாபகார்த்த நினைவுப் பேருரையும் இடம்பெற்றது. ஈழத்தமிழ்ச் சமூகத்தின் கூட்டு நினைவுக்கான வெளிகளைச் சாத்தியப்படுத்தல் - சில அவதானிப்புக்களும் முன்மொழிவுகளும் என்ற பொருளில் பேருரை இடம்பெற்றது. இதனை யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி குமாரவடிவேல் குருபரன் சிறப்புரையை ஆற்றினார்.

1958ஆம் ஆண்டு தொடக்கம் 1966ஆம் ஆண்டுவரை சிற்பியால் வெளியிடப்பட்ட கலைச்செல்வி இதழ்களில் 69 இதழ்களை உள்ளடக்கியதும் சிற்பி பற்றிய ஆவணப்பதிவாக அமைந்துள்ளதுமாகிய சிற்பிஜயா இணையதளம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இளைப்பாறிய நூலகர் சௌந்தரராஜன் இதனை ஆரம்பித்து வைத்தார். அதனை அடுத்து 32 ஆயிரம் ஈழத்து நூல்கள் மற்றும் பிரசுரங்களைத் தன்னகத்தே கொண்ட நூலகம்-இணையதளம் பற்றிய அறிமுகவுரை இடம்பெற்றது. வித்தியாசாகர் சுந்தரேசன் நன்றியுரை நல்கினார்.

நிகழ்வில் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, கவிஞர் சோ.ப., கலாநிதி குழந்தை சண்முகலிங்கம், எழுத்தாளர்களான ஐ.சாந்தன், அ.யேசுராசா, பொ.சண்முகநாதன், கவிஞர் துரையர், மூத்த பத்திரிகையாளர் ம.வ.கானமயில்நாதன் ஆகியோருக்குச் சிற்பியின் புதல்வர்கள் சிறப்புப் பிரதிகளை வழங்கி, அவர்களிடமிருந்து ஆசியும் பெற்றனர்.

சிற்பியால் வெளியிடப்பட்ட கலைச்செல்வி சஞ்சிகையின் ஊடாக இலங்கையின் பிரபல எழுத்தாளர்களான செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், ம.வ.கானமயில்நாதன், செ.யோகநாதன், அன்னலட்சுமி இராசதுரை உள்ளிட்ட பல எழுத்தாளர்கள் வளர்த்தெடுக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. எட்டு ஆண்டுகளில் வெளிவந்த கலைச்செல்வி இதழ்களின் மூலப்பிரதிகள் நிகழ்வில் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன.

# வ(ளி)ழி தேடும் புல்லாங்குழல் கவிதை நூல் வெளியீடு

கிளிநொச்சியின் இளம் படைப்பாளியான செ. கஜானனின் வ(ளி)ழி தேடும் புல்லாங்குழல் கவிதை நூல் வெளியீடு அண்மையில் பளை பிரதேசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

தமிழருவி த. சிவகுமாரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் கலந்து கொள்வதாக இருந்தபோதும் தவிர்க்க முடியாத காரணத்தால் கலந்துகொள்ளவில்லை. அவரது வாழ்த்துச்செய்தியை வடமர்காண சபை உறுப்பினர் ப.அரியரத்தினம் நிகழ்த்தினார். கலை நிகழ்வுகளைத் தொடர்ந்து, கவிதை நுலின் முதல் பிரதியை நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் வெளியிட்டு வைத்தார். இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வடமாகாண சபை உறுப்பினர் ப. அரியரத்தினம், பளை பிரதேச செயலாளர பி. ஜெயராணி, கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத்திணைக்கள பணிப்பாளர், கிளிநொச்சி உதவிக்கல்வி பணிப்பாளர் திருமதி பி. மதுரநாயகம், கிறுஸ்தவ இந்து மதகுருமார்கள், கலைத்துறை சார் உத்தியோகத்தர்கள், மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (6-34)







# கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் தமிழிசைப் போட்டி

கொழும்புத் தமிழ்ச்சங்கம் ஆண்டுதோறும் நடத்தும் தமிழிசை விழா இவ்வருடம் 2017 ஜனவரி மாதம் நடைபெறவுள்ளது. இசை கற்கும் மாண வர்களை ஊக்குவிக்கு முகமாக நாடு முழுவதும் இசைப் போட்டி யொன்றை இவ்வருடமும் நடத்தவுள்ளோம்.

**தமிழிசைப் பாடல் போட்டி - 2017**

**போட்டி தொடர்பான விவரங்கள்**

01) போட்டிக்கான பாடல் தெரிவுகள்

அ. தமிழிசைப் பாடல்கள் மட்டும் உதாரணமாக, (அருணாசலக்கவிராயர், முத்துத்தாண்டவர், மாரிமுத்தாபிள்ளை, சுப்பிரமணியபாரதியார், தண்ட பாணிதேசிகர், கோபாலகிருஷ்ணபாரதியார், நீலகண்டசிவன், சுத்தானந்த பாரதி யார், பெரியசாமித்தூரன், வள்ளலார், வீரமணிஜயர் முதலியோர் இயற்றியவை.

**பிரிவு I - தரம் 4, 5**

i. தேவாரம் / துதிப்பாடல் ஒன்று (பண்ணுடன் பாடுதல்)
ii. சிறுவர் பாடல் - ஒன்று
நேரம் 4 - 5 நிமிடங்கள் பாடுதல் வேண்டும்.

**பிரிவு II - தரம் 6, 7, 8,**

i. இலகுவான கீர்த்தனை - ஒன்று (சிட்டைஸ்வரம் தவிர்க்கப்படல் வேண்டும்)
ii. திருப்புகழ் - ஒன்று
நேரம் 4 - 6 நிமிடங்கள் பாடுதல் வேண்டும்.

**பிரிவு III - தரம் 9, 10, 11,**

i. கீர்த்தனை - ஒன்று (சிட்டைஸ்வரத்துடன் பாடலாம்)
ii. பதம் - ஒன்று,
iii. நாட்டார் பாடல் - ஒன்று நேரம் 8 - 10 நிமிடங்கள் பாடுதல் வேண்டும்.

**பிரிவு - IV - தரம் 12, 13**

i. தமிழ் வர்ணம் - ஒன்று (ஆதி தாளத்தில் அமைந்தது. இரண்டு காலங்களில் பாட வேண்டும்)
ii. கீர்த்தனை - ஒன்று (கற்பனா ஸ்வரத்துடன் பாடலாம்),
iii. திருப்புகழ் - ஒன்று நேரம் 12 - 15 நிமிடங்கள்

02) **போட்டி விதிகள் :**

அ. விண்ணப்பத்தில் தமிழிசைப் போட்டி 2017 எனத் தலைப்பிட வேண்டும். முழுப்பெயர், முகவரி, பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயர், தொடர்பு களுக்கான தொலைபேசி இலக்கம், கல்வி கற்கும் பாடசாலையின் பெயர், 2017 இல் கற்கும் வகுப்பு, விண்ணப்பிக்கும் பிரிவு

முதலான விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை கையொப்பமிட்டு 13.01.2017 வெள்ளிக்கிழமைக்கு முன்பு அனுப்பி வைக்க வேண்டும். தங்கள் விண்ணப்பம் கிடைக்கப் பெற்றமை தொடர்பாக சங்கத் தொலை பேசி ஊடாகவோ அல்லது மின்னஞ்சல் முகவரி ஊடாகவோ உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

தொலைபேசி இல - 011 2363759
தொலைநகல் இல - 011 2361381
மின்னஞ்சல் முகவரி -
tamilsangamcolomboyahoo.com
tamilsangamcolombooutlook.com

இறுதிப் போட்டிகள் 2017 ஆம் ஆண்டு தை மாதம் மூன்றாம் வாரமளவில் நடைபெறும்.

போட்டித் திகதி பற்றிய அறிவித்தல் தங்களால் குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்கப்படும்.

**04) ஏனையவை :**

அ. போட்டிக்கு சமுகமளிக்கும் போது அதிபரால் வகுப்பு உறுதிப்படுத்திய கடிதம் எடுத்துவரப்படல் வேண்டும்.
ஆ. போட்டியாளர் தனது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணமொன் றைக் காட்டவேண்டும்.
இ. போட்டியாளர் கலாசார உடையுடன் பங்குபற்றல் வேண்டும்.
ஈ. பயணச்செலவு சங்கத்தால் வழங்கப்படமாட்டாது.
உ. சுருதிக்கான கருவியை போட்டியாளரே கொண்டுவர வேண்டும்.
ஊ. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
எ. வெற்றியாளர்களுக்கு தமிழிசைவிழா நடைபெறும் தினங்களில் பெறுமதி வாய்ந்த பரிசில்கள், சான்றிதழ், பாடும் வாய்ப்பு என்பன வழங்கப்படும்.
ஏ. போட்டி நடைபெறும் இடங்கள் விண்ணப்பங்களது எண்ணிக்கையைப் பொறுத்துத் தீர்மானிக்கப்படும்.





# வீதி நாடகப் பயிற்சிப் பட்டறை

விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் வீதி நாடகங் கள் முன்னிலையில்.-இவ்வாறு நல்லூர் பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை தெரிவித் தார். நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கலைஞர்களுக்கான வீதிநாடகப் பயிற்சிப் பட்டறையை ஆரம்பித்து வைத்து உரையாற் றிய அவர், மேலும் தெரிவித்ததாவது:

போதைப் பொருள் பாவனையில் இன்று எம் தேசம்பெரும் சவால்களை எதிர்நோக்கவேண்டி யுள்ளது.

இன்றைய இளம் சந்ததியினரை நாளைய தலைவர்களாக உருவாக்கி இவ்வுலகிற்கு ஒப்படைக்க வேண்டிய இன்றியமையாத கடப்பாடு எல்லோருக்குமே உண்டு. மாண வர்களை நல்வழிப்படுத்த சிறந்த பெறு பேறுகளைப் பெற்று நற்பிரசைகளாகத் திகழ கல்வியைக்கருத்துடன் கற்று வந்தால் பல நன்மைகள் கிடைக்கும்.

போதையற்ற ஒரு தேசத்தைக் கட்டியெழுப்ப வும்- இலவசக் கல்வியை முழுமையாகப் பெற் றுக்கொள்ளவும்- கிராமம் கிராமமாகச் சென்று மக்களிடையே விழிப்புணர்வுச் செயற்பாட்டை மேற்கொள்ளவேண்டியது இன்றைய காலத் தின் கட்டாயத் தேவையாகும்.

எனவே நல்லூர்ப் பிரதேசத்துக்கென்று வீதி நாடகக்கலாசாரக் குழுவை உருவாக்கி, அக்குழு வூடாக போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணா வுச் செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டியது அவ சியமான தேவையாகும்- என்றார்.

கலாசார உத்தியோகத்தர் திருமதி கு.ரஜனியின் ஒருங்கிணைப்பில் நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில், நாடக கலாவித்தகர் விரிவுரை யாளர், க.இ.கமலநாதனால் வீதி நாடகப் பயிற் சிப்பட்டறை நடத்தப்பட்டு, கலைஞர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

# கவிதை நூல் வெளியீடு









கட்டைப்பறிச்சான் சு. சிவசங்கரன் (கொட்டியஆரன்) எழுதிய ‘சிறகலரும் சிறுபூக்கள்’ கவிதை நூல் வெளியீட்டு விழா, கடந்த 31 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு திருகோண மலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமானது. பாடசாலையின் முத்தமிழ் சங்கத்தின் இணை இயக்குநர் வி. குணபாலா தலைமையில் இடம்பெற்றது. இதன் போது உ. பிரதீபாவின் நெறியாள்கையில் சிறுமிகளின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. சஞ்சிகையின் ஆசிரியர் பு. ஜெயாகரன் வரவேற்புரை நிகழ்த்தினார். வி. குணபாலா தலைமை யுரை வழங்கினார். நிகழ்வின் முதன்மை அதிதியான மூத்த கவிஞர் தாமரைத் தீவான் கௌர விக்கப்பட்டார். நூலின் முதல் சிறப்பு பிரதிகளை நூலாசிரியரும், நூலாசிரியரின் துணைவியாரும் இணைந்து தாமரைத்தீவானுக்கும், மலை முரசு பத்திரிகையின் ஆசிரியர் இரா. ஸ்ரீ. ஞானேஸ் வரனுக்கும் வழங்கி, வெளியிட்டு வைத்தனர். (40)






நல்லூர் ஐ. சிவசாந்தன்

# ஆண்டு நிறைவில் நிகழ்ந்த அழகான மிருதங்க அரங்கேற்றம்

இசை என்பது மனதை இசைவிப்பதாக அமைகின்றது. இசையை நல்கும் கருவிக் கையாட்சி மனிதநாகரிகத் தோற்றத்திற்கு முன்பே ஏற்பட்டிருக்க வேண்டும். இறைவனை இசைப்பிரியனாக, சாமகானப் பிரியனாக, ஓங்கார ரூபனாக, நாதரூபனாக இந்து சமயம் காண்கின்றது. சிவனுடைய கையில் உடுக்கை, சரஸ்வதியின் கையில் வீணை, நாரதர் கையில் வீணை, நந்தியின் கையில் மிருதங்கம் என இசைக் கருவிகள் தெய்வாம்ச நிலையில் நோக்கப்படுகின்றன. மிருதங்கத்தைச் சிறப்பிக்கும் வகையில் நந்தி வாத்தியம் என்ற சிறப்புப் பெயர் வழங்கப்படுவதும் உண்டு.

இறைவனின் தாண்டவத்தில் இருந்து ஜதிகள் தோன்றின என்பது நம்பிக்கை. இதைவிட தற்புருசம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம், ஈசானம் என அமையும் ஐம்முகங்களில் இருந்தும் முறையே தா, தி. தொம், நம், என்ற அடிப்படை ஜதிகள் தோன்றின எனவும் நம்பப்படுகின்றது.

**தெய்வாம்சம் மிக்க கலை**

தெய்வாம்சம் மிக்க மிருதங்கக் கலையைப் பயில்பவர்களும் ஒருவகையில் பாக்கியசாலிகளே. அப்படிப் பயில்பவர்களுள் அரங்கேற்றம் காண்பவர்கள் சிலரே. அவர்களுள்ளும் பிரயோக வாழ்வியலில் ஒளிவீசுபவர்கள் இன்னும் சிலரே.

இத்துறை சார்ந்த நம்பிக்கை தரக்கூடிய இளங்கலைஞன் ஒருவனை யாழ். மண் கடந்த 30.12.2016 அன்று பெற்றெடுத்தது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தரம் 10 கற்கையை நிறைவு செய்த மைந்தனும், யாழ். ஏழிசை மிருதங்க நர்த்தனாலயத்தின் மாண வனும் ஆகிய ருக்மணிகாந்தன் சாரங்கன் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் பலர் முன் னிலையில் அரங்கப் பிரவேசம் செய்தார்.

ரு.சாரங்கன் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தந்தை ருக்மணி காந்தன் நீரியல் பொறியியலாளர். ஓர்கன், கிற்றார், கொங்கொட், டிறம்ஸ் என மேற்கத்தைய வாத்தியங்களைப் பயின்று இசையில் மிகுந்த ஆர்வம் உடையவர். சாரங்கனின் பூட்டன் அமரர் சி.ஞானப் பிரகாசம் அப்பாலை அண்ணாவியார். பேரன் புல்லாங்குழல் வித்துவான் ஜி.எஸ்.வசந்தகுலசிங்கம். இலங்கையின் தேசியகீதம் உத்தியோகபூர்வமாக இசையமைக்கப்பட்டபோது, புல்லாங்குழல் வாசித்தவர் எனக் குறிப்பிடுகின்றனர். இத்தகைய இசைப்பின்புலம் உடைய சாரங்கனை பிரபல மிருதங்க வித்துவான் நல்லை க. கண்ணதாசன் ஐந்தாண்டுகாலப் பயிற்சியளித்து அரங்கிற்கு அழைத்து வந்தார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதிமுதல்வர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் தலைமையில் அரங்கேற்ற நிகழ்வு இடம்பெற்றது. பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் ஐ.தயாணந்தராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக கலாபூசணம் இசைத் தென்றல் ம.யேசுதாசனும், தண்ணுமை வேந்தன் மா.சிதம்பரநாதனும், மூத்த சுங்கப் பணிப்பாளரும் சட்டத்தரணியுமாகிய எம்.ஆர். ராஜ் மோகனும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் இடம்பெற்ற அரங்கிசையில் பாட்டு - இசைமாணி தவநாதன் றொபேட், வயலின் - அம்பலவாணர் ஜெயராமன், கெஞ்சிரா கலைமாணி நா.சிவசுந்தரசர்மா, முகர்சிங் - கலாவித்தகர் என். சதீஸ்குமார், கடம் - இளஞ்சுடர் ஞானவேல் வசந், தம்புரா நுண்கலைமாணி க.ரஜீவன் ஆகியோர் பங்கேற்றனர்.

**அரங்கப் பூசை**

நிகழ்வில் அரங்க பூசையை சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தைச் சேர்ந்த வண. சச்சிதானந்த சர்வேஸ்வரக் குருக்கள் ஆற்றினார். சாரங்கனின் சகோதரியும் மருத்துவத்துறை மாணவியுமாகிய ருக்மணி காந்தன் சஹானா இறைவணக்கம் நிகழ்த்தினார். ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி. இராதாகிருஷ் ணன் குடும்பத்தினர் சார்பில் வரவேற்புரை ஆற்றினார். யாழ். பல்கலைக்கழக இசைத் துறையின் முதுநிலை விரிவுரையாளர் சுகன்யா அரவிந்தன் மதிப்பீட்டுரையை மேற் கொண்டார். தந்தை வ.ருக்மணிகாந்தன் நன்றியுரை ஆற்றினார்.



நல்லை கண்ணதாசனின் ஏழிசை மிருதங்க நர்த்தனாலயம் பரத மற்றும் மிருதங்க இசைக்கலைஞர்களைப் பயிற்று வித்துச் செவ்வனே அரங்கேற்றி வருகின் றது என்பதற்கு நடைபெற்றுமுடிந்த அரங் கேற்றமும் சாட்சியாக அமைந்தது. மிரு தங்கத்துறையில் இந்நிறுவனம் சார்பில் 13 ஆவது மாணவன் அரங்கேறுவதாக அறிவிக்கப்பட்டது.

**கச்சேரி ஆரம்பம்**

தாளவர்ணத்துடன் கச்சேரி ஆரம்பமாகியது. தவநாதன் றொபேட்டின் மந்திரக் குரல் சபையைக் கட்டிப் போட்டது. வயலின் வித்துவான் அ.ஜெயராமன் களைப்படையாமல் குரலிசைக்கு ஈடு கொடுத்து நரம்பிசையை வழங்கினார். தேர்ச்சிபெற்ற தாள வாத்தியக் கலைஞர்களுக்குத் தானும் சளைத்தவர் அல்லன் என்பதை சாரங்கன் மெய்ப்பித்தார். அவரது வாசிப்புக்கு அவர் முன்னால் அமர்ந்து தாளம் இசைத்தவாறு குரு நல்லை கண்ணதாசன் வழிகாட்டினார். அவரது முகபாவம் உடலசைவு இவற்றைக் குறியீடாக ஏற்று மிருதங்கத்தில் அதைலயநாதமாக உருவாக்கினார் சாரங்கன். அரங்கிசையில் எட்டு உருப்படிகள் இடம் பெற்றன. நான்காவதாக இடம்பெற்ற இராகம், தாளம், பல்லவி ஒரு மணி நேரமாக இடம்பெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. றொபேட்டின் கற்பனா சுரத்திற்கு சாரங்கனின் மனோதர்ம வாசிப்பு வலுச் சேர்த்தது. ஆங்காங்கே அவர் மேற்கொண்ட உருட்டல்கள் இதம் சேர்த்தன. பாடகர் நடைமாற்றம் செய்து பாடியபோது தானும் களைக்காது ஈடுகொடுத்தார்.

ஈழத்திற்கெனத் தனித்துவமான இசை அடையாளங்களை நாம் ஏற்படுத்த வேண்டும் என நிகழ்வின் தலைவர் குறிப்பிட்டு, இந்த அரங்கேற்றத்தில் பயன்படுத்தப்பட்ட உருப்படிகள் யாவும் ஈழத்தவரால் உருவாக்கப்பட்டவை என்று குறிப்பிட்ட போது சபையோர் ஏகோபித்துப் பாராட்டியமை மண் சார்ந்த உணர்வின் உச்சமாக அமைந்தது. உருப்படிகளில் பெரும்பாலானவற்றை தவமைந்தன் றொபேட் உருவாக்கியிருந்தார். இதன்மூலம் தனது சாகித்திய உருவாக்கத் திறனையும் அவர் மெய்ப்பித்திருந்தார். இதைவிட அருட்கவி வினாசித்தம்பிப் புலவரின் கீர்த்தனை ஒன்றும் நல்லை கண்ண தாசன் இயற்றியபல்லவியும்பயன்படுத்தப்பட்டன. நிகழ்வில் உரைநிகழ்த்திய யாழ். இந்துக் கல்லூரி அதிபர் மெய்சிலிர்த்து நின்றார். தனது கல்லூரிப் பிள்ளை ஒன்றின் உயர்ச்சியில் தனது உயர் நிலைப்பட்ட மகிழ்ச்சியைப் பதிவு செய்தார். மதிப்பீட்டுரை நல்கிய யாழ். பல்கலைக்கழக முதுநிலை இசை விரிவுரையாளர் சுகன்யா அரவிந்தன் இந்த வயதில் இப்படித் திறமையாக வாசிப்பது என்பது அசாத்தியமான விடயம் எனப் பாராட்டினார். சாரங்கனின் வாசிப்பில் தன்னைக் கவர்ந்த இடங் களைக் குறிப்பிட்டுக் காட்டினார்.

**குறித்த நேரத்தில் ஆரம்பம்**

குறித்த நேரத்திற்கு நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு நேரத்துடன் போட்டியிட்டவாறு முன்னெடுத்துச் செல்லப்பட்டமை பாராட்டிற்குரியதாகும். அத்துடன் யாழ். மண்ணின் இசைத்துறை சார்ந்த பலர் நிகழ்வில் கலந்து சாரங்களை வாழ்த்தியமையையும் அவதானிக்க முடிந்தது. மொத்தத்தில் நீண்டநாள்களின் பின்னர் யாழ். மண்ணில் நிறைவான ஓர் இசை அரங்கேற்றத்தைத் தரிசித்தமை மகிழ்ச்சிக்குரியதாகும். அரங்கேற்றம் கண்ட கலைஞர்கள் தொடர்ந்தும் இத்துறை சார்ந்து பிரகாசிக்க வாய்ப்பும் வளங்களும் கைகூட வேண்டுமெனப் பிரார்த்திப்போம்.





# ஈழத்தைச் சேர்ந்த இரு இசை விற்பன்னர்களுக்கு இங்கிலாந்தில் கௌரவம்

மு.க.மாசிலாமணி

கலைகளின் ஊடாக உள்ளங்களை ஐக்கியப்படுத்தல் (Uniting Hearts Through Arts) என்ற தாரக மந்திரத்தை அடிநாதமாகக் கொண்ட பண்பட்டவொரு உலக சமுதாயத்தை உருவாக்கும் நோக்குடன் ஐக்கிய இராச்சியத்தில் இயங்கி வரும் (MilapfestdThe Indian Arts Development Trust ) என்ற அமைப்பு இசை, நடனம் போன்ற இந்திய நுண்கலைகளை (Fine Arts) பன்னாட்டு மட்டத்தில் மிகக் குறிப்பாகப் பல்லினக் கலாசாரங்களை அங்கீகரித்து ஆதரவளித்து ஒத்துழைப்பு வழங்கும் பிரித்தானிய நாட்டில் (Multi Cultural Bretain) வளர்ப்பதற்குப் பிரித்தானிய கலைகளின் சங்கம் (Arts Council England) இந்திய உயர் ஸ்தானிகர் அலுவலகம் (Indian High Commision In UK) ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன் பல செயற்றிட்டங்களை மிகமுனைப்புடன் முன்னெடுத்து வருகின்றது.





அந்த வகையில் நுண்கலைகளில் பெரிதும் அக்கறையுடனும் ஆர்வத்துடனும் ஈடுபட்டு நிறைவான பயிற்சியின் மூலம் அந்தக் கலைகளில் மிக உயர்வான தேர்ச்சி பெற்று இந்தியக் கலைகளின் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பு நல்கும் கலைஞர்களை அடையாளங்கண்டு, அத்தகைய கலைஞர்களைக் கௌரவிப்பதன் ஊடாக அவர்களை மேலும் உயர் தகைமை எய்த ஊக்குவிப்பதுடன் அவர்களைப் போன்று கலைகளில் ஆர்வமும் ஆற்றலும் உடையவர்களைக் கலைகளில் ஈடுபாடு கொள்ளச் செய்யவும், ஆகிய நோக்கங்களுடன் தேசிய விருது வழங்கும் திட்டம் (The National Indian Arts Awards MILAPFEST) னால் 2015இல் ஆரம்பிக்கப்பட்டு வருடந்தோறும் விருது வழங்கும் விழா நடத்தப்பட்டு வருகின்றது. 2016ஆம் ஆண்டுக்கான மேற்படி வைபவம் அண்மையில் இலண்டன் மாநகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள நேரு நிலையத்தில் (Nehru Centre MILAPFEST) இன் தலைவர் பிரசாந் நாயக் (Prashant Nayak) தலைமையில் நடைபெற்றது.

## மதிப்பார்ந்த பங்களிப்பு

இந்த வருட விழாவில் இசைக் கலை வளர்ச்சிக்கு மதிப்பார்ந்த பங்களிப்பு வழங்கிக் கொண்டிருக்கும் ஒருவருக்கும் வழங்கி அமரரான ஒருவருக்குமாக ஈழத்தைச் சேர்ந்த இருபெண் இசை விற்பன்னர்கள் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிட்டுக் கூறக்கூடிய சிறப்பம்சமாகும். கௌரவிக்கப்பட்ட ஒருவர் யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த திருமதி சிவதாரணி சாகாதேவன் என்பவர், சிறு வயதிலிருந்தே வீணையை மிக ஆர்வத்துடன் பயில ஆரம்பித்துச் சென்னை அடையார் சங்கீதப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கலைமாமணிகள் கே.பி.சிவாணந்தம், கே.சுவாமிநாதன் ஆகியோரிடம் வீணை இசையை வரன்முறையாகக் கற்றுச் சங்கீத வித்துவான் பட்டம் பெற்ற இவர் யாழ். கல்வித் திணைக்களத்தில் சங்கீத விரிவுரையாளராகக் கடமையாற்றியவர்.



1982 இலிருந்து ஐக்கிய ராச்சியத்தைத் தன் நிரந்தர வாழ்விடமாகக் கொண்ட சிவதாரணி வீணாலயா என்ற இசை வளர்க்கும் நிறுவனத்தைத் தாபித்துத் தன் அர்ப்பணிப்பும் அயராதுழைப்பும் இணைந்த கற்பித்தலின் மூலம் திறமை மிகுபல இளம் வாரிசுகளை இசைத் துறைக்கு வழங்கி வருகின்றார்.

## தெய்வீக இசை

வீணையிசையைக் கற்பிக்கும் குரு என்ற வகையில் அவர் தெய்வீக இசைக் கருவியான வீணையின் அசலான உயரிய நாதத்தை மதம், மொழி கடந்து வெளிக்கொணர வேண்டுமென் பதில் உள்ளார்ந்த பற்றுக் கொண்டவர். வீணையிசையில் தான் எய்தியுள்ள அதிதிறமை காரணமாகப் புதிய புதிய யுக்திகளைக் கையாண்டு மரபும்புதுமையும் இணைந்த உயர்தர இசை நுட்பங்களைத் தன் பக்குவமான பயிற்றுவிப்பின் மூலம் பாவம், தாளம், லயம் என்பன சிறந்தமைய வெளிப்படுத்துவதில் வல்லவரான இவர், இரசிகர்களைத் தன் வாத்தியத்துடன் ஒன்ற வைப்பதனால் அவரின் இசையை இரசிப்பதற்கென்றே இங்கே இலண்டனிலும் வெளிநாடுகளிலும் இசைப்பிரியர்கள் பலருளர். சிவதாரணி

> கலைஞர்களைக் கௌரவிப்பதன் ஊடாக அவர்களை மேலும் உயர் தகைமை எய்த ஊக்குவிப்பதுடன் அவர்களைப் போன்று கலைகளில் ஆர்வமும்– ஆற்றலும் உடையவர்களைக் கலைகளில் ஈடுபாடு கொள்ளச் செய்யவும், ஆகிய நோக்கங்களுடன் தேசிய விருது வழங்கும் திட்டம் (The National Indian Arts Awards MILAPFEST) னால் 2015இல் ஆரம்பிக்கப்பட்டு, வருடந்தோறும் விருது வழங்கும் விழா நடத்தப்பட்டு வருகின்றது.

தன் மாணவர்கள் பங்கு கொள்ளும் பலசமய கலாசார நிகழ்வுகள் தர்ம அமைப்புக்களும் நிதி சேகரிக்கும் நோக்குடன் ஒழுங்கமைக்கும் கலை நிகழ்வுகள் எனப் பல சந்தர்ப்பங்களில் மாணவர்கள் வீணை இசையில் எயதியுள்ள சிறப்பான தேர்ச்சியையும் அதனூடாக வீணை இசையை கற்பிக்கும் தனது அதிஉயர் திறனையும் வெளிப்படுத்திவரும், ஒரு போதக ஆசிரியருமாவர். இதுவரை 35 மாணவர்களை அரங்கேற்றிய சிவ தாரணியின் மாணவர்கள் பலர் சங்கீதத்தில் தொடர்ந்தும் உயர் பயிற்சி பெற்று வருவதே அவரின் ஆற்றல்மிகு கற்பித்தலுக்குக்கான வெற்றியெனலாம். குருவும்– சிஷ்யர்களும் இணைந்து இந்தியா, மலேசியா, கனடா என உலகின் பல பாகங்களிலும் இசை நிகழ்வுகளை மிகச் சிறப்பாக நடத்தியுள் ளமையும் குறிப்பிடத்தக் கது. வீணாலயத்தின் அதிபராகக் கடமையாற்றும் இவர் இலண்டன் தமிழ்ப் பாடசாலையிலும் கரோ Harrows தமிழ்ப் பாடசாலையிலும் வீணை ஆசிரியாராகக் கற்பித்து வருகின்றார். இவ்வாறு தெய்வீக இசைக்கருவி யினூடாகக் கர்நாடக இசைத்துறைக்குத் திரு மதி சிவதாரணி சகாதேவன் கடந்த பல ஆண்டுகளாக ஆற்றி வரும் உயர்வான பணிகளைக் கவனத்தில் எடுத்து Sivatharini Continues to preserve our beautiful Culture and has been exploring and discovering new Frontiers of music through the Ueena என இந்தியக் கலைகளுக்கு அவர் நல்கிய பங்களிப்பை இரத்தின சுருக்கமாக மதிப்பிட்டுள்ள MILAPFEST அவருக்கு SANGEET ACHARYA RATNA -2016 சங்கீத அச்சாரிய இரட்ண விருது- 2016 வழங்கிக் கௌரவித்துள்ளது.

## சரஸ்வதி பாக்கியராஜாவுக்குக் கௌரவம்

இவ்வாண்டுக்கான மற்றொரு கௌரவிப்பு சென்னை அடையார் சங்கீதக் கல்லூரியின் கர்நாடக இசைப் பட்டதாரியும், யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் முன்னாள் தலைவரும், கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் சங்கீத ஆசிரியரும், சிங்கப்பூரிலும் தொடர்ந்து இலங்கையிலும் இறுதிக் காலத்தில் இங்கிலாந்திலும் தன் அர்ப்பணப்பான இசைப்பணி மூலம் கர்நாடக இசைக்கலைக்குப் பெரும் பங்களிப்பு வழங்கியவரும் பலநூறு மாணவர்களை இசை வாரிசுகளாக உருவாக்கிய பிரபல குருவாகச் சிறப்புப் பெற்றவரும் ஏழிசை மாமணி ஈழத்து MS என அவரின் இனிய இசை காரணமாக விதந்து போற்றப்பட்ட வரும் லண்டன் தமிழ் நிலைய ஆளுநராகவும் நுண்கலைத் துறைப் பரீட்சகராகவும் சேவையாற்றிய அமரர் சரஸ்வதி பாக்கியராசாவின் பெருமை மிகு இசைத்துறைப்பணி களைக் கவனத்திற்கெடுத்து Smt Packiarasa Was an innate Born Guru என இந்தியக் கலைகளின் வளர்ச்சிக்கு அவர் வழங்கிய சேவைகளைப் புகழ்ந்து மதிப்பிட்டுள்ள MILAPFEST அவரது ஞாபகார்த்தமாக அவர் பெயரில் கர்நாடக இசையை வாய்ப்பாட்டு உயர் பிரிவில் கற்கும் இங்கிலாந்தைச் சேர்ந்த மிகத்திறமையான மாண வர் ஒருவருக்கு ஆண்டு தோறும் புலமைப்பரிசில் SMT SARASWATHY PACKIARAJAH SCHOLARSHIP வழங்கப்படவுள்ளதாக அறிவித்து அமரரான இசை விற்பன்னரை இங்கிலாந்தில் இயங்கும் இந்தியக் கலை களின் அமைப்புக் கௌரவித்துள்ளது.



# பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் இடம்பெற்றன இரண்டு விழாக்கள்

தென்னவன்

சிறார்களால் கலகலப்பாக ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வு இறுதியில் கண்ணீருடன் முடிவடைந்த நிகழ்வாக மாறியது. சாவகச்சேரி நகர் புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் வழியனுப்பு விழாவும் கலைவிழாவும் மேற்கண்டவாறு அமைந்திருந்தன.

சாவகச்சேரி நகர் புவேந்தன் பாலர் பகல் பராமரிப்ப நிலையத்தின் 22 ஆவது வருடாந்தக் கலைவிழாவும் அடுத்த வருடம் பாடசாலைகளில் இணையவுள்ள சிறார்களை வழியனுப்பும் நிகழ்வும், அண்மையில் சாவகச்சேரி டச்சு வீதி ஐங்கரன் மணிமண்டபத்தில் நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் இடம்பெற்றன.

நிகழ்வுகளுக்கு தலைமை விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச செயலர் பா.செந்தில்நந்தனனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட சிறுவர் நன்னடத்தை அலுவலர் க.சிவகரன், இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் திருமதி செ.செந்தூரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். நிகழ்வுகளைப் பார்வையிட சிறார்களின் பெற்றோர், உறவினர்கள், அயலவர்களெனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

**குறித்த நேரத்தில் ஆரம்பம்**

விழா குறித்த நேரத்தில் ஆரம்பமானது. விருந்தினர்கள் உரிய நேரத்தில் வருகை தந்திருந்ததால் அழைப்பிதழில் குறிப்பிட்டது போன்று, விழா மண்டபத்துக்கு விடைபெறவுள்ள சிறார்கள், விருந்தினர்கள், பெற்றோர்கள் ஆகியோர் அழைத்து வரப் பட்டனர். நிகழ்வுகள் அனைத்தும் பாலர் பகல் பராமரிப்பு நிலையச் சிறார்களாலேயே மேற்கொள்ளப்பட்டன. தேவாரத்தை நான்கு மாணவிகளும் தமிழ்த்தாய் வாழ்த்தை ஐந்து மாணவர்களும், பாடசாலைக் கீதத்தை மாணவ- மாணவிகள் இணைந்தும் வழங்கினர். வரவேற்புரைகள் தமிழ் மொழியிலும் ஆங்கில மொழியிலும் சிறார்களால் நிகழ்த்தப்பட்டன.

அசியுரையை விளைவேலி ஆதீனத்தைச் சேர்ந்த கலாநிதி பண்டிதர் சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள், தென்னிந்திய திருச்சபையின் சாவகச்சேரி தேவாலய போதகர் வண.பிதா என்.ரி.ஜெபநேசன் ஆகியோர் நிகழ்த்தினர். இருவரின் உரையிலும் கடந்த 22 வருடங்களாக சாவகச்சேரி நகரில் இந்த பாலர் பகல் பராமரிப்பு நிலையம் சிறப்பாக இயங்குவதால், சிறார்களுக்கு மட்டுமல்ல நகரை அண்டியுள்ள பகுதிகளில் வாழும் பெற்றோருக்கும் சேவையாற்றுகிறது எனக் கருத முடிகிறது. நகரை அண்டியுள்ள பகுதியில் வாழும் அரச தனியார் நிறுவனங்களில் கடமையாற்றுவோர் பிள்ளைக்கு கற்பித்தலுடன் பாதுகாப்பும் கிடைக்கிறது எனக் கருதி, பராமரிப்பு நிலையத்தில் விட்டு விட்டு அச்சமின்றி தமது கடமைகளை முடித்து வந்து பிள்ளையை அழைத்துச் செல்கின்றனர். கடந்த இரண்டு வருடங்களில் தமது பிள்ளைக்கு சிறந்த கற்பித்தலுடன் நல்லொழுக்கமும், தலைமைத்துவமும் போன்ற பயிற்சிகளை வழங்கியுள்ளதுடன் எதிர்காலத்தில் சிறந்த ஒருபிரசையை உருவாக்கியுள்ளனர் என்ற நம்பிக்கையுடன் அடுத்த வருடம் பாடசாலையில் இணைக்கவுள்ளனர். இந்த பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் செயற்பாடுகள் ஏனைய பிரதேசங்களில் உள்ள பாலர் பகல் பராமரிப்பு நிலையங்களுக்கு முன்னுதாரணமாக திகழும் அளவுக்கு இங்கு கற்கும் மாணவர்களுக்கு தேவையான கற்றல் வளங்களை ஊட்டியதுடன், மேடைகளில் கூச்சமின்றி செயற்படக்கூடிய ஆற்றல்களையும் உருவாக்கியுள்ளதை காணக்கூடியதாக இருந்தது. இந்த நிலையத்தில் கல்வி கற்று, பாடசாலைகளில் இணையவுள்ள சிறார்கள், இணையும் பாடசாலையில்- இங்கு தாம் கற்ற கல்வி மூலம் நிலையத்தின் பெருமையை எடுத்தியம்பக்கூடிய வகையில் பயிற்றுவிக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. உரிய வகையில் பயிற்றுவித்தால் அதன் பெறுபேற்றை உடனடியாகக் காணலாம் என்பதற்கு அமைவாக ஐந்து வயதுக்கு உட்பட்ட சிறார்களுக்கு



வழங்கப்பட்ட பயிற்சிகள் ஆசிரியைகள் மற்றும் அடுத்தவரின் உதவியின்றி தமக்கு வழங்கப்பட்ட பொறுப்பை சிறார்கள் ஆற்றியிருந்தமை- ஆற்றவுள்ளமை பாராட்டத்தக்கது. நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டபோது சிறுவயதில் மேலைத்தேய வாத்தியக் கருவிகளுடன் விருந்தினர்களை அழைத்து வந்தமை, இங்கு இறை வணக்கம்- தமிழ்த் தாய் வாழ்த்து பாடசாலைக் கீதம் போன்றவற்றை சுருதி விலகாமல் செய்து முடித்ததைக் கண்டு பெருமையடையவேண்டியுள்ளது. அடுத்து வரும் கலை நிகழ்வுகளிலும் சிறார்கள் தமது திறமைகளை வெளிக் கொணர்வார்கள். பிஞ்சு வயதில் சிறந்த பயிற்சிகளை வழங்கி ஊக்குவித்த ஆசிரியைகள் அனைவராலும் பாராட்டப்படவேண்டியவர்கள். அத்துடன் நிலைய நிர்வாகத்தினர் நிலையத்தை நடத்துவோரும் பாராட்டப்படவேண்டிவர்கள் -என்றனர்.

நிகழ்வில் நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் சிறார்களின் பெற்றோர் சார்பில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். நிகழ்வின் தலைவருக்கு தலைமை விருந்தினர் பா. செந்தில்நந்தனன் பொன்னாடை போர்த்தி சிறப்பு விருந்தினர் க.சிவகரன் மலர்மாலை அணிவித்து கௌரவித்தனர். நிகழ்வின் கலை நிகழ்வுகள் மூன்ற பிரிவுகளாக நடாத்தப்பட்டன. கீழ்ப்பிரிவு - மேற்பிரிவு பழைய மாணவர் என ஆற்றுகைப்படுத்தப்பட்டன.

வரவேற்பு நடனம் கோலாட்டம் ஆங்கில நடனம் இசையும்- அசைவும்- பேச்சு போன்ற கலை நிகழ்வுகள் மேற்பிரிவினராலும் மிருகக் காட்சிச்சாலை ஒளிவிழா போன்ற நிகழ்வுகள் கீழ்ப்பிரிவினாலும், வேப்பிலை நடனம், கிறிஸ்மஸ் தாத்தா போன்றவை பழைய மாணவர்களாலும் ஆற்றுகைப் படுத்தப்பட்டன.

**சிறப்பான செயற்பாடு**

பாடசாலைகளில் கீழ்ப்பிரிவு, இடைநிலைப் பிரிவு, மேற்பிரிவு, உயர்தரப் பிரிவு போன்றவைகள் மேடைகளில் தமது ஆற்றுகையை வெளிப்படுத்தும்போது, சிறு தயக்கத்தைக் காணநேரும்.ஆனால் ஐந்து வயதுக்கு உட்பட்ட சிறார்கள் தமக்கு வழங்கப்பட்ட பயிற்சியை சிறப்பாகச் செய்து காண்பித்தமை அனைவரின் பாராட்டுதல்களைப் பெற்றன. மேற்பிரிவு சிறார்களால் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு நிகழ்வும் பாராட்டத்தக்க வகையில் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன. பாடல்கள் ஒலித்தால் அதற்கேற்ற வகையில் தமது பணிகளை செய்து காண்பித்தனர்.பாராட்டுக்கள் கீழ்ப்பிரிவு சிறார்களுக்கு வழங்கப்பட்ட மிருகக் காட்சிச்சாலை காட்சியில் ஊர்வன- பாய்வன போன்றவை வழங்கப்பட்டிருந்த நிலையில், ஒவ்வொருவரும் தமது பணிகளைச் சிறப்பாகச் செய்து காண்பித்தனர்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட நன்னடத்தை அலுவலர் ந.சிவகரன் உரையாற்றுகையில் யாழ்.மாவட்டத்தில் பத்து பாலர் பகல் பராமரிப்பு நிலையங்கள் இயங்குகின்றன.அவற்றில் ஆறு நிலையங்கள் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ளன. நிலையம் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட காலம் தொடக்கம் சிறந்த நிர்வாகக் கட்டமைப்பு, சிறார்கள் ஒழுங்கு அமைப்பு போன்றவை கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும். அன்புடன் கூடிய அரவணைப்பும் பாதுகாப்புமுடனான அரணாக உள்ளன. சிறார்கள் தொடர்பான பெற்றோர் சந்திப்பு மற்றும் நிர்வாகக் கட்டமைப்புடன்கூடிய செயற்பாடுகள் சிறப்பாகக் காணப்படுகின்றன. பாலர் பகல் பராமரிப்பு நிலையங்களுக்கு சில செயற்பாட்டு விதிமுறைகள் வருடாந்தம் மேற்கொள்ளப்படல்வேண்டுமென அறிவிக்கப்பட்ட நிலையில், அந்தச் செயற்பாடுகளை இந்த நிலையம் மேற்கொண்டு எமக்கு அறிவிக்கும்போது தான் அந்த செயற்பாடுகள் எமக்கு நினைவுக்கு வந்து ஏனைய நிலையங்களை மேற்கொள்ளமாறு தூண்டச் செய்கிறது. தமிழ் மக்களால் காலம் காலமாக நடத்தப்பட்டு வரும் விழாக்கள் குறிப்பாக பட்டிப் பொங்கல், உழவர் விழா, நவராத்திரி விழா, சித்திரை கைவிசேடம் போன்றவற்றை நடத்துவதில் புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையம் எம்மை தயார்ப்படுத்தும் விழாக்களாக நடத்தி முடிக்கின்றது.100க்கு மேற்பட்ட பிள்ளைகள் வருடாந்தம் கல்வி கற்று வருகின்றனர். இவர்களுக்கு அன்னையின் வளர்ப்பு போன்று சிறந்த பழக்க வழக்கங்களை சிறுவயதில் பழக்கி, சிறார்களின் எதிர்கால வாழ்வுக்கு அத்திபாரமாக வித்திடும் பணியை இந்த நிலையம் மேற்கொள்வது பாராட்டத்தக்கது. சிறந்த தலைமைத்துவப் பண்பை ஊட்டி கற்பித்தலால் அந்தப் பிள்ளை பாடசாலைக் கல்வியைத் தொடரும்போது, நிலையத்தில் பெற்ற கல்வி பயன் கொடுக்கிறது. இந்த நிலையத்தின் பெற்றோர், ஆசிரியர்கள், நிர்வாகத்தினர் ஒற்றுமையாகச் செயற்பட்டு சிறந்த நிலையமாக திகழ வைத்துக் கொண்டிருப்பது மாவட்டத்தில்ஒரு முன்னுதாரணமான நிலையமாகச் செயற்படவைத்துள்ளது-என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் திருமதி செ.செந்தூரன் உரையாற்றுகையில் ஐந்து வயதுக்கு உட்பட்ட சிறார்களை வகைப்படுத்தி கல்வியியலாளர்களாக மாற்றுவது எளிதான காரியமல்ல- என்றார். நிகழ்வில் விருந்தினர்களாக கலந்து கொண்டவர்களை நிலைய நிர்வாகம் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தது.

**வழியனுப்பும் நிகழ்வு**

அதன்பின்னர் பாடசாலைக் கல்வியை தொடரவுள்ள வழியனுப்பும் நிகழ்வு இடம்பெற்றபோது விடைபெறும் மாணவர்கள், பெற்றோர் கண்ணீர் மல்க விடைபெற்றமை மனதை உருக்கும் நிகழ்வாக காணப்பட்டன. கீழ்ப்பிரிவு மாணவர்களுக்கு மேற்பிரிவு மாணவர்கள் விடை பெற்ற காட்சிகளும் கற்பித்த ஆசிரியைகள் மற்றும் நிலைய நிறுவுநரின் மனைவி ஆகியோரைக் கட்டி அழுது விடை பெற்ற காட்சிகள் கலந்து கொண்ட அனைவரையும் நெகிழ வைத்தன எனலாம்.



# மின்மினியும் நானும்..!

செ.தமிழ்நம்பி

நீங்கள் கிராமத்தில் வாழ்ந்திருக்கிறீர்களா? கோடைகாலத்தின் இரவு நேரங்களில் கிராமத்துக்குப் போய் வந்ததுண்டா..? அதுவொரு சுவையான அனுபவம்தான். அதனை அனுபவித்து உணர்ந்தால்தான் அதன் இரட்டிப்பு சுவையை அறிய முடியும். கோடையிலிருந்து கார்த்திகை மாதம் வரை முக்கியமாக மே மாதம் தொடக்கம் ஓகஸ்ட் மாதம் வரை அறு வடை முடிந்த வயல் வெளிகளை ஒட்டியதாயும், நீர்நிலைகளைப் பற்றியதாயும் இருக்கும் தென்றல் சலசலக்கும் மரங்களின் மீதாய் இரவு நேரத்தில் வெளிச்சப் பட்டாளங்கள் திரியும். வெளிச்சத் தூரிகைகளைப் பொழியும்.

மனதை மயக்கும் பசுமஞ்சள் நிறம். அதை கண்டுகொண்டால் நாம் சொக்கியே போவோம். அந்த ஒளியின் நிறத்தில். எம்மை நாமே பார்த்துக்கொள்ளலாம் ஆச்சரியத்தின் பிரமிப்பாய். மரத்தைச் சுற்றித் திரிந்து பறக்கும் குட்டி மின்னல் கூட்டம் ஒரு பக்கம். தரையின் போர்வையான புல் நுனியில் அமர்ந்து தியானம் செய்வது போல மினுக்கும் விளக்கு வண்டுகள் மறு பக்கம். இரண்டுமே நம்மை ஆச்சரியத்தால் கட்டிப் போட்டு விடும். விளக்கு பூச்சி விட்டு விட்டு வெளிச்சத்தை பீற்றி அடிக்கும். அதற்குப் பதில் சொல்வது போல கீழே கிடக்கும் மினுக்கும் வண்டும் அதற்கு ஈடாகவே விட்டு விட்டுப் பிரகாசிக்கும். நிஜத்தில் அத்தனையும் உண்மைதான்.

**ஒளியோடு அன்பின் கொழி(தொனி)ப்பு**

இதுவொரு வெளிச்சங்கள் பேசும் அன்பின் கதை. இங்கு காதல் தூதை முதலில் அனுப் புவர் பெண்ணேதான். பின்னர்தான் ஆண் பதிலுக்கு சம்மதம் தெரிவிப்பார். கீழே கிடக்கும் பெண் பூச்சியை மையல் கொண்டு தான் மேலே பறக்கும் ஆண் பூச்சி ஒளியைத் தூது விடுகிறது தன் காதலுக்காய். அதற்கு எழுதப் படிக்க, பேசத் தெரியாதல்லவா..? காதலுக்கு விழி வழி தான் பேச வேண்டுமா..? ஒளி வழியும் கூட பேசலாமே! இணக்கம் தெரிவிக்கலாமே! அதனால் தனக்குத் தெரிந்த மொழியில் தூதுவிடுகிறது மின்மினி.! தன் இணை வுக்கு இணக்கமா என ஒளியால் கேட்கிறது பெண். ஒளியின் வழியே மொழியாடி ஆணும் சம்மதம் தெரிவிக்கிறது.

இரவு நேரங்களில் சுற்றித் திரியும் மின்மினிப் பூச்சிகளின் வாழ்க்கை இப்படித்தான். இவற்றின் அளவு 5 தொடக்கம் 25 மில்லி மீற்றர்கள் தான். இவற்றில் 2000 வகைகள் உள்ளன. பொதுவாக இவை இரவு நேரங்களில் மட்டுமே சஞ்சரிக்கும். சிலவகை பகலிலும் வரும். ஆனாலும் இரவின் இருளில் சுற்றுபவர்களுக்குத்தானே விளக்கும் வெளிச்சமும் வேண்டும்.

**என்னவள் மின்மினிச்சி**

ஆக, இந்தப் பூச்சிகள் ஒரு விளக்கைச் சுமந்து கொண்டு அது தரும் ஒளியில் ஆகாயத்தில் அழகாக, அற்புதமாக, தன்னைத் தானே மினுக்கிக் கொள்கிறது.என்னை மயக்கி வலம் வருகிறது. இல்லையில்லை எல்லோரையும் மயக்கி வலம் வருகிறது. ஆண் பூச்சி யின் மேல் தோல் வண்டின் தோலைப் போல கடினமாக இருக்கும். பெண்ணோ பரம சாது வாய் உலவுபவள். மென்மையானவளும் கூட. அவளுக்கு தோல் கடினம் கிடையாது. பஞ்சு போல மென்மையாக இருக்கும். அது மட்டுமா, அவள் பறந்து ஓடிவிடாமல் இருக்க அவளுக்கு இறக்கை உருவாக்கப்படவில்லை. அது மட்டுமல்ல முதிர்ச்சி அடைந்துவிட்டால் அவள் தாய்மைப் பொறுப்பேற்க உணவை ஆகாரம் செய்யமாட்டாள். பறப்பது ஆண் மட்டுமே. பெண்ணுக்கு அந்த விடுதலை என்பது இல்லை.என்ன செய்வது அவளின் கரங்கள், பறக்கும் கரங்கள் வெட்டப்பட்டுவிட்டன இயற்கையின் அருளலால்.

அதிக பட்சம் பெண் பூச்சி ஒரு செடி அல்லது புல்லின் மேல் ஏறலாம். ஆணும் பெண்ணும் ஒரு குறிப்பிட்ட காலக் கதியில் ஒளியை விட்டு விட்டுப் பிரகாசிக்கும். பெண் சம்மதம் தெரிவித்த பின் இருவரும் இணைந்து கொள் கின்றனர். பின்னர் இயற்கை நியதிப்படி பெண்ணவள் கருவுறுகிறாள். பின்னர் அங்கேயே கொஞ்ச பொழுதுகளைக் கழிக்கிறாள் பெண் மின்மினியானவள். பின் பாதுகாப்பாக முட்டைகளை ஈர மண்ணில் புதைத்து வைப்பாள். முட்டையிலிருந்து வெளிவரும் குஞ்சுகள் சுமார் ஒரு வருட காலம் இளம் பிள்ளையாய் சுற்றித் திரியும். கோடை காலம் வந்ததும் அவை இணை சேரும் பக்குவத்தை அடைந்துகொள்கிறது. தமிழ்த் தாயின் பிள் ளைகளைப் போல விடுதலையின்றி இறக்கை இன்றியே காலத்தைக் கழிப்பாள்.


**மின்மினியாளின் ஒளி முகம்**

இந்த வெளிச்சம் எப்படி வருகிறது. முகவசீ கரம் தருகிறது.புரிந்துகொள்வோம்! அந்த ஒளியானது மின்மினியின் உடலிலிருந்து உருவாகிறது. மின்மினிப் பூச்சிகள் இளம் பருவத்திலி ருந்தே மினுக் கும் தன்மையவை. ஆனால் இன் னொரு ஆச்ச ரியமும் அடங்கி இருக்கிறது. அது எப்படி இவை இந்த ஒளியால் இறந்து போகாமல் அதனோ டேயே, அத னூடேயே வாழ்கின்றன என் பதுதான்.

பொதுவாக ஒரு பொருள் ஒளிவிடும் போது அதிலிருந்து பெரும்பாலும் வெப்பமே வரும்.குறிப்பாக ஒரு மின் விளக் கில் 90 வீதமான வெப்பமும், 10 வீதமான ஒளியும் மட்டுமே வெளி வரும். அப்படி என்றால் இந்தச் சிறிய மின்மினியாள் வெந்து கருகிவிட மாட்டாளா..? நல்லதொரு கேள்வி ஆனாலும் இங்கே அப்படி எதுவும் நடப்பதில்லை. மின்மினியின் உடலில் உருவாகும் ஒளி குளிர் ஒளி,உயிர் ஒளி என்றே அழைக்கப்படுகிறது. ஏன் தெரியுமா? அந்த ஒளியிலி ருந்து இந்தப் பூச்சிகள் ஒரு மந்திரக் கோலை தன் வயிற்றின் உள்ளாய் வைத்துள்ளன. அதுதான் ஒளியைத் தரும் சிறப்பு செல்கள். அவை முழுக்க முழுக்க ஒளியை மட்டுமே தரும். சிறிதளவு கூட வெப்பம் தருவதில்லை. எப்போதும் மின்மினியிலிருந்து வரும் ஒளியில் 100 வீதமும் ஒளி மட்டுமே இருக்கும். வெப்பம் என்பது பூச்சியம் டிகிரியை விட குறைவாகவே காணப்படும்.

**ஒளியலையாள் மின்மினி**

ஏனெனில் மின்மினியின் உடலிலிருந்து பார்வை ஒளியலைகள் மட்டுமே உருவாக் கப்படுகின்றன. புறஊதாக்கதிர்களோ, அகச் சிவப்பு கதிரோ உற்பத்தி செய்யப்படுவதில்லை. அத்துடன் அதன் வெப்ப அளவு என்பது மின் மினிகள் எவ்வளவு விரைவில் பிரகாசம் பெறுகிறதோ அதற்குத் தகுந்தாற்போல காணப்படும். விரைவான காலகதி எனில் வெப்ப அளவு அதிகமாக இருக்கும். இரு மினுக்குகளுக்கு இடையே கொஞ்ச நேரம் அதிகமா னால் ஒளியின் வெப்பம் கொஞ்சம் குறைவடைகிறது. இந்த வலைவிரிப்பினுள்தான் ஆண் மின்மினிகள்



ஈர்க்கப்படுகின்றன. இணை தேட மட்டுமல்ல, சமயத்தில் இரை தேடவும் இந்தப் பூச்சிகள் ஒளியைத் தூண்டிலாகப் போடுகின்றன.

மின்மினியின் வயிற்றுப் பகுதியில் ஒளியை உருவாக்கும் சிறப்பு ஒளிச் செல்கள் உள்ளன. இதில் லூசிபெரின் என்ற வேதிப்பொருள் இருக்கிறது. இவை மின்மினியின் உடலுக்குள் வரும் காற்றுக் குழாயிலிருந்து ஒட்சிசனை எடுத்துக் கொள்கிறது. பின் லூசிபெரினும் ஒட்சிசனும் லூசிபெரேஸ்என்றநொதியினால்இணைந்து ஆக்சிலூசிபெரிலின் என்ற பொருளாக மாறுகிறது. அப்போதே ஒளியையும் வெளிவிடுகிறது மின்மினியின் வயிற்றிலுள்ள மந்திரக்கோலான செல்கள்.

இந்த ஒளியின் அலை நீளம் 510 தொடக்கம் 670 நனோ மீற்றர். இதன் நிறம் வெளிர் மஞ் சளிலிருந்து பசு மஞ்சள், இளஞ்சிவப்பு பச்சையாக காணப்படுகிறது.ஆனால் இதன் ஒளி விடும் கட்டுப்பாட்டை நிறுத்தி ஓடச் செய்பவை நரம்பு செல்களே. இவ்வளவு அறிவியல் முன்னேறிய நிலையிலும் எம்மால் மின் மினி போன்று ஒளியை உற்பத்தி செய்ய முடியவில்லை. லூசிபெரின் உருவாக்கம் என்பது இன்னமும் முழுமையாய் விஞ் ஞானிகளுக் குப் பிடிபடவில்லை. ஆய்வின் தொடர்நிலை யிலேயே இருக்கிறது.

**முடிவாக மின்மினியாளைப் பற்றிய ஒரு வரலாற்றுத் தகவல்**

முதலாம் உலகப்போர் நடந்த காலத்தில் இராணுவ முகாம்களில் மின் விளக்கு வசதி என்பது கிடையாது. அப்போது விழுப்புண் அடைந்த வீரகளுக்கு சிகிச்சை அளிக்கவும், அறுவை சிகிச்சை செய்யவும், சிமிலி (லாந்தர்) விளக்கில் மின்மினியைப் பிடித்துப் போட்டு வைத்துக் கொண்டு சிகிச்சை செய்ததாக தகவல்கள் கூறப்படு கிறது. அது போலவே இராணுவ வீரர்கள் கடிதம் படிக்க மின்மினியின் உலர்ந்த உடலைப் பொடி செய்து அதில் உமிழ் நீரை உமிழ்ந்து கலந்து கொண்டு அதன் ஒளியில் படித்ததாக சொல்லப்படுகிறது. ஆக,நானும் இருளிடை மின் மினியாளை காதலிக்கிறேன்! அவள் ஒளி முகம் காண தினம் ஏங்குகிறேன்! இப்போதும் கூட இரு ளோடு நட்புக் கொண்டு மின்மினியாளிடம் தூது அனுப்புகிறேன். எந்தன் கற்பனை இல்லங்களில் அவள் ஒளி முகத்தை குடியமர்த் திட எத்தனிக்கிறேன்..! நீங் கள் எப்படி?? ஒரு தரம் என் இல்லம் வாருங்களேன் மின் மினியாளை சந்தித்தக்கொள்வதற்காய்! வாருங்கள்.! வாருங்கள்.! உங்களை வரவேற்கிறேன்.!!

## தவறிவிட்டது

ஆலடி, உடுவிலைச் சேர்ந்த நாகேஸ்வரன் ரபேரன் ஆகிய எனது NIC 943070865V எனும் அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், வாகன காப்புறுதிப் பத்திரம், பல்கலைக்கழக அடையாளஅட்டை, ATM காட் ஆகிய ஆவணங்கள் அடங்கிய பேஸ் யாழ்ப்பாணம், அச்சுவேலி ஊடாக நெல்லியடி செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 077 325 7876 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## கண்ணீர் அஞ்சலி



வேலணை மத்திய கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றும் **செல்வி அனுசனா** அவர்களின் அன்புத்தந்தை

**சபாரத்தினம் மனோகரன்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிசங்கம்,**
**யாழ். வேலணை மத்திய கல்லூரி.**

## மரண அறிவித்தல்கள்

### சபாரத்தினம் மனோகரன்



இராஜேஸ்வரி வீதியைப் பிறப்பிடமாகவும் நல்லூர் யமுனாஏரியை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் மனோகரன் நேற்று (03.01.2017) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம்-ஈஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் சரோஜினி தேவியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற சுதர்சனா மற்றும் சோபனா(விக்னேஸ்வரா வித்தியாலயம் ) வாசுகி (பிரதேச செயலகம் நல்லூர்) அனுசனா (ஆசிரியர்.யா/ வேலணை மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சதீஸ், பிரியாந்தன் (கமநலத் திணைக்களம் ,நல்லூர்) ஆகியோரின் மாமனும் சாருஜா,சமிக்ஷா,சாதுர்ஜன்,சுஜேதன் ஆகியோரின் அன்புப் பேரனும் சோதிராசா (பிரான்ஸ்) சாந்தலிங்கம், மூர்த்தி, கணேசலிங்கம்(கனடா) காந்திமதி,சித்திராமதி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2017) புதன்கிழமை பி.ப 2.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் ,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**41/32,செம்மணி வீதி ,**
**(யமுனாஏரி) செட்டியார் தோட்டம்,**
**நல்லூர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 959 1161**

### தம்பாப்பிள்ளை செல்வநாயகம்

**(இராஜேஸ்வரி சுவையகம் - உரிமையாளர்)**



புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை 2 ஆம், குறுக்குத்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பாப்பிள்ளை செல்வநாயகம் (இராஜேஸ்வரி சுவையகம் உரிமையாளர்) 02.01.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பாப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் இரண்டாவது புதல்வனும் காலஞ்சென்ற செகநாயகம் பிள்ளை - மகேஸ்வரி தம்பதியரின் அன்புமருமகனும் முத்துலட்சுமியின் அன்புக்கணவரும் அருந்தவநாயகம், தங்கராசா, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரனும் விக்னேஸ்வரி, இராஜேஸ்வரி (பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, உள நலப்பிரிவு), நிசாந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தந்தையும் பிரபாகரன், ஜெயமாலா (ஜேர்மனி) ஆகி யோரின் மாமனாரும் அபிப்பிரியன், அக்சாயினி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2017) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 609 5098,**
**077 668 5039**

**தகவல்:**
**குடும்பத்தினர்**


# சீனா - லண்டன் இடையே ரயில் சேவை ஆரம்பம்



சீனாவால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சீனா மற்றும் லண்டன் இடையேயான நேரடி ரயில் பாதையில்முதல்சரக்குரயில்தனதுபயணத்தை தொடங்கியுள்ளது.

சீனாவின் கிழக்கில் உள்ள யீ வூ நகரிலிருந்து புறப்பட்டுச் சென்ற அந்த ரயில், துணிகள், பைகள் மற்றும் வீட்டு உபயோகப் பொருள்களை ஏற்றிச் சென்றது. இரண்டு வாரங்களில் அது லண்டன் சென்றடையும்.

தண்டவாளத்தின் பாதை மாறும் போது சரக்குகள் வேறு ரயில்களுக்கு மாற்றப்பட வேண்டும். தனது எல்லைகளுடன் ஐரோப்பாவை



இணைக்கும் பட்டுப் பாதை திட்டத்தின் பங்காக சமீப வருடங்களில் ஐரோப்பிய நகரங்களுக்கான நேரடி ரயில் பாதைகளை சீனா விரிவுபடுத்தி கொண்டு வருகிறது. .

இந்தச் சேவை, ஏற்றுமதியாளர்களுக்கு மெதுவான மற்றும் விலை குறைந்த சரக்கு கப்பல் சேவைக்கும் மற்றும் அதி விரைவான அதே சமயத்தில் மிக அதிக செலவிலான விமான போக்குவரத்துக்கும் இடையில் ஒரு நடுத்தர வாய்ப்பாக அமைகிறது. (வ)

# வயலர்ஸ் ஹெட்போன்களை வெளியிடுகிறது சாம் சங்




சாம்சங் நிறுவனம் தனது சொந்த எயார் பொட் போன்ற சாதனத்தை தயாரித்து வெளியிட இருப்ப தாகக் கூறப்படுகிறது.

எயார் பட்ஸ் என்ற பெயரில் அந்த நிறுவனம் புதிய வயலர்ஸ் ஹெட்போன்களைத் தயாரித்து வருவதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன.

சமீபத்தில் கிடைத்திருக்கும் தகவல்களின் படி, புதிய கலக்ஸி எஸ்8 அதிதிறன் அலைபேசி யுடன் எயார் பட்ஸ் சாதனத்தை சாம்சங் வெளியிடும் என கூறப்படுகிறது.

அப்பிள் எயார் பொட் சாதனத்திற்கு போட்டியாக சாம் சங் நிறுவனம் இதனை அறிமுகம் செய்யவுள்ளது.

புதிய வயலர்ஸ் ஹெட்போன்கள் கலக்ஸி எஸ்8 அதி திறன் அலைபேசிளுடன் வெளியிடப்படுமா அல்லது தனியே விற்பனை செய்யப்படுமா என்பது குறித்து எந்தவித தகவலும் இல்லை. அத்துடன், சாம்சங் எயார் பட்ஸ் ஹார்மன் தொழில்நுட்பம், எயார் பொட்களில் அண்ட்ரொய்ட் சின்க் அம்சம் வழங்கப்பட்டதைப் போன்ற சிறப்பு அம்சம் சாம்சங் எயார் பட்ஸ்களிலும் வழங்கப்படுமா என்பது குறித்து எவ்வித தகவலும் இல்லை. (வ)

**வாகனம் விற்பனைக்கு**

வெதுப்பகம் ஒன்றில் பயன்படுத்திய நல்ல நிலையிலுள்ள TATA வாகனமும் மகேந்திரா Alpha வாகனங்கள் (NPQY-XXXX) (NPPR-XXXX) விற்பனைக்கு.

தொடர்பு : 077 757 4564

**தவறிவிட்டது**

**பாலசுப்பிரமணியம் பாஸ்கரன்** என்பவருடைய **தே. அ. அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம்** என்பன **உரும்பிராய் சந்திக்கும் இராசவீதி சந்திக்கும்** இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

தொடர்பு : 077 004 1125

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

03.01.2017 | 2078 | நீலம்

விருச்சிகம்

04 09 44 55

வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி

ரூ 5,409,435/=

வெற்றி இலக்கங்கள்

10 | 13 டபிள் சான்ஸ்

**UK யில் இருந்து வருகை தந்துள்ள வைத்தியர்கள் மூலம் இலவச Acupuncture (அக்குபஞ்சர்) வைத்தியம் நடத்தப்படுகின்றது.**

கவலை, ஏக்கம், உளச்சோர்வு, தூக்கமின்மை, நீடித்த அயர்ச்சி, கவலை தவிப்பு, உளைச்சல் செரிமானக்கோளாறுகள், மாதவிடாய்கோளாறுகள், ஒற்றைத்தலைவலி, அறுவைச்சிகிச்சை ஆதரவு, அரிக்கும் தோலழற்சி, Asthma, கருவுறாமை, கர்ப்பகாலக் கோளாறுகள்.

யாழ்ப்பாணத்தில் 7 தொடக்கம் 11 ஆம் திகதி வரை நடைபெறும்.

தொடர்பு - 077 766 2039

**30 ஆவது பிறந்த தினமும் ஓராண்டு நினைவஞ்லியும்**



பிறப்பு 19 . 01 . 1987

இறப்பு 18 . 12 . 2015

அமரர்

**கிருபராஜா மதுசூதனன்**

ஆண்டுகள் ஒன்று ஆனது நீ பிரிந்து
தவிக்கின்றோம் நாம் இங்கு உன்னை நினைத்து
பட்டாம்பூச்சியாய் சிறகடித்து பறக்கும் முன்னே
உன் வாழ்வை சிறகொடித்துப் பறித்தானே காலன்.

அப்பா, அம்மா,
தம்பி, தங்கை, உறவினர்கள்.

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



பிறப்பு 27 . 12 . 1958

இறப்பு 17 . 12 . 2015

செல்வி **ஆனந்தராணி அப்புத்துரை**

(பொருளாளர்-தம்பா சமூக அபிவிருத்தி மன்றம்)

திதி-பூர்வபக்க ஸப்தமி (04.01.2017 புதன்)

அன்புடன் பேசி அறிவு பல புகட்டி
சமூகவளர்ச்சிக்காக நித்தமும் நீ உழைத்தாய் !
தம்பா மகளிர் மன்றத்தின் வளர்ச்சிக்கு உதவி
ஆண்டவன் அடி சேர்ந்தனை யோ !
நெஞ்சிருக்கும் வரை நாம் மறவோம்.

தம்பாலை,
அச்சுவேலி.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

**வேலைக்கு ஆள் தேவை**

யாழ். நகரில் இயங்கும் மின்சார உபகரணங்களை விற்பனை செய்யும் கடைக்கு வேலை ஆள் தேவை.

தொடர்பு : 021 222 8345

# VACANCY

## COOKS

KITCHEN HELPER

CONCIERGE (FRONT OFFICE HELPER)

WAITERS / TRAINEE WAITERS

HOUSE – KEEPERS

CASHIER (FOOD AND BEVERAGE)

**To work for Tilko Jaffna City Hotel, one of the leading star class hotel in the North. Candidate Should have 1 Year experience in a hotel industry.**

**Excellent carrier prospect and attractive remuneration package**

**Please call - 077 981 7617**

(c/26564) (17.19.20)

**Vacancy announcement**

**A well-established higher educational institute at Chankanai, seeks suitable persons to fill the vacancies very immediately.**

*Freshers and experienced are welcome.*

1. **Branch Manager** *(With recognized degree or HND in the field of IT or Management.)*
2. **Lecturer / Tutor** *(HND or any other higher qualifications in IT)*
3. **Assistant Lecturer /Tutor** – Part time *(Able to teach Programing Languages, Web designing, Computer hardware and Network technology)*
4. **Teacher cum student counselor** *(Females only. A/L qualified with good English.)*

**Send us your application & CV with the detail of two non-related referees with passport size photograph. Apply before *9 th of January* via e-mail. Only short listed candidates will be contacted.**

*For all positions, English Language proficiency is highly expected.*

e - mail : aiconcity@yahoo.com

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** முக்கியமான செயல் நிறைவேறத் தாமதம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில், லாபம் சுமாரான அளவில் இருக்கும். பெண்கள், பிள்ளைகளின் எதிர்கால நலனில் அக்கறை கொள்வர். சிலருக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம்.

**இடபம்:** திட்டமிட்ட செயல் இனிதாக நிறைவேறும். குடும்பத்தினரின் அன்பைக் கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில் வியாபார வளர்ச்சி வியத்தகு முன்னேற்றம் பெறும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**மிதுனம்:** மதிநுட்பத்தால் வாழ்வில் வெற்றி பெறுவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் லாபம் பன்மடங்கு உயரும். வருமானம் திருப்தியளிக்கும். பெண்கள் வெகுநாள் வாங்க நினைத்த பொருள் வாங்குவர்.

**கடகம்:** நற்செயல் மூலம் புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சராசரி அளவில் பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்களுக்கு சகோதர வழியில் உதவி கிடைக்கும்.

**சிங்கம்:** நண்பரால் உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். மிதமான ஆதாயம் கிடைக்கும். வீடு, வாகன வகையில், பராமரிப்புச் செலவு செய்வீர்கள். தாயின் ஆசியும் மனதிற்கு ஆறுதல் தரும்.

**கன்னி:** நல்லவர்களின் அறிமுகத்தால் நன்மை கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் குறுக்கிட்ட இடையூறு விலகும். தாராள பணவரவு கிடைக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். சுற்றுலா செல்லத் திட்டமிடுவீர்கள்.

**துலாம்:** எதிர்கால வளர்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய சலுகை கிடைக்கும். ஆரோக்கியம் மேம்படும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**விருச்சிகம்:** அன்றாடப் பணியில் சுறுசுறுப்புடன் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் ஆதாயம் உயரும். நிலுவைப் பணம் வசூலாகும். பெண்கள் ஆடம்பரப் பொருள் வாங்குவர். எதிர்பார்த்த சுபச்செய்தி வந்து சேரும்.

**தனுசு:** அறிமுகம் இல்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில் வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேற்றுவது நல்லது. பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். பாதுகாப்புக் குறைவான இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

**மகரம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். லாபம் திருப்திகரமாக கிடைக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும்.

**கும்பம்:** கடந்த கால உழைப்பின் பலனைப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தின் வளர்ச்சியால் லாபம் பன்மடங்கு உயரும். விரும்பிய உணவுகளை உண்டு மகிழ்வீர்கள். பெண்கள் உறவினருடன் சுற்றுலா செல்லத் திட்டமிடுவர்.

**மீனம்:** தன்னம்பிக்கையுடன் செயலாற்றி வருவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். பெற்றோர் உடல்நலனில் அக்கறை கொள்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்கும்.

# தன் கதையில் தானே நடிக்கிறார் சச்சின்



சச்சின் டெண்டுல்கர் தற்போது சினிமா நடிகராகிவிட்டார். அதுவும் அவரது சொந்த வாழ்க்கை வரலாற்றுக் கதையில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றதும் அவரை வைத்து சினிமா எடுக்கப் பலரும் முயற்சி மேற்கொண்டனர். கடைசியில் அவர் தனது வாழ்க்கை வரலாற்றுக் கதையில் நடிக்க ஒப்புக் கொண்டார். படத்தின் தலைப்பு 'சச்சின்'. இந்தப் படத்தை ஜேம்ஸ் எர்ச்கின் இயக்குகிறார். ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கிறார். சச்சினின் இளமைப் பருவ வீடியோக்களையே இதில் பயன்படுத்தப் போகிறார்களாம். அவர் விளையாடிய சர்வதேசப் போட்டிகளின் படங்களையும் இதில் பயன்படுத்தவிருக்கிறார்கள். இந்த தகவல்கள் சச்சினின் கோடிக் கணக்கான ரசிகர்களிடம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளன.

படத்தில் நடிப்பது குறித்து சச்சின் டெண்டுல்கர் கூறுகையில், எனது வாழ்க்கை வரலாறு படத்தில் நான் நடிப்பது வித்தியாசமான அனுபவமாக இருக்கிறது. கிரிக்கெட் விளையாடுவதை விட நடிப்பது கடினமானது என்பதைப் புரிந்து கொண்டேன் என்றார்.

சமீபத்தில்தான் இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் டோனியின் வாழ்க்கை வரலாற்றுப் படம் வெளியாகிப் பெரும் வெற்றி பெற்றது. அடுத்து டெண்டுல்கர் படம். இது வரும் ஏப்ரல் மாதம் வெளியாகவிருக்கிறது என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | | | | 1 | | 3 |
| 8 | | 2 | | 1 | | | | |
| | 4 | | | | | 2 | | 9 |
| | | | 8 | | 9 | | | |
| | 2 | | | 4 | | | 9 | |
| | | | 6 | | 2 | | | |
| 5 | | 7 | | | | | 6 | |
| | | | | 3 | | 8 | | 7 |
| 4 | | 1 | | | | | 5 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 3 | 1 | 2 | 4 | 5 | 8 | 6 | 7 |
| 7 | 6 | 4 | 1 | 8 | 9 | 5 | 3 | 2 |
| 8 | 2 | 5 | 3 | 7 | 6 | 4 | 9 | 1 |
| 5 | 9 | 3 | 7 | 1 | 4 | 6 | 2 | 8 |
| 1 | 4 | 2 | 8 | 6 | 3 | 9 | 7 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 5 | 2 | 3 | 1 | 4 |
| 3 | 5 | 9 | 4 | 2 | 7 | 1 | 8 | 6 |
| 4 | 1 | 7 | 6 | 9 | 8 | 2 | 5 | 3 |
| 2 | 8 | 6 | 5 | 3 | 1 | 7 | 4 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க் கரீதியான ஒழுங்கு படுத் தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

அமெரிக்கன்: நாமதான் முதன் முதலாக விண்வெளிக்குப் போய்த் திரும்பினோம்...
ரஷ்யன்: நாமதான் முதன்முதலாக நிலவுக்குப் போய்த் திரும்பினோம்...
நம்மாளு: டேய் நாங்கள் எல்லாம் அப்பல்லோவுக்கே போய்த் திரும்பியிருக்கோம்... சும்மா பீத்திக் காதிங்க...
அமெரிக்கன்: பொய் சொல்லாதடா, சந்தர்ப்பமே இல்ல...



WhatsApp


குழந்தை அருண்
அவ்வளவு பெரிய யானைக்கே தன்னோட பெயர் 'யானை' என்று தெரியாது.
இது தான் வாழ்க்கை...

வீட்டுக்கு விளக்கு ஏத்த வாறியா என்று என் பக்கத்து வீட்டு பொண்ணுகிட்ட கேட்டேன்...
விளக்குமாத்தோட வாறேன் என்று சொல்லுது....



ஒரு வேளை வீட்டைக் கூட்டி விட்டுட்டு விளக்கு ஏத்துவாளோ...

பரீட்சையில் தோல்வி ஆனதுக்கு என்னோட மறதிதான் சார் காரணம்!
இப்பவாவது உணர்ந்தியே!



கையில் பிட் இருந்தும் அடிக்கலைன்னா வேற என்ன சார் சொல்லுறது!

கடையைப் பூட்டியே வைத்து... வாடகையும் சரியாகக் கொடுத்தால்... அது எந்தக் கடை



ஏ.ரி.எம். சார்



# தோற்றுப்போன தலைவராக யாழ். வரும் மைத்திரி

தி.ராஜ்

2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. அதற்கு முன்னரான காலம் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலம். அடக்குமுறைகள் என்பது உச்சமுற்றிருந்தது. ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு மகிந்த ராஜபக்ச செய்த திருகுதாளங்கள் கொஞ்சம் அல்ல. போலி வாக்குச் சீட்டு விநியோகம், பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஒத்த தோற்றமுடைய சிறிசேன ஒருவரை தேர்தலில் களமிறக்கியவை என்று மகிந்த செய்தவற்றைப் பட்டியலிட முடியும்.

யாருமே எதிர்பாராத வகையில் மகிந்த ராஜபக்ச மண் கௌவினார். வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களின் வாக்குகள் மைத்திரிபாலவை ஜனாதிபதியாக்கியது. மகிந்தவின் அடக்குமுறை திருகுதாளங்கள் எல்லாவற்றையும் துணிந்து எதிர்த்து, பல எதிர்பார்ப்புக்களுடன்தான் மைத்திரிபாலவை ஜனாதிபதியாகுவதற்கு தமிழ் மக்கள் வாக்களித்திருந்தார்கள்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்றதும், காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுவிப்பு, அரசியல் தீர்வு, இறுதிக் கட்டப் போர்க் குற்ற விசாரணை விடயங்களில் சாதகமான நகர்வுகளை தமிழ் மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் நடைமுறையில், ஏனைய சிங்களத் தலைவர்களைப் போன்று பத்தோடு பதினொன்றாகவே மைத்திரிபால சிறிசேனவின் செயற்பாடுகளும் அமைந்துள்ளன.

2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் தேசிய நத்தார் விழா நடைபெற்றது. இதில் கலந்து கொள்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால யாழ்ப்பாணம் வந்திருந்தார். வலி. வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள மல்லாகம் கோணப்புலம் நலன்புரிநிலையத்தைச்சென்று பார்வையிட்டிருந்தார். இதன் பின்னர் நத்தார் நிகழ்வில் பேசும் போது, 6 மாதங்களுக்குள் அந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துவேன் என்று கூறியிருந்தார். அவர் வாக்குறுதியளித்த காலம் முடிவடைந்து 6 மாதங்களும் 16 நாள்களும் இன்றுடன் பூர்த்தியாகின்றன. வலி. வடக்கின் வளம் கொழிக்கும் பூமியின் 4 ஆயிரம் ஏக்கர் வரையில் பாதுகாப்புத் தரப்பின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றது.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற இரண்டாவது ஆண்டுக் கொண்டாட்டத்தில் பங்கேற்கவரும் மைத்திரிபால, தனது வாக்குறுதிகளை தமிழ் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றாத தோற்றுப் போன தலைவராக தமிழ் மக்களை ஏமாற்றிய ஒருவராகவே வருகின்றார்.

யாழ்ப்பாணத்தின் இன்றைய பயணத்திற்கான அவரது நிகழ்சி நிரலில் கூட, காணி விடுவிப்புக்கள் அதற்கான அறிவிப்புக்கள் எவையும் இல்லை என்கின்றன மாவட்டச் செயலக வட்டாரங்கள். படையினரைக் கௌரவிப்பதற்கும், மரம் நடுவதற்கும், குறைகேள் அலுவலகத்தை திறந்து வைப்பதற்குமே மைத்திரிபால யாழ்ப்பாணம் வருகின்றார்.

> **தமிழ் மக்களின் வாக்குகளால் ஜனாதிபதியாக வெற்றி பெற்று, தமிழ் மக்களின் விருப்பங்கள் – எதிர்பார்ப்புக்களுக்கு மாறாகச் செயற்படும் ஒருவராகவே மைத்திரிபால மாறியிருக்கின்றார். தமிழ் மக்களின் மனங்களில் நல்லாட்சி அரசு மீதான நம்பிக்கையீனம் அதிகரித்துச் செல்கின்றது. ஜனாதிபதி மைத்திரிபால மீதான அதிருப்தியும் கூடுகின்றது.**

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலையும், நல்லாட்சி அரசினால் ஏமாற்றப்பட்டு - இழுதடிக்கப்பட்டுச் செல்கின்றது. ஒவ்வொரு தடவையும் காரணங்கள் சொல்லப்பட்டு அவர்களது விடுதலை தட்டிக்கழிக்கப்பட்டே செல்கின்றது. மகிந்த ராஜபக்சவின் காலத்தில் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவே மாட்டார்கள் என்ற நிலை காணப்பட்டது. தற்போதைய அரசு, விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றோம் என்று சொல்லியே விடுவிக்காமல் இருந்து வருகின்றது.

போர்க் குற்ற விசாரணையைப் பொறுத்த வரையில் தமிழ் மக்களின் நிலைப்பாட்டுக்கு எதிரான கருத்தியலிலேயே ஜனாதிபதி இன்னமும் நின்று கொண்டிருக்கின்றார். தமது இழப்புக்களுக்கு தமிழ் மக்கள் நீதி நியாயத்தை கோரி நிற்கின்றனர். அந்த நீதி நியாயம் இலங்கையின் நீதிப் பொறிமுறைகள் ஊடாக கிடைக்கப் பெறாது என்பதை காலம் காலமாக உணர்ந்ததனால்தான், பன்னாட்டுப் பொறிமுறையைக் கோரியுள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கூட, வெளிநாட்டு நீதிபதிகள், பன்னாட்டு வழக்குத் தொடுநர்கள் விசாரணைப் பொறிமுறையில் உள்ளடக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. இதற்கு இலங்கை அரசும் இணை அனுசரணை வழங்கியிருந்தது. அந்தத் தீர்மானத்தை கூட மறுதலித்து நிராகரித்து வருகின்றார் ஜனாதிபதி மைத்திரி.

அரசியல் தீர்வு விடயத்திலும், தமிழ் மக்களின் விருப்பங்களைப் புறந்தள்ளும் வகையிலேயே ஜனாதிபதியை தலைமையாகக் கொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி கருத்துக்களை வெளியிட்டு வருகின்றது. ஜனாதிபதியோ தனது நிலைப்பாட்டை பகிரங்கமாகச் சொல்வதைத் தவிர்த்து வருகின்றார். சில இடங்களில் சிங்கள பௌத்தர்களுக்கு ஆதரவாக தனது கருத்தை பூடகமாகச் சொல்லியுள்ளார்.

தமிழ் மக்களின் வாக்குகளால் ஜனாதிபதியாக வெற்றி பெற்று, தமிழ் மக்களின் விருப்பங்கள் - எதிர்பார்ப்புக்களுக்கு மாறாகச் செயற்படும் ஒருவராகவே மைத்திரிபால மாறியிருக்கின்றார்.

தமிழ் மக்களின் மனங்களில் நல்லாட்சி அரசு மீதான நம்பிக்கையீனம் அதிகரித் துச் செல்கின்றது. ஜனாதிபதி மைத்திரிபால மீதான அதிருப்தியும் கூடுகின்றது. தமிழர்கள், தங்கள் விவகாரங்களில் தோற்றுப் போன தலைவராகவே மைத்திரியைப் பார்க்கின்றனர்.

> **யாழ்ப்பாணத்தின் இன்றைய பயணத்திற்கான அவரது நிகழ்சி நிரலில் கூட, காணி விடுவிப்புக்கள் அதற்கான அறிவிப்புக்கள் எவையும் இல்லை என்கின்றன மாவட்டச் செயலக வட்டாரங்கள்.**

## துருவத்தில் உயிரினங்கள்!

ஆட்டிக் பகுதிகளில் பெரிய மரம், செடி, கொடிகள் கிடையாது. குறைந்தளவான குற்றுச் செடிகள், பூண்டுகள், சின்ன சின்ன மூலிகைகள், லைக்கன்ஸ் மற்றும் பாசிகள் என்பனவே உள்ளதாகச் சொல்லப்படுகிறது. இவைகளைக் கொண்டமைந்துள்ளதான ஒரு பகுதிதான் துந்திரா பிரதேசம் எனப்படுகிறது. இங்கிருந்து வடக்கே செல்லச் செல்ல தாவரங்களைப் பராமரிக்க வேண்டிய வெப்பம் மிகக் குறைவாக இருப்பதாகவும் அதன் அளவு, அடர்த்தி, உற்பத்தி வகைகள் என அனைத்தையும் குளிர் என்பது அழித்துவிடுவதாக அறிவியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இங்கு வளரும் குற்றுச் செடிகளும் கூட அதிக பட்சம் 2 மீற்றர் உயரம் வரைதான் வளரும். லைக்கன்ஸ் மற்றும் பாசிகள் தான் அடர்வாக வளர்வதாகச் சொல்லப்படுகிறது. இவைதவிர ஆர்க்டிக் பாப்பி என்ற மஞ்சள் நிறப் பூ பூக்கும் செடியும் இங்கு காணப்படுவதாக கூறுகின்றனர். இங்கு தாவர உண்ணிகள் உண்டு. குறிப்பாக துருவ முயல், லெம்மிங், புனுகு எருது, கலை மான்கள் காணப்படுகின்றன. துருவ முயல் குளிர் அதிகமாகும் காலங்களில் தரைக்கு அடியில் குழிபறித்து உறங்குகிறது. இதன் காது கொஞ்சம் நீளமாக இருக்கும்.



## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

### அமரர் வல்லிபுரம் சிவானந்தன்

(உரிமையாளர் - பிள்ளையார் மில், சிவா மில்)



கடந்த 05.12.2016 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவரின் துயர்வுச்செய்தி அறிந்து நேரடியாகவும் தொலைபேசியூடாகவும் இரங்கற்செய்தி தெரிவித்தவர்களுக்கும் அன்னாரது இறுதிக்கிரியைகளின் போதும் இறுதி யாத்திரையின் போதும் நேரடியாகக் கலந்து எமது துயரில் பங்குகொண்டவர்களுக்கும் எமக்கு உறுதுணையாக நின்று உதவிய உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வ நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரது வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (04.01.2017) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
46/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (J 7369) (14,17,18)
021 222 5592

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

### அமரர் சின்னத்தம்பி ஆறுமுகம்

(ஓய்வு பெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர்)




வலி வடக்கு வயாவிளானை பிறப்பிடமாகவும் அம்பாள் வளவு குமாரபுரம் பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சின்னத்தம்பி ஆறுமுகம் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்) அவர்கள் ஐயப்பன் அடியில் சரணடைந்த முதலாம் ஆண்டு நினைவலைகள் 04.01.2017

ஓர் ஆண்டு காலம் ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவுகள் எமது மனதில் அழியாத கோலங்களாக ஆழமாகப் பதிந்துவிட்டது. குடும்பத்தின் குத்துவிளக்காக இருந்து எமக்கு ஒளி தந்தீர்கள். இப்போது அந்த விளக்கு அணைந்து போனாலும் ஐயன் திருவடி நிழலில் இருந்து எமது குடும்பத்திற்கு ஆசி கிடைக்க வேண்டி உங்கள் ஆத்ம சாந்திக்காய் ஆறாத துயருடன்

ஆறுமுகம் குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மனம் மகிழ 12 . 09 . 1950

மனம் நெகிழ 07 . 01 . 2014

### அமரர் கந்தன் தம்பித்துரை

அன்பு அப்பா ----!
தவம் புரியாமலே கிடைத்த வரம் நீங்கள்....
என்ன தவறிழைத்தோம் அப்பா ......
இறைவன் மீண்டும் தன்னோடு சேர்த்துக் கொண்டான்
இன்று ஆண்டுகள் மூன்று ஆனது அப்பா
பலன் இல்லை என்று தெரிந்தும்
எம் தவம் தொடர்கிறது
என்றோ ஒரு நாள் உங்கள்
அன்பு முகத்தைத் காண்போம் என்ற ஏக்கத்தில் .....

இல. 533/11 ஆம் யூனிற்,
தருமபுரம்.
குடும்பத்தினர்.

## 35 ஆம் ஆண்டு நினைவலைகள்

### S. ராஜா (வதிரி)

மறைவு: 04.01.1982



R. மகேந்திரன்
(ஓய்வுபெற்ற லயன் எயர் அதிகாரி)
"மேவில்லா"
78/3, மானிப்பாய் வீதி,
உடுவில்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி இ. சுகந்தி அவர்களின் பாசமிகு மாமியார்

### ஸ்ரீமதி சுகுமாரி சங்கரராஜசர்மா




அவர்கள் 25.12.2016 அன்று சிவபதமடைந்துவிட்டார். அவரின் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மாசாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும் அனைத்து உத்தியோகத்தர்களும்
ஊழியர் நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம், கோப்பாய்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 . 04 . 1939



உதிர்வு 28 . 12 . 2014

### அமரர் கந்தையா நவரத்தினம்


(ஓய்வுபெற்ற அதிபரும் ஆசிரியரும்)
திதி: சப்தமி
ஆண்டுகளிரண்டு சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம் - நேரம்
தவறாமல் உம் நினைவு வந்து வந்து
வாட்டுவதை யார் அறிவார்? யாவரையும்
மனம் கவர்ந்த உத்தமரே எங்கு சென்றீர் ஐயா?
ஐங்கர விநாயகரின் பாதங்களை
நிச்சயம் அடைந்திருப்பீரென மன
ஆறுதல் அடைகின்றோம்.

நீங்காத நினைவுகளுடன்...
'நவஜீவனம்',
கச்சாய் வடக்கு, கொடிகாமம்.
குடும்பத்தினர்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

கடந்த 05.12.2016 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் சின்னையா சண்முகநாதன்



பிறப்பு 16.05.1947

இறப்பு 05.12.2016

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 04.01.2017 புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் வதிவிடஇல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச்செய்தி அறிந்து நேரில் வந்து கலந்து கொண்டு உதவிகள் செய்தோருக்கும் தொலைபேசி மூலம், இணையம் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், குறிப்பாக மலர் வலையம் சாத்தியும், துண்டுப்பிரசுரம் வெளியிட்டும், பதாகை கட்டியும் அஞ்சலி செலுத்திய கமநல அபிவிருத்தித் திணைக்களம் (யாழ்ப்பாணம்), கமநல சேவைகள் நிலையம் (சாவகச்சேரி) உத்தியோகத்தர்களுக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

கல்லடி ஒழுங்கை,
சாவகச்சேரி.
(C 219) (22,18)
குடும்பத்தினர்

# ஆபத்தில் உயிர்..!

## அழியும் இனங்கள்.!


**கூட்டி எட்டுக்கால் பூச்சி** (Poecilotheria metallica)
உலோக எட்டுக்கால் பூச்சி அல்லது மயில் எட்டுக்கால் பூச்சி எனப் பல பெயர்கள் கொண்டு அழைக்கப்



படுகின்ற இந்த எட்டுக்கால் பூச்சியானது இரும்பு நீல நிறத்தில், ஓரேஞ் மஞ்சள், கறுப்பு வெள்ளை திட்டு களைக் கொண்டது.


இவை முதன் முதலில் உதகமண்டலத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாலேயே கூட்டி எட்டுக்கால் பூச்சிஎன்ற பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது. இவற்றின் குஞ்சுகள் மிகச் சிறியதாகஇருப்பதால் அழியும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளது. தென்னிந்திய மலைக் காட்டுப் பகுதிகளில் வாழ்கிறது. இந்தியாவில் மட்டுமே இந்த எட்டுக்கால் பூச்சி இருக்கிறது. செல்லப் பிராணிகள் விற்பனைக்கான, வளர்ப்புக்கான கடத்தலில் அதிக விலை கொடுத்து வாங்கப்படும் எட்டுக்கால் பூச்சி வகையாக இது காணப்படுகிறது.

**தேரைத் தோல் தவளை** (Indirana phrynoderma)
கடல் மட்டத்திலிருந்து 500 மீற்றருக்கு மேற்பட்ட பகுதியில் வாழக்கூடியது. தோலின் மீது மரு, கழலை, சுரப்பிகளுக்கான மடிப்புகள் போன்றவற்றை முதுகுப் பகுதியில் கொண்டுள்ளதால் தேரைத் தோல் தவளை என்று அழைக்கப்படுகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடரில் உள்ள ஆனைமலை பகுதியில்காணப்படுகிறது.




தொடர்ச்சியான காடழிப்பு, விறகு சேகரித்தல் போன்ற காரணங்களால் ஏற்படும் வாழிட அழிவுகள் இவற்றின் இருப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

**கிரெய்ட் புதர் தவளை** (Raorchestes griet)
இந்த சிறிய வகையான புதர்த் தவளைகளின் மூக்கு முதல் எச்சமிடும் பின்வாய் வரையிலான நீளம் என்பது 22.2 சென்ரி மீற்றர்களாகக் காணப்படுகிறது. இந்தத் தவளை கடல் மட்டத்தில் இருந்து 600 தொடக்கம் ஆயிரத்து 800 மீற்றர் உயரமான பகுதியில்தான் வாழ்கின்றன. தேயிலை, தைலமரத் தோட்டங்களால் காடு அழிக்கப்படுவதும் வாழிடம் துண்டாடப்படுவதுமே இவற்றின் அழிவுக்குக் கான காரணமாகக் கூறப்படுகிறது.



**பொன்முடி பெரிய புதர்த் தவளை** (Raorchestes ponmudi)
புதர்த் தவளைகளில் பெரியது. மூக்கு முதல் எச்சமிடும் பின்வாய் வரையிலான நீளம்



என்பது 4 சென்ரி மீற்றர். இந்தியாவின் கோவை மாவட்டம் ஆனைமலை மற்றும் வால்பாறை பகுதிகளில் இவை வாழக் கூடிய்வை என சொல்லப்படுகிறது.

**ஆனைமலை பறக்கும் தவளை** (Rhacophorus pseudomalabaricus)
கடல் மட்டத்தில் இருந்து ஆயிரம் மீற்றர் உயரத்துக்கு மேற்பட்ட மேற்குத் தொடர்ச்சி மலைத்



தொடரின் தெற்குப் பகுதிகளில் உள்ள மழைக் காடுகளில் மட்டுமே இவை வாழ்கின்றன.


காரைநகர்
கிழவன்காடு கலாமன்றம் நடத்தும்
**தெய்வீகக் கலையரங்கு**
இடம்:- கீழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.
காலம் :- 05.01.2017 வியாழக்கிழமை, பிற்பகல் 5.00 மணி
நிகழ்ச்சி நிரல்:-
*வேதபாராயணம் *திருவாசகம் ஓதல் *இசைக்கச்சேரி,
*சொற்பொழிவு - 'இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான்',
* புஸ்பாஞ்சலி *மிருதங்க இசை *அரங்க ஆற்றுகை
**சிறப்புப் பட்டிமண்டபம்**
' திருவாசகத்துள் விஞ்சி நிற்பது'
தத்துவ அறிவே! — திரு.செ.செந்தூர்செல்வன், திரு.T.கருணாகரன், திரு.இ.சர்வேஸ்வரா
பக்தி உணர்வே! — திரு.வே.சிவராசா, திரு.பரா.ரமேஸ், திரு.ந.ஐங்கரன்
நடுவர்:- சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல்
* நன்றியுரை
குறிப்பு:- நிகழ்வுக்கான இலவச போக்குவரத்து சேவை யாழ்.கிளையிலிருந்து (இல.11, முதலாவது கஸ்தூரியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம்) பிற்பகல் 4.15 மணிக்கு ஆரம்பமாகும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.
(சி/27561)(1,18)



**SRINIVASA TRANSPORT**
கட்டடப்பொருட்கள் விநியோகிப்போர்
SRINIVASA TRANSPORT
யாழ் நகரில்.....!
கட்டடப் பொருட்களுக்கான மிகச் சிறந்த தெரிவு
> 3/4" சல்லி கற்கள் (36,500/-)
> 1" சல்லி கற்கள் (32,500/-)
> 1½" சல்லி கற்கள் (31,500/-)
> "ABC" வகைகள் (31,000/-)
> "4X4" அத்திவாரக் கற்கள் (30,000/-)
> கருங்கல் சிப்ஸ் வகைகள் (29,000/-)
> கருங்கல் டஸ்ட் வகைகள் (24,000/-)
மேற்குறிப்பிட்ட விலைகள் யாழ் நகரிலிருந்து 7KM க்கு உட்பட்டவை
தொடர்பு எண்களை பதிவேற்றிக்கொள்ளுங்கள்
0777 279179 | 075 9779179
facebook.com/transportsrinivasa
www.transportsrinivasa.com
89/A, Soosaipillayarkulam Road, Vavuniya.



**மரண அறிவித்தல்**
**திருமதி வள்ளியம்மை வைத்திலிங்கம்**



பிறப்பு 1927.06.12 இறப்பு 2017.01.02

யாழ். காரைநகர், மணற்காடு அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், பிறவுண் வீதி, முதலாம் ஒழுங்கை கொழும்பு வெள்ளவத்தை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை வைத்திலிங்கம் 02.01.2017 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவரான செல்லையா வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும் சிவயோகத்தின் அன்புச் சகோதரியும் மாணிக்கவாசகர், நடராஜா, பாலரட்ணசிங்கம், சரஸ்வதி, சண்முகவடிவேல், மகேஸ்வரி, நாகேஸ்வரி, விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் கமலாதேவி, பவானி, சத்தியபாமா, யோகநாதன், சுபாசினி, விவேகானந்தா, ராஜ்குமார், மோகனலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் சுரேஸ்குமார், சுசிகலா, சித்திரா, ரஜனிகாந், உமாசுகி, சிவானி, தாரணி, சிவசங்கரன், அருள்குமரன், சந்திரகுமார், பிரதீப், தவக்குமார், இந்திரகுமார், யசோதா, ராஜ்குமார், ரஞ்சிதா, கோகுலன், கலைமகள், மணிமேகலா, திருமகள், ஸ்ரெபன், சபதினி, சபீனா, சர்வீன், செரோமி, சர்ச்சுன், கீர்த்திகா, சந்திகா, வேதிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் குரதீசன், யூட், ரூபன், லிங்கன், ஆரியா, சகானா, ரம்மியா, சந்தோஷ், அஞ்சலி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் 05.01.2017 காலை 9 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளின் பின்னர் பி.ப 2.00 மணியளவில் தகனக் கிரியைகளிற்காக கல்கிசை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
தகவல்:
குடும்பத்தினர்.
(C 216) (12,17,18,)
மகேஸ்வரி : 011 236 1633, 077 521 7772



**Tvகள் மலிவு விற்பனை**
மிகமிக மலிவு விலையில் Sony wega Tvகள் 14"-6,000/=, 21"-10,000/= முதல் 29"-15,000/= முதல L.G-21"-9,500/= விற்பனைக்கு உண்டு.
சொனி ரேட் சென்ரர் (கொமர்சல் வங்கி எதிரில்) 56, K.K.S வீதி, சுன்னாகம்.
077 044 0570



**பணிப்பெண் தேவை**
கந்தர்மடம் பகுதியில் உள்ள 3 பேர் கொண்ட குடும்பத்துக்கு 35 வயதுக்கு மேற்பட்ட வீட்டுப்பணிப்பெண் தேவை.
077 361 8930/ 021 222 8805



**DIPLOMA IN NURSING (02 years)**
Holy Cross School of health Science
விண்ணப்ப இறுதித் தினம்: 30.01.2017
க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்கள் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பங்களை திருச்சிலுவை தாதியர் பாடசாலை . இல.767/4, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
பணிப்பாளர்
021 300 1102, 077 115 9391



**காணி விற்பனைக்குண்டு**
சாவகச்சேரி நுணாவில் A-9 வீதியிலிருந்து வடக்காக (100m) நல்ல சூழலில் அமைந்துள்ள நன்னீர் கிணற்றுடன் கூடிய 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பாடசாலை, தபாற்கந்தோருக்கு அருகில்.
தரகர் தேவையில்லை.
(J/7359) (14,17,18)
தொடர்பு : 077 844 9388



**பாஷாண உத்வாசன சபிண்டீகரண அழைப்பு**



அமரர் **பாலசுந்தரம் சிவானந்தன்**
அவர்களின் பாஷாண உத்வாசனம் (கல் எடுப்பு) இன்று (04.01.2017) புதன்கிழமை நடைபெறும். நாளை (05.01.2017) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் சபிண்டீகரணம் நடை பெற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து எமது குடும்பத் தலைவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.
'சாந்தினி வாசா' மேதர் லேன், மானிப்பாய். 077 175 2717
குடும்பத்தினர்.

## எம்.பியாகிறார்...

லாமில் நடைபெற்றது. கட்சியின் செயலாளர் பதவி தொடர்பில் ஹசனலியுடன் ஏற்பட்ட பிரச்சினையைச் சுமூகமாகத்தீர்த்துள்ளேன். ஹச னலிக்கு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்குவதற்கு, சம் மதித்துள்ளேன்.

ஹசனலிக்குத் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்குவதாகக் கடந்த பொதுத் தேர்தல் காலத்திலேயே, நான் உறுதி வழங்கியிருந்தேன் என்பதையும் ஹக்கீம் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்வரும் 9 ஆம் திகதி முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் எம்.ரி. ஹசனலி, நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றுக் கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அட்டாளைச்சேனைப் பிரதேசத்திற்குத் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்குமாறு அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த உயர்பீட உறுப்பினர்கள் கோரிக்கைகளை முன்வைத்தபோதும் அமைச்சர் ஹக்கீம் ஏற்றுக்கொள்ளவில்லை. எதிர்காலத்தில் தான் அதனை வழங்க நடவடிக்கை எடுப்பேன் என்று கூறியுள்ளார்.

அட்டாளைச்சேனைக்குத் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை முஸ்லிம் காங்கிரஸ் கட்டாயம் வழங்கவேண்டும் என்று அட்டாளைச்சேனை ஜும்ஆப் பள்ளி வாசலில் கடந்த சனிக்கிழமை தீர்மானம் நிறைவேற்றியதுடன் வழங்கப்படாதவிடத்து முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர்பீடத்தில் உள்ள அட்டாளைச்சேனை பிரதேசத்தின் 6 உயர்பீட உறுப்பினர்களும் தங்களது பதவிகளை ராஜினாமாச் செய்யவேண்டும் என்றும் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (த-5)

## குழப்பம்...

உள்ள ஹொரவ பொத்தானையில், புத்தாண்டை முன்னிட்டு டிசெம்பர் 31 ஆம் திகதி இரவு இசை நிகழ்ச்சி இடம்பெற்ற போது இரண்டு குழுக்களுக் கிடையில்மோதல் நடந் தது. மோதலுடன் தொடர்புடைய வர்கள் என்ற சந்தேகத்தில், 10 பேரை பொலிஸார் கைது செய்திருந்தனர். அவர் களில் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரும் அடங்கியிருந்தார்.

கைது செய்யப்பட்டிருந்த இராணுவச் சிப்பாய் நேற்றுமுன்தினம் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார். தமது இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஹொரவப்பொத்தானை இராணுவ முகாமைச் சேர்ந்த 5 ஆவது கஜபா படைப்பிரிவு இராணுவத்தினர் நகரில் இரண்டு இடங்களில் துப்பாக்கிச் சூடு நடத்திக் கலகம் விளைவித்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில், 16 இராணுவத்தினர், இராணுவப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர். ஹொரவப்பொத்தானை இராணுவ முகாமின் கட்டளை அதிகாரியான லெப்டினன்ட் தர அதிகாரி உடனடியாகவே அங்கிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இராணுவ முகாமில் பணியாற்றிய அனைத்துப் படையினரும், வேறு முகாம்களுக்கு உடனடியாக மாற்றப்பட்டுள்ளனர். இராணுவப் பொலிசாரின் விசாரணைகளின் பின்னர், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொசான் செனிவிரத்ன தெரிவித்தார். (த-5)

## அமெரிக்காவிடம்...

கப்பிரத மர் ரணில் விக்கிரமசிங்க முயற் சித்து வருவதாகப் பொது எதிரணி தெரிவித்துள்ளது. பொரளையில் அமைந்துள்ள சிறி வஜிர சர்மா பௌத்த மத்திய நிலையத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்தாவது:

மீளமுடியாத நிதிப் பிரச்சினையை இலங்கை எதிர்கொண்டுள்ளது. அதனை ஈடுகட்டுவதற்காகத் தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு கடன் தொகையைப் பெற்றுக்கொள்ளத் தீர்மானித்துள்ளது. கடன் பெறுவது தொடர்பிலான வர்த்தமானி அறிக்கையைத் தேசியக் கொள்கை வகுப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதி வெளியிட்டிருந்தது.

அமெரிக்காவிடம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாக பெற்றுக் கொள்ளவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. நிலையான, நிலையற்ற வட்டிவீதத்திலோ அல்லது 3 வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட கடன் கால எல்லையில் கடன் வழங்க முன்வரும் நிறுவனங்கள் விண்ணப்பிக்க இந்த அரசு சந்தர்ப்பம் வழங்கியுள்ளது.

1949 ஆம் ஆண்டு நிதிச் சட்டத்தின் அடிப்படையில் மத்திய வங்கியின் அரச கடன் திணைக்களமே கடன்களைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாடுகளை முன்னெடுக்கும். இந்தக் கடன் பிரிவால் வெளியிடப்பட்ட அறிக்கைக்கமைய 2016 ஆம் ஆண்டின் டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதி 45 பில்லியன் ரூபாவை அதிக வட்டிவீதத்துக்கு (12சத வீதம்) இந்த அரசுக்குப் பெற்றுக் கொடுத்துள்ளது. வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளிநாட்டுக் கடன் பிரிவைத் தனக்கு கீழ் கொண்டு வந்துள்ள பிரதமர் விக்கிரமசிங்க, அமெரிக்காவிடம் அதிக வட்டி வீதத்துக்கு 1 பில்லியன் டொலரைப் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

மத்திய வங்கியின் பிணைமுறி விவகாரத்தில் தொடர்புபட்ட அதிகாரிகள் பிரதமரின் நிழ லின் கீழ் மீண்டும் இந்தக் கடன் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளனர். ஜனாதிபதி தொடக்கம் அனைவரும் மத்திய வங்கியில் பிணைமுறி விவகாரத்தில் மோசடி இடம்பெற்றதாக ஒப்புக்கொள்ளும் நிலையில் இந்த அதிகாரிகள் பிரதமரின் கீழ் தமது தரகுச் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளார்களா? என்ற சந்தேகம் காணப்படுகிறது – என்றார். (த-5)

## முஸ்லிம்கள்...

இருந்தார். சிங்கள பௌத்த அடிப்படைவாத அமைப்பான பொது பலசேனா இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளது.

பொது பலசேனாவின் நிறைவேற்று அதிகாரி டிலந்த விதானகே இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த ராஜபக்ச அரசில் இருந்தவர்களே அளுத்கமவில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் பெப்பிலியானவில் முஸ்லிம் வர்த்தகரின் பசன் பக் ஆடையகம் மீது பௌத்த பிக்குகள் நடத்திய தாக்குதல்களின் பின்னணியில் இருந்தனர்.

இந்தச் சம்பவங்களின் பின்னணியில் மகிந்த ராஜபக்ச அரசு இருந்ததால் தான், குற்றவாளிகள் எவரும் கைது செய்யப்படவில்லை. மகிந்த ராஜபக்ச கண்ணாடி வீட்டுக்குள் இருந்து கல் எறியக்கூடாது. மகிந்த ராஜபக்ச தனது வீடுகள், கார்கள், குடும்பத்தினர், தனது பாதுகாப்புப் பற்றி மட்டுமே பேசுகிறார் – என்றார். (த-5)

## வடக்கு – கிழக்கு...

துள்ள வடக்கு – கிழக்குப் பிரதேசங்களில் உள்ள பௌத்த விகாரைகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு முப்ப டையினரின் பங்களிப்புடன் சிறப்பு நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பௌத்த விகாரைகளின் அபிவிருத்திக்கு நன்கொடை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. குறைந்த வசதிகளையுடைய விகாரைகளின் அபிவிருத்திக்கு பௌத்த மறுமலர்ச்சி நிதியத்தின் கீழ் 107 மில்லியன் ரூபா பகிர்ந்தளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார் என, ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பௌத்த சாசனத்தின் மேம்பாட்டுக்காக அனைத்துக் கடமைகளையும் நிறைவேற்றுவதற்கு தற்போதைய அரசு அர்ப்பணிப்புடன் உள்ளது. இலங்கைத் தாய்நாட்டைச் சிறந்த நாடாகக் கட்டியெழுப்புவதற்கு மகா சங்கத்தினர் வழங்கும் தலைமைத்துவத்தை நன்றியுடன் நினைவு கூருகின்றேன். மூன்று தசாப்தகாலப் போரின் காரணமாக அழிவடைந்துள்ள வடக்கு – கிழக்குப் பிரதேசங்களில் உள்ள பௌத்த விகாரைகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு முப்படையினரின் பங்களிப்புடன் சிறப்பு நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. பௌத்த விகாரைகள் உள்ளிட்ட தொல்பொருள் முக்கியத்துவமிக்க இடங்களைப் பாதுகாப்பதற்குச் சிவில் பாதுகாப்புப் படையினரின் பங்களிப்புடன் சிறப்பு நிகழ்ச்சித்திட்டத்தை இந்த ஆண்டு முதல் ஆரம்பிப்பதற்கு ஆலோசனை வழங்கியுள்ளேன் – என்றார். (த-5)

## வடக்கு...

பதில் முதலமைச்சராக மூன்று வாரங்களுக்கு, விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேச ன்நியமிக்கப்பட்டார். வடக்கு மாகாண ஆளுநர் முன்னிலையில் நேற்றுச் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்டார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், பிரிட்டனுக்கும் அதன் பின் னர் கனடாவுக்கும் செல்லவுள்ளார். மூன்று வாரங்களுக்கு அவர் நாட்டில் இருக்கமாட்டார். விக்னேஸ்வரன் வெளிநாடு செல்லும் சந்தர்ப்பங்களில் வழமையாக, கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவே பதில் முதலமைச்சராக நியமிக்கப்படுவார்.

கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவும் வெளிநாடு செல்வதால் விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசனுக்குப் பதில் முதலமைச்சர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில், ஆளுநர் ரெஜினோல்ட் கூரே முன்னிலையில் நேற்றுக் காலை 11.45 மணிக்குச் சத்தியப்பிரமாணம் செய்து ஐங்கரநேசன் பதில் முதலமைச்சராகப் பதவியேற்றுக் கொண்டார். (த-5-8-106)

## 2017இல்...

காரணமாக மாவட்டத்தை இந்த ஆண்டு வறட்சி மாவட்டமாக அறிவிக்கவேண்டும் என்று விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் மாவட்டச் செயலரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.மாவட்ட விவசாய அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்றைய தினம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. மேற்படி கோரிக்கை விவசாய சங்கங்களினால் கூட்டத்தில் முன் வைக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் விவசாய சங்கப் பிரதிநிதிகள் தமது கோரிக்கை தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சியில் இந்த முறை மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை அழிவடைவதன் காரணமாக மாவட்டத்தை இந்த ஆண்டு வறட்சி மாவட்டமாக அறிவிக்கவேண்டும். விவசாயிகள் இழந்ததில் ஒரு பகுதியையாவது பெற்றுக்கொள்ள முயற்சிக்கலாம். பருவம் தப்பிய மழையினாலும் தற்போது மழையின்றித் தொடர் வெப்பம் நிலவுவதாலும் வயல்கள் அழிவடைகின்றன.

இனியும் மழை வீழ்ச்சி கிடைக்காத சந்தர்ப்பத்தில் பெரிய அழிவைச் சந்திக்க நேரிடும். மேற்படி காரணங்களை முன்னிட்டு எமது மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க மாவட்டச் செயலர் நடவடிக்கை எடுக்கவேண்டும் – என்றனர்.

மாவட்டச் செயலர் பதிலளிக்கையில், மாவட்டத்தில் நிலவும் வறட்சி தொடர்பிலும் வயல்களுக்கு ஏற்படும் அழிவுகள் தொடர்பில் கண்காணித்து வருகின்றோம். இது தொடர் பாக ஆய்வு செய்வதுடன் இனிவரும் காலத் திலும் கண்காணித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு அதற்குரிய திணைக்களங் களுக்கும்அனுப்பிவைக்கப்படும்-என்றார். (த-5-101)

## கட்டளை...

சனைச் செயலணியின் மக்கள் கருத்து அறியும் அறிக்கை, ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதியின் செயலரிடம் கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரசு தற்போது பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது. அவர்கள் வழங்கிய வாக்குறுதிகளையே நிறைவேற்ற முடியாத நிலையில் உள்ளனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, போர்க் குற்ற விசாரணைக்கு பன்னாட்டு நீதிபதிகளை நியமிக்க முடியாது என்று சொல்கின்றார். இலங்கையின் நீதித்துறை மாறியிருக்கின்றது. சுயாதீனமாகியிருக்கின்றது என்று அவர் நினைக்கக் கூடும்.

நடைபெறுகின்ற விசாரணைப் பொறிமுறையை பாதிக்கப்பட்ட தரப்பினர் நம்பகத்தன்மையானது என்று ஏற்றுக் கொள்ள வேண்டும். அதனை அவ்வாறு ஏற்றுக் கொள்வதற்கு பாதிக்கப்பட்ட தரப்பினர் மறுத்தால், என்ன நோக்கத்துக்காக அந்தப் பொறிமுறை அமைக்கப்பட்டதோ அது அதன் நோக்கத்தை அடைந்து கொள்ள முடியாது. இராணு வீரர்கள் பலர் போர்க்குற்ற விசாரணை தொடர்பில் பயப்படுகின்றனர். இரண்டு பிரிவாக நடந்தவற்றை பிரிக்க முடியும். பாலியல் குற்றங்கள், சரணடைந்தவர்களைக் கொலை செய்த குற்றங்கள் ஒரு புறம். மற்றையது போரை நடத்திச் சென்றமை மற்றும் அதன்போதான குற்றங்கள். இதில் பாலியல் – சரணடைந்தவர்களை கொலை செய்த குற்றங்களுக்கு, அதனைப் புரிந்த இராணுவ வீரர்களே பொறுப்புக் கூற வேண்டும். போரை நடத்திச் சென்ற மற்றும் அதன் போது நடந்த குற்றங்களுக்கு, போருக்கான கட்டளைகளை வழங்கிய வர்கள்தான் பொறுப்புக் கூற வேண்டும். களத்தில் நின்றவர்கள் கட்டளைகளைத்தான் நிறைவேற்றினார்கள். கட்டளைகளை வழங்கியவர்களுக்கு எதிராகத்தான் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.நாங்கள் நீதியைத்தான் கோருகின்றோம். பழிவாங்குவதற்கு முயற்சிக்கவில்லை – என்றார். (வ-5)

## மக்கள்...

நேரத்திலேயே இந்தத் தகவல் தெரியப்படுத்தப்பட்டது. இதனால், ஜனாதிபதியின் செயலாளரிடம் அறிக்கை கையளிக்கப்பட்டது.

நல்லிணக்கப் பொறிமுறையை நிறுவுவதற்காக ஐ.நா. மனிதவுரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் முக்கிய நான்கு அம்சங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் மக்கள் கருத்துகளைக் கோருவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் நல்லிணக்கச் செயலணி நியமிக்கப்பட்டது. இதில் 11 பேர் அங்கம் வகிக்கின்றனர். செயலணியின் தலைவராக சட்டத்தரணியும் மனிதவுரிமை ஆர்வலருமான மனோரி முத்தெட்டுகமகேவும், பொதுச் செயலாளராக கலாநிதி பாக்கிய சோதி சரவணமுத்தும் நியமிக்கப்பட்டிருந் தனர்.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் திகதி இந்தச் செயலணி உருவாக்கப்பட்டிருந்தாலும் செயற்பாடுகள் மார்ச் மாதத்தின் பிற்பகுதியிலேயே ஆரம்பிக்கப்பட்டன. வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் அனைத்து பாகங்களிலும் நேரடியாகச் சென்று மக்களின் கருத்துகளைக் கோரி அறிக்கையை தயாரித்தது.

அறிக்கை கையளிப்புக்காக பல தடவைகள், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேரம் கோரப்பட்டன. நேரம் ஒதுக்கப்படுவதும் இறுதி நேரத்தில் ஒத்திவைக்கப்படுவதுமாகவே இருந்தன. கடந்த மாதம் 21ஆம் திகதி கையளிக்கப்பட இருந்தது. இறுதி நேரத்தில் ஒத்தி வைக்கப்பட்டது. இதனையடுத்து மேற்படி செயலணி, ஜனாதிபதி மீண்டும் ஒரு தடவை அறிக்கை பெற்றுக் கொள்வதை ஒத்திவைத்தால் அறிக்கை பகிரங்கமாக வெளியிடப்படும் என்று தெரிவித்திருந்தது.

இவ்வாறானதொரு நிலையில் நேற்றைய தினம் அறிக்கை கையளிப்புக்கான நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஜனாதிபதி மைத்திரிபால நிகழ்வில் பங்கேற்பார் என்று தெரிவிக்கப்பட்டிருந்த போதும் இறுதி நேரத்தில் அவர் வருகை தரமாட்டார் என்ற தகவல் அவரது செயலாளரினால் அறிவிக்கப்பட்டது. ஜனாதிபதிக்கு திடீர் சுகவீனம் என்று காரணம் கூறப்பட்டது.

இந்த நிகழ்வில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், அமைச்சர்களான டி.எம்.சுவாமிநாதன் மற்றும் பௌசி, ஜனாதிபதி மற்றும் பிரதமரின் செயலாளர் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். நல்லிணக்கச் செயலணியினால் வெளியிடப்பட்ட அறிக்கையை, ஜனாதிபதியின் செயலர் பெற்றுக் கொண்டார். (வ-5)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# நவசக்தி, விண்மீன் கழகங்கள் அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 4
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமராட்சி அணிகளுக்கிடையிலான குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நவசக்தி 'பி', பலாலி விண்மீன் அணிகள் அடுத்த் சுற்றுக்குத் தகுதி பெற்றன.

ஐக்கியத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் கரவெட்டி நவசக்தி 'பி' அணியை எதிர்த்து நியூட்டன் அணி மோதியது. இரு அணிகளும் மிகையான போராட்டத்தை வெளிப்படுத்தியபோதிலும், கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் நவசக்தி 'பி' அணியின் ஆதிக்கம் மேலோங்கியது. முடிவில் அந்த அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. ஆட்ட நாயகனாக நவசக்தி அணியின் அமல்ராஜ் தெரிவானார்.

தொடர்ந்து நடைபெற்ற பிறிதொரு ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து பொலிகை பாரதி அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய பலாலி விண்மீன் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. ஆட்ட நாயகனாக பலாலி விண்மீன் அணியைச் சேர்ந்த உதயதாஸ் தெரிவானார். (ம-422)


நவசக்தி


விண்மீன்



## கௌரவிக்கப்பட்டார் விஸ்ணுகாந்

யாழ்ப்பாணம், ஜன. 4
மலேசியாவில் நடைபெற்ற தெற்காசிய பாடசாலைகளுக்கு இடையிலான பளு தூக்கும் போட்டியில் கலந்துகொண்டு வெள்ளிப் பதக்கம் வென்ற யாழ். மத்திய கல்லூரியின் மாணவன் விஸ்ணுகாந் கல்லூரிச் சமூகத்தால் நேற்றுமுன்தினம் கௌரவிக்கப்பட்டார்.

கல்லூரியின் அதிபர் எஸ.கே.எழில் வேந்தனின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் விஸ்ணுகாந்தின் பயிற்றுனரான விதனும் கௌரவிக்கப்பட்டார்.

கோலாலம்பூரில் நடைபெற்ற குறித்த போட்டியில் 20 வயதுக்குட்பட்ட பிரிவில் ஒட்டுமொத்தமாக 225 கிலோ பளுவைத் தூக்கியே விஸ்ணுகாந் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தார். (ம-23)

## கலந்துரையாடல்

அச்சுவேலி, ஜன. 4
வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்திலான நடப்பு வருட விளையாட்டுப் போட்டிகள் தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு குறித்த கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. பிரதேச செயலகத்தில் பதிவு செய்த மற்றும் மீள ஒழுங்குபடுத்தல் செய்த விளையாட்டுக் கழகங்களின் சார்பில் இரண்டு பிரதிநிதிகளைக் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-11)

## வலு இழக்காது இந்திய கிரிக்கெட்; பதவி நீக்கப்பட்ட அஜய் கருத்து



இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட அஜய் சிர்கே, இந்திய கிரிக்கெட் தனது வலுவை இழக்காது என்று தெரிவித்தார்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முக்கிய செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மை இருக்கும் வகையில் புதிய நிர்வாகிகள் நடந்துகொள்ள வேண்டும் என்று கடந்த ஜூலை மாதம் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. ஆனால், இந்த உத்தரவுக்கு மதிப்பளிக்காமல் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நிர்வாகிகள் சில முடிவுகளை தன்னிச்சையாக எடுத்தனர், செயற்பட்டனர் என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

இந்த அத்துமீறல்களைச் சுட்டிக் காட்டிய முறைப்பாடு தொடர்பான விசாரணை நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.

மன்றின் உத்தரவை பின்பற்றத் தவறிய இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத் தலைவர் அனுராக் தாக்கூர், செயலாளர் அஜய் சிர்கே ஆகியோரை குறித்த பதவிகளில் இருந்து நீக்கி தீர்ப்பு வழங்கப்பட்டது. இதனையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே சிர்கே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த பதவி நீக்கங்களால் உலக அளவில் இந்திய கிரிக்கெட் சபை தனது வலுவை இழக்காது-தனது உறுதித் தன்மையை என்றும் கொண்டிருக்கும்.

இந்தப் பதவி நீக்கத்தால் எனக்கு எவ்வித வருத்தமும் இல்லை என அஜய் சிர்கே மேலும் தெரிவித்தார். (ம)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 4

**யங்ஸ்ரார் வி.க. கால்பந்தாட்டம்**

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், கஜன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யுனிடைட் 'ஏ' அணியை எதிர்த்து மருதநிலா 'பி' அணி மோதவுள்ளது.

**எவ்.ஏ. கிண்ணத்தில் யாழ். லீக் ஆட்டம்**

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தேசிய ரீதியில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. யாழ். லீக்கில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பாசையூர்சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-422-23)

## நல்லூர் கழகங்களினது கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம், ஜன. 4
நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்துள்ள கழகங்களுக்கு இடையிலான நடப்பு வருடத்துக்கான விளையாட்டு விழா தொடர்பான கலந்துரையாடல் இன்று நடைபெறவுள்ளது.

பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் ஒவ்வொரு கழகங்களின் தலைவர் மற்றும் செயலாளர்களைக் கட்டாயம் கலந்து கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி தெரிவித்தார். (ம-23-422)

# டயமன்ஸ், யங்கம்பன்ஸ் இன்று மோதல்


டயமன்ஸ் அணி



யங்கம்பன்ஸ் அணி

கரணவாய், ஜன. 4
அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரையிறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. குறித்த கழகத்தின் மைதானத்தில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில், வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-422-108)

# குயின்டன் 1,000

டெஸ்ட் அரங்கில் ஆயிரமாவது ஓட்டங்களை நிறைவு செய்தார் தென்னாபிரிக்க அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரரும் இலக்குக் காப்பாளருமான குயின்டன் டி ஹொக்.

இலங்கை - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் தற்பொழுது நடைபெற்று வருகிறது. முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா சகல இலக்குகளையும் இழந்து 392 ஓட்டங்களைப் பெற்றது. குயின்டன் 101 ஓட்டங்களைக் குவித்தார். அவர் 41 ஓட்டங்களை எடுத்திருந்த பொழுது டெஸ்ட் அரங்கில் தனது ஆயிரமாவது ஓட்டங்களை நிறைவு செய்தார். இந்த மைல் கல்லை எட்ட குயின்டனுக்கு 23 இன்னிங்ஸ்கள் (14 ஆட்டங்கள்) தேவைப்பட்டன. (ம)




# வாழ்க்கை படமாகுமென்று ஒருபோதும் எண்ணவில்லை

தனது வாழ்க்கை திரைப்படமாக எடுக்கப்படும் என்று ஒருபோதும் எண்ணவில்லை என்று தெரிவித்தார் பரா ஒலிம்பிக் தொடரில் தங்கப் பதக்கம் வென்ற தமிழ்பேசும் வீரர் தங்கவேலு மாரியப்பன்.

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் கடந்த வருடம் பரா ஒலிம்பிக் தொடர் நடைபெற்றது. இந்தியாவில் இருந்து கலந்துகொண்ட தமிழ்நாட்டு வீரர் தங்கவேலு மாரியப்பன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். இதனையடுத்து அவரது வாழ்க்கை படமாக எடுக்கப்படுகிறது. ஐஸ்வர்யா தனுஷ் படத்தை இயக்குகிறார். இதனையடுத்து நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மாரியப்பன் இவ்வாறு தெரிவித்தார்.

"எனது வாழ்க்கையைத் தழுவி எடுக்கப்படும் இந்தப் படம் கிராமப்புறப் பின்னணியில் வளர்ந்த இளைஞர்களை ஈர்க்குமானால்; அதைவிட மகிழ்ச்சி அளிக்கும் விடயம் வேறெதுவும் இருக்க முடியாது" என மாரியப்பன் மேலும் தெரிவித்தார். (ம)



# ரி–20 ஆட்டத்தில் பங்களாதேஷை பதற்றமின்றித் தோற்கடித்தது நியூசி.

பங்களாஷதேக்கு எதிரான முதலாவது ரி-20 ஆட்டத்தில் 6 இலக்குகளால் இலகுவான வெற்றியைப் பதிவுசெய்தது நியூசிலாந்து.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களாக கையிஸ் மற்றும் இக்பால். ஓட்டமெதனையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தார் கையிஸ். வீழ்த்தியவர் ஹென்றி. இக்பாலை வெளியேற்றினார் வீலர். 28 ஓட்டங்களுக்கு ஆரம்ப வீரர்கள் இருவரையும் இழந்தது பங்களாதேஷ்.

மத்திய வரிசையும் பெரிய போராட்டத்தை வெளிப்படுத்தவில்லை. பேர்குசனின் வேகப்பந்து வீச்சில் திணறியது. சபீர் ரகுமான், சகிப் அல் ஹசன் இருவரும் பதின்ம ஓட்டங்களுடனும் சர்கர் ஓட்டமெதனையும் பெறாத நிலையிலும் ஆட்டமிழந்தனர். ஒரு முனையில் நிலைத்து நின்று அரைச்சதம் கடந்தால் முகமதுல்லா. அவருடன் நிலைத்து நின்று இணைப்பாட்டமாக 32 ஓட்டங்களைப் பகிர்ந்தால் மொஸ்டக் கொசைன். இதுவே பங்களாதேஷின் ஆகச் சிறந்த இணைப்பாட்டம். 52 ஓட்டங்களுடன் பேர்குசனிடம் போல்ட் ஆனார் முகமதுல்லா. 141 ஓட்டங்களுக்குக் கட்டுப்படுத்தப்பட்டது பங்களாதேஷ்.

பந்துவீச்சில் பேர்குசன் 3 இலக்குகளையும், வீலர் 2 இலக்குகளையும், ஹென்றி, கிராண்ட்கோம், சான்நெர் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

குப்தில் காயத்தால் விலகியதால் நியூசிலாந்தின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக வில்லியம்சனுடன் களமிறங்கினார் புறூம். 6 ஓட்டங்களுடன் புறூம் ஆட்டமிழந்தார். முன்றோவால் ஓர் ஓட்டத்தையேனும் பெறமுடியவில்லை. அன்டர்சன் 13, பேர்ஸ் 7 என ஏமாற்றினாலும் வில்லியம்சன் நிலைத்து நின்றார். அவருடன் கிராண்ட்ஹோம் இணைய சரிவிலிருந்து மீண்டு வெற்றியை நோக்கிப் பயணித்தது நியூசிலாந்து. அரைச்சதம் கடந்தார் வில்லியம்சன். பிறிதொரு இலக்கை இழக்காமல் இலக்கை அடைந்தது நியூசிலாந்து. 73 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்த வில்லியம்சன் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம)




பன்னாட்டு கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வு பெற்றுள்ள வற்சன், தனது சொந்த நகரான சிட்னியில் நேற்று முறைப்படி பிரியாவிடை பெற்றார். ஆஸ்திரேலியா, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதல் நாள் உணவு இடைவேளையின் போதே அவருக்கான பிரியாவிடை ஏற்பாடுகள் செய்யப்பட்டன. (ம)

# வோர்ணர், ரென்சோவ் சதத்தால் ஒரே நாளில் வலுப்பெற்றது ஆஸி.

பாகிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான வோர்ணர் மற்றும் ரென்சொவ் இருவரினதும் சதத்தால் ஒரே நாளில் 350 ஓட்டங்களுக்கும் அதிகமாகக் குவித்து பலம்பெற்றது ஆஸ்திரேலியா.

தொடரில் மூன்று ஆட்டங்கள். முதல் இரு ஆட்டங்களிலும் ஆஸ்திரேலியா அணி வெற்றிபெற்றது. இதனால் நடைபெற்றுவரும் ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் அது ஆஸ்திரேலியாவிடம் இருந்து கிண்ணத்தைக் கைமாற்றும் படியாக அமையாது. இன்னும் சொல்லப்போனால் சம்பிரதாயபூர்வமாகவே இந்த ஆட்டம் நடைபெறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக ரென்சொவ் மற்றும் வோர்ணர் இருவரும் களமிறங்கினர். ஆமிர், இம்ரான் கான், ரியாஸ் கூட்டணியை எதிர்த்து தனது ஆதிக்கத்தை மிகையாகவே நிலைநாட்டியது ஆஸ்திரேலியாவின் ஆரம்ப இணை. இருவரும் அரைச்சதம் கடக்க இலக்குச் சரிவில்லாமல் 100 ஓட்டங்களை ஆஸ்திரேலியா எட்டியது. தொடர்ந்தும் பவுண்டரிகளை அடுக்கி சதம் கடந்தார் வோர்ணர். சதத்துக்காக அவருக்கு வெறும் 78 பந்துகளே தேவைப்பட்டன. வெள்ளை உடையில் ரி-20 ஆட்டத்தை அரங்கேற்றினார் வோர்ணர். 113 ஓட்டங்களுடன் வோர்ணருக்கு முடிவு கட்டினார் வக்காப் ரியாஸ்.



கவாயா 13 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். ரென்சொவ்வும் தனது சதத்தை நிறைவு செய்தார். சிமித்தை வீழ்த்தினார் யாசிர் ஷா. சிமித் ஆட்டமிழந்த போது ஆஸ்திரேலியா 244-3 என்றிருந்தது. ரென்சொவ், ஹான்ட்ஸ்கொம் இணை தொடர்ந்தும் தாக்குப் பிடித்தது. 150 ஓட்டங்களை நிறைவு செய்தார் ஹான்ட்ஸ்கொம். நாள் முடிவில் ஆஸ்திரேலியா 365-3 என்றுள்ளது. ரென்சொவ் 167 ஓட்டங்களுடனும், ஹான்ட்ஸ்கொம் 40 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

ஆட்டத்தின் முதல் நாளிலேயே 4 க்கும் அதிகமான சராசரியில் மிகப் பெரியளவு ஓட்டங்களைக் குவித்துள்ள காரணத்தால் ஆஸ்திரேலியா ஆதிக்கம் செலுத்தக்கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன. (ம)




# அனுராத் நீக்கத்துக்கு பிசன் சிங் பேடி வரவேற்பு

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைமைப் பதவியிலிருந்து அனுராத் தாக்கூரும் செயலாளர் பதவியிலிருந்து அஜய் சிர்கேயும் நீக்கப்பட்டமையை முன்னாள் வீரர் பிசன் சிங் பேடி வரவேற்றார்.

இந்திய கிரிக்கெட் சபையில் வெளிப்படைத்தன்மை இல்லை என்று தெரிவித்து அதன் தலைவர் மற்றும் செயலாளரை நேற்றுமுன்தினம் பதவி நீக்கம் செய்தது இந்திய உயர் நீதிமன்றம். இதனையடுத்தே பிசன் சிங் பேடி இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய கிரிக்கெட் என்பது சிலர் மட்டும் சொந்தம் கொண்டாடும் வகையில் மாறியுள்ளது. உச்ச நீதிமன்றத்தின் இந்த முடிவுக்கு நன்றி சொல்லியாக வேண்டும். இந்திய கிரிக்கெட்டுக்கும் அது சார்ந்தோருக்கும் இது ஒரு பாடமாக அமையும் என்று பிசன் மேலும் தெரிவித்தார். (ம)

# 110 ஓட்டங்களில் சுருட்டப்பட்டது இலங்கை பிளன்டர், ரபாடா கூட்டணியின் எழுச்சியால்



இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் தடுமாற்றமான ஆரம்பத்தை எதிர்கொண்டிருந்த போதிலும் எல்கர், குயின்டனின் சதங்களால் சரிவிலிருந்து மீண்டது தென்னாபிரிக்கா. அதே நேரம் இலங்கை அணி தோல்வியை நோக்கி நடைபோட ஆரம்பித்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை, முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதல் நாள் முடிவில் தென்னாபிரிக்கா 297-6 என்ற நிலையில் இருந்தது. குயின்டன் 68 ஓட்டங்களுடனும் அப்பொட் 16 ஓட்டங்களுடன் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். மேலதிகமாக ஓர் ஓட்டத்தையேனும் பெறமுடியாத நிலையில் ஆட்டமிழந்தார் அப்பொட். வீழ்த்தியவர் கேரத். 20 ஓட்டங்களுடன் பிளன்டரை வெளியேற்றினார் குமார. மறுமுனையில் தனது சதத்தை நிறைவுசெய்தார் குயின்டன் டி ஹொக். 101 ஓட்டங்களுடன் குயின்டனும் லகிருவிடம் ஆட்டமிழந்தார். இது லகிரு குமாரவின் ஐந்தாவது இலக்காகும். 392 ஓட்டங்களில் சகல இலக்குகளையம் இழந்தது தென்னாபிரிக்கா.

பந்துவீச்சில் லகிரு குமார 6 இலக்குகளையும், கேரத், லக்மல் இருவரும் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர். பதிலுக்குக் களமிறங்கிய இலங்கைக்கு கருணாரத்ன மட்டுமே முன்வரிசையில் பதின்மத்தைத் தாண்டினார். கௌசால் சில்வா, குசல் மென்டிஸ், தனஞ்சய டி சில்வா, மத்தியூஸ், சந்திமல் என்று எவரும் இருபது ஓட்டங்களைத் தாண்டவில்லை. மத்தியூஸ், சந்திமல் இருவரும் ரபாடாவின் வேகத்தில் பவிலியனுக்குத் திரும்பியிருந்தனர். தரங்க ஒரு முனையில் நிலைத்து நின்றாலும் மறுமுனையில் கேரத், லக்மல், குமார, பிரதிப் என்ற பின்வரிசையைத் தகர்த்தார் பிளன்டர். 110 ஓட்டங்களில் சுருண்டு முடிந்தது இலங்கை.

பந்துவீச்சில் பிளன்டர், ரபாடா இருவரும் தலா 4 இலக்ககளையும், மகாராஜ் 2 இலக்குகளையும் வீழ்த்தினர். இரண்டாவது இன்னிங்ஸுக்காக களமிறங்கிய தென்னாபிரிக்கா நாள் முடிவில் இலக்குச் சரிவில்லாமல் 35 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. அந்த அணி இதுவரை 317 ஓட்டங்கள் முன்னிலை வகிக்கிறது. (ம)

FRENCH LANGUAGE CENTRE
FLC FOR THE BEST FRENCH FOREVER
பிரெஞ்சு
மொழி வகுப்பு
No. 40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 07.01.17 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி
TP: 021 3202973
ஆரம்பம் 09.01.17 திங்கள் 3.30pm.
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1 Classes.
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 13 . 01 . 1945

மறைவு 06 . 12 . 2016

**அமரர் ஆறுமுகம் திரிலோகஈஸ்வரா**

*புன்னகை பூத்தவும் திருவதனம் - இப்*
*புவிவிட்டு ஈசன் கழலடைந்து*
*திங்களொன்று இன்று ஆனதுவோ - ஐயா*
*ஆறவில்லை இங்கு எம் துயரம்......*
*அன்பான உங்கள் நல்ல (அ)ரவணைப்பு*
*ஆண்டாண்டானாலும் அழிந்திடாது - எம்*
*நெஞ்சம் நிறைந்திட்ட உம் நினைவுடனே*
*தங்கள் ஆத்மசாந்திக்காய் அரனை வேண்டி*

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (04.01.2017) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அத்னைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

66/1, ஆனந்தன் வடலி வீதி,
கொழும்புத்துறை.
(ஜே/7361)(12.18)
*நீங்கா நினைவுகளுடன்*
மகன், மருமகள், பேர்த்தி.

INFORMATION TECHNOLOGY PARK
*Jaffna, Srilanka*
*Under the purview of the*
*Ministry of Telecommunication*
*Digital Infrastrucature*
MPCS Building
127, K.K.S.Road, Jaffna, Srilanka
Office :- 021 222 3641
Fax No :- 021 222 3643
ITP
அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது
JANUARY BATCH
Dip.in Microsoft Office
Dip.in Desktop publishing
Dip.in information Technology
Dip.in Computer Programming
Online Course
Dip.in PC Application & Office Managment
Languages
VB.net PHP
C Sharp Java
Workshops
Internet & e-mail
Webpage Designing & Development
விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் 27.01.2017
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் 28.01.2017
CENTRE FOR INFORMATION TECHNOLOGY
- Executive Officer -

வேலை வாய்ப்பு
கட்டட நிர்மாண வேலைகளுக்கு மேசன். உப ஒப்பந்தகாரர்கள் உடன் தேவை. தகுதியானவர்களுக்கு தொடர்ச்சியான வேலையும் சலுகைகளும் வழங்கப்படுவதோடு கவர்ச்சிகரமான சம்பளமும் வழங்கப்படும்.
(ஜே 7374)(12.18)
076 826 4864, 077 712 0945

பதவி வெற்றிடங்கள் - 2017
யாழ்ப்பாணத்தில் புதிதாக திறந்துள்ள Ds Max நிறுவனத்திற்கு அமெரிக்க நிதி அனுசரணையுடன் பயிற்சிகள் நிரந்தர வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. O/L, A/L படித்த 18 - 30 வயதிற்குட்பட்ட இளைஞர் யுவதிகள் இணைக்கப்படுகின்றனர்.
*விநியோகஸ்தர், மேற்பார்வையாளர், கணக்காளர், வரவேற்பாளர், உதவி முகாமையாளர், முகாமையாளர் பதவி வெற்றிடங்கள் 48 பேருக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. முன் அனுபவம் அவசியமற்றது.
பயிற்சியின் ஊக்குவிப்புத்தொகை (12, 000 - 20, 000)
பயிற்சியின் பின் நிரந்தர வருமானம் 50, 000+
தொடர்பு :
077 700 9820, 077 512 7011
இறுதித்திகதி -04.01.2017 - 12.01.2017 வரை

சிற்றூழியர் தேவை
உதயன் நெல்லியடிக்கிளையில் பணியாற்றுவதற்கு சிற்றூழியர் தேவை.
வடமராட்சியில் வசிப்பவர்கள் மட்டும்.
07.01.2017 மு.ப. 10 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.
நெல்லியடி அலுவலகம்
இல. 55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

யாழில் புதிய பிரிவுகள் ஆரம்பம்
புதிய ஆண்டில் சுயதொழில் ஒன்றைப் பெற்றுக்கொள்ள அரிய சந்தர்ப்பம்.
கையடக்க தொலைபேசி திருத்தும் பாடநெறி
Mobile Phone Repairing Course
திருத்தும் துறையில் 10 வருடத்துக்கும் மேல் அனுபவம் கொண்ட முதல்தர ஆசிரியர் Ganesh Sir அவர்களினால் நடத்தப்படுகின்றது.
January 7,8,9,10 ஆகிய நான்கு நாள்களில் Smart Phone கள் உட்பட அனைத்து Phone களும் பயிற்சியளிக்கப்படும்.
சுயமாக வேலை செய்யும் அளவிற்கு பயிற்சி வழங்கப்படும். குறைந்த முதலீட்டில் உடனடியாக ஆரம்பிக்கக் கூடிய ஒருசுயதொழில்.
பதிவுகளுக்கு முந்துங்கள்.
Softview IT & Computer Academy
No.221, Kandy Road, Jaffna.
(V 188) (14,17,18)
077 747 5783 / 077 425 2201

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை O/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், தொழில் தேடுவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
ஆங்கிலத்தில் ஒரெழுத்தும் தெரியாதவர்கள்கூட மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
பயிற்சியில் இணைவோர் 07.01.2017 வரை பதிவுகளை மேற்கொள்ளமுடியும்
8 பாடப்புத்தகங்கள் மற்றும் Video பாவனை இலவசம்.
SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

பணிநிலை வேண்டுகை
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலத்திரனியல் தளபாட காட்சி அறைக்கு
- Cashier (Part Time & Full Time)
- Showroom Marketing Sales & Executives (Boys) (Computer அனுபவமுள்ளவர்கள்)
- Driver (Heavy Vehicle License) விரும்பத்தக்கது.
ஆர்வமுள்ளவர்கள் சுயவிவரக்கோவையுடன் அலுவலகத்திற்கு சமுகமளிக்கவும். மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
KINGS ELECTRONICS PVT (LTD)
NO.12, Point Petro Road, Jaffna.
021 454 6699

NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. இரு இடத்திலும் மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
A/L 2019
கலை
வர்த்தகம்
தொழில்நுட்பம்
ஆரம்பம் 07-01-2017 சனி 8.00 மணி

அருள் மற்ஸ் அக்கடமி
தரம் 6 முதல் 11 வரையான அனைத்து வகுப்புக்களும் ஆரம்பம்
திகதி: - 04.01.2017
நேரம்: - 3.00 P.m
இராஜேந்திரா வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

Brain Power Institute
Gurunagar (சின்னக்கடை சந்தை அருகில்) Jaffna.
A/L 2019
கலை, வர்த்தக, தொழில்நுட்ப பிரிவுகள்
ஆரம்பம் - 07.01.2017
மாலை 4 மணி
தரம் 4 முதல் O/L, A/L வரையான வகுப்புக்கள் யாவும் சிறப்பாக நடைபெறுகின்றன.
T.P : 021 221 5020
Mobile : 077 977 9770
"கல்வியால் நாம் கல்விக்காகவே நாம்"

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.